www.tamilarangam.net

இரவல் தாயகம்

P'RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIE[illegible] SUR -
- SEINE ; FRANCE

ஏப்ரல்
1992


இரவல்: 2

ஈழ அகதிகள் வெளியேற்றம்

# இலங்கை இனவெறியர்களுக்கு இரையாக்க இந்திய அரசின் சதி

கடந்த சில வாரங்களுக்கு முன் எம்.வி.அக்பர் என்ற அந்தக் கப்பல் அவர்களை ஏற்றிக்கொண்டு சென்னையை விட்டுப் புறப்பட்டது. கப்பலில் ஒதுக்குப்புறத்தில் ஆடு மாடுகளைப்போல் அடைக்கப்பட்ட அவர்களின் முகத்தில் அவர்களுக்கேயுரிய புன்னகையும் மலர்ச்சியும் நீண்டகாலத்திற்கு முன்பே விடைபெற்றிருந்தது. அந்த முகங்களில் அச்சமும் சோகமும் நிரந்தரமாயிருந்தன. கப்பலில் ஏறுவதற்கு முன்பே 6 பேர் பயத்திலேயே வரமறுத்துவிட்டனர். ஒரு பெண்ணுக்கு பயத்திலேயே நெஞ்சு வலி ஏற்பட்டு சென்னை துறைமுக மருத்துவமனையிலேயே சேர்க்கப்பட்டார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்கள் ஏறிய கப்பல் கடலின் நடுவழியில் செல்லும்போதே ரேடியோவில் ஒரு செய்தி ஒலிபரப்பானது.

'திரிகோணமலையில் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் நடைபெற்ற உக்கிரமான யுத்தத்தில் 20 இலங்கை ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். தொடர்ந்து விமானத் தளம் ஒரு வெடிகுண்டால் தகர்க்கப்பட்டது.' இந்த ரேடியோச் செய்தியைக் கேட்டதும் அவர்களின் மத்தியில் இருந்த புய உணர்வு ஆவேசக் குரல்களாக வெடித்தன. 'எங்களை ஏமாற்றாதீர்கள். இலங்கையில் அமைதியில்லை. நாங்கள் அங்கே போக விரும்பவில்லை' என்று கூறிக்கொண்டு கப்பல் தளத்திலேயே



பத்திரிகையாளர்கள் கூட நெருங்க முடியாதபடி கலியாண மண்டபத்தில் சிறை வைக்கப்பட்ட அகதிகள்

கிளர்ச்சியில் இறங்கினர். உடனே அவர்களுடன் சென்றிருந்த தமிழகத்தின் அகதிகள் துறையின் கமிஷனர் ராமதாஸ் என்ற அதிகாரி, 'அமைதியாய் இருங்கள். இப்போது ரேடியோவில் சொன்ன செய்திக்கும் போருக்கும் சம்பந்தமில்லை. கப்பலை விட்டு இறங்கியவுடன் நிலைமை பாதுகாப்பற்று இருந்தால் நான் கண்டிப்பாக இங்கே திருப்பி கொண்டுவந்துவிட உத்தரவாதம் அளிக்கிறேன்' என்று உறுதியளித்தார்.

ஆனால் திரிகோணமலையில் அவர்கள் இறக்கிவிடப்பட்டவுடன் நடந்ததே வேறு. அவர்கள் பக்கவாட்டில் கூட திரும்பிப்பார்க்க முடியாதபடி பலவந்தமாக சுற்றிவளைக்கப்பட்டு திரிகோணமலையில் அனாதரவாக காலியாக பழுதடைந்து கிடந்த ஒரு சில தங்கும் விடுதிகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர். அந்த விடுதிகள் இடையறாது வீசப்படும் குண்டு மழையால் பாதுகாப்புக் கருதி உரிமையாளர்களால் கைவிடப்பட்டவை. மேலும், அவ்விடுதிகள் கூரைகளே இல்லாத சுவர்கள் என்பதைத் தவிர வேறு வசதிகள் இல்லாதவை. முன்பே அவ்விடுதிகளில் தங்கும் தமிழ் மக்களை எந்நேரமும் இனவெறி அரசின் இரகசிய கொலைகாரப் படைகள் கடத்திச் சென்று சர்வசாதாரணமாகக் கொல்வதுண்டு. இத்தகைய விடுதிகளில் கப்பலில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டவர்கள் கட்டாயப்படுத்தி தங்கவைக்கப்பட்டனர். பின்னர் அவர்களின் கூக்குரல்களை, அவர்களின் குழந்தைகள் வீறிட்டு அழும் குரல்களை அலட்சியப்படுத்தியபடி வெளியே வந்தனர் அழைத்துச் சென்ற அதிகாரிகள்.

★ ☆ ★

மேலே கண்ட நிகழ்ச்சியில் கதறித்துடித்தவர்கள் இலங்கைத் தமிழ் அகதிகள். அந்த கல்நெஞ்சக்கார அதிகாரிகளின் அலட்சியத்திற்கு அர்த்தம் - அகதிகள் தானே, குண்டுகளுக்கோ கொலைகார படைகளுக்கோ இரையானால் என்ன என்பதுதான்.

ஒரு முறை, இரு முறையல்ல, இத்தோடு மூன்று முறை இக்கொடூர நிகழ்ச்சி சந்தடியில்லாமல் நடந்து முடிந்துவிட்டது. ஒவ்வொரு கடத்தல் நிகழ்ச்சியிலும் ஏறக்குறைய 700 பேர் வீதமாக இதுவரை மொத்தம் 2,000 அகதிகள் வரை ஏற்றிச் செல்லப்பட்டு, குண்டு வீச்சிற்கு பலியாக்குவதும் இலங்கை பேரினவாத அரசின் கொலைகாரப்படைகளுக்கு காவுகொடுப்பதும் நடந்து கொண்டிருக்கிறது. இந்திய ஆட்சியாளர்கள் மேலாதிக்க வெறியுடன் இலங்கை தமிழ் அகதிகளை துரத்தியடிக்க நீண்டகாலமாகவே திட்டமிட்டு வந்த சதிகளை தற்போது நிறைவேற்றத் துவங்கிவிட்டனர்.

ராஜீவ் கொலையும் - அகதிகளின் வதையும்

1983ன் இலங்கை இனவெறிக் கலவரத்தால் தமிழகத்திற்கு வந்த மொத்த அகதிகள் 2.5 லட்சம் பேர். இவர்களில் 1.25 லட்சம் பேர் வரை தமிழகமெங்கும் 18 மாவட்டங்களில் 192 முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்தனர். முகாம்களில் தங்கியிருப்போரும் வெளியில் உறவினர்களுடன் தங்கியிருப்போரும் பல்வேறு தொழில்களை மேற்கொண்டே தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்தனர். இத்தமிழ் மக்களின் குழந்தைகள் முதல் இளைஞர்கள் வரை தமிழகத்தில் கல்வி நிலையங்களிலேயே கல்வி கற்று வந்தனர். தமிழக மக்கள் தங்கள் சகோதரர்களுக்கு கொடுத்த ஏகோபித்த ஆதரவு, வரவேற்பு, இவற்றின் தாக்கம், முந்தைய மாநில அரசுகள் இலங்கைத் தமிழ் மாணவ மாணவிகளுக்கு கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீட்டுடன், டியூசன் கட்டணமின்றி இலவச கல்வி அளிக்கும்படி வைத்திருந்தது.

இலங்கையில் IPKF ஆக்கிரமிப்புப் படை துரத்தியடிக்கப்பட்டவுடன் தமிழகத்தில் இந்திய இராணுவம் குறித்த பிரமைகள் தகர்ந்தன. ஆயுதப் போராட்டம் குறித்து மதிப்பும் நம்பிக்கையும், தமிழக மக்கள் மத்தியில் துளிர்விடத் துவங்கின. இந்திய ஆட்சியாளர்கள், இனிமேலும் இலங்கைத் தமிழ் மக்கள் தமிழகத்தில் இருப்பது தமது இருப்புக்கே ஆபத்தை உருவாக்கிவிடும் என்பதை உணர்ந்தனர். இச்சூழலில் தான் தமிழகத்தில் ஜெயலலிதா - வாழப்பாடி - பாரதீய ஜனதா போன்ற பாசிசக் கும்பல்களும் அவர்களின் பின்னணியில் பார்ப்பன பத்திரிகைகளும் 'தமிழகத்தில் ஆயுதக் கலாச்சாரம் பரவுகிறது' என்ற பிரச்சாரத்தை முடுக்கிவிட்டனர். இதனால், தமிழ் அகதிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒடுக்கப்பட்டு, அவர்களின் முகாம்கள் திறந்தவெளிச் சிறைச் சாலைகளாக மாற்றப்பட்டிருந்தன. ராஜீவ் கொலைக்குப் பிறகு இதே பாசிசக் கும்பல்கள் ராஜீவ் கொலையையும் இலங்கை அகதிகளையும் தொடர்புபடுத்தி இடைவிடாது செய்த பிரச்சாரம் இலங்கைத் தமிழர்களிடம், எஞ்சியிருந்த அகதி வாழ்க்கையின் கதவுகளையும் அடைத்துவிட்டது.

ராஜீவைக் கொன்றவர்கள் என்று கருதப்பட்டு, இலங்கைத் தமிழ் அகதிகள் போகும் இடங்களிலெல்லாம் போலீஸ் கும்பல் செய்த தொல்லைகளினால் பல இடங்களில் அவர்களுக்கு கூலிவேலை கூட மறுக்கப்பட்டது. கட்டணமில்லாமல் படித்துவந்த இலங்கைத் தமிழ் மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்பட்டுவந்த அனைத்து சலுகைகளும் மறுக்கப்பட்டன. ஜெ. அரசின் தனிப்பட்ட உத்தரவினால் இலங்கைத் தமிழ் மாணவ மாணவியர்களுக்கு கல்வி நிலையங்களில் அனுமதியே மறுக்கப்பட்டது! இதனால் 10,000 ஈழத் தமிழ் மாணவ மாணவியர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது. ஈழத்தமிழர்களுக்கு மருத்துவமனையில்கூட சிகிச்சை தரப்படவில்லை.

வெளியில் வேலையே கிடைக்காத சூழலில் முகாம்களில் 15 நாட்களுக்கு ஒருமுறை ஒரு குடும்பத்தினருக்கு 75 ரூபாய் மட்டுமே கொடுக்கப்பட்டு வந்தது. இத்துயரத்தோடு போலீஸ் கும்பலுக்கு லஞ்சம் தராவிட்டால் LTTE என்று முத்திரை குத்தி தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் சிறையில் தள்ளிவிடும் அபாயம் தமிழ் அகதிகளுக்கு என்றும் இருந்து வந்தது. (இந்த அடிப்படையிலேயே 3000க்கும் மேற்பட்டோர் தமிழக சிறைகளில் தள்ளப்பட்டுள்ளனர்.)

ஜெ. அரசின் பாசிசப் பிரச்சாரத்தினால் வெளியே போனாலோ இலங்கைத் தமிழ் பேசினாலோ சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் நிலையும் உருவாகிவிட்டது. இதனால் இந்நிலையில் இங்கு நரக வாழ்க்கை வாழ்வதைவிட இலங்கையில் செத்துவிடலாம் என்ற மனநிலைக்கு தமிழ் அகதிகள் தள்ளப்பட்டுள்ளனர். இச்சூழலிலும் போகமறுத்த தமிழ் அகதிகள்தான் மிரட்டப்பட்டும் நயவஞ்சகமாக ஏமாற்றப்பட்டும் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

### இலங்கை - இந்திய கூட்டுச் சதி

இலங்கைத் தமிழ் அகதிகளை இப்படி அவசர அவசரமாக வெளியேற்றுவதற்கு இந்திய ஆதிக்கவாதிகள் இலங்கை இனவெறியர்களுடன் செய்துகொண்ட சதித்தனமான பேரமும் ஒரு காரணமாகும். சமீபத்தில் நடைபெற்ற சார்க் மாநாட்டிலும், அதனைப் பின்தொடர்ந்து இலங்கையின் வெளியுறவு அமைச்சரின் இந்திய வருகையின்போதும் இப்பேரம் நடந்துள்ளது.

பின்தங்கிய நாடுகளின் வளர்ச்சிக்கு உதவி என்ற பெயரில் பிரிட்டன், கனடா, அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி, போன்ற ஏகாதிபத்திய நாடுகள் இலங்கைக்கு பெருமளவு கடனுதவி அளிக்க முன்வந்துள்ளன. இந்த நிலையில் அகதிகளை அங்கே அழைத்துக்கொண்டால் அகதிகள் பராமரிப்பு என்ற பெயரில் பெருமளவிற்கு இந்த நாடுகளிடமிருந்து நிதியைப் பெற முடியும் என்று கருதி இலங்கை அரசு இந்திய மேலாதிக்கவாதிகளிடம் பேரம் பேசியுள்ளது. அதே சமயத்தில் இந்த நிதியைக் கொண்டு ஆயுதங்களை வாங்கிக் குவித்து இலங்கைத் தமிழ் மக்கள் மீதும் விடுதலைப் புலிகள் மீதும் பெரும் தாக்குதலை தொடுக்கத் திட்டமிட்டுள்ளது இலங்கை அரசு. ஏற்கெனவே தமிழ் அகதிகள் தமிழகத்தில் இருப்பது புரட்சிகர சூழ்நிலையை உருவாக்கி தமது இருப்புக்கே ஆபத்தை உருவாக்கும் என்பதால் இத்தகைய சூழ்நிலையை இந்திய ஆட்சியாளர்கள் பயன்படுத்திக்கொண்டு இலங்கைத் தமிழர்களை மிருகத்தனமான முறையில் வெளியேற்றத் துவங்கிவிட்டனர்.

இன்னொரு புறத்தில் விடுதலைப் புலிகளின் தலைமையை ராஜீவ் கொலை வழக்கில் ஈடுபடுத்தி பிரபாகரனைப் பிடிக்க பிடிவாரண்டையும் இலங்கையில் வெளியிட்டுள்ளனர். இதனைக் காரணம் காட்டி இலங்கை அரசு ஒத்துழைக்குமென்றால் விடுதலைப் புலிகள் மீது ஒரு போர் தொடுக்க தருணம் பார்த்துக் கொண்டிருக்கின்றனர் இந்திய மேலாதிக்கவாதிகள்.

### மனிதப்பிறவிகளா இவர்கள்?

இலங்கை அரசுடன் திரைமறைவு பேரங்களின் பின்னணியில் மேலாதிக்கவெறியுடனும் இலங்கைத் தமிழ் அகதிகளை வெளியேற்றத் துவங்கியுள்ளனர். அதிலும் பல நயவஞ்சகமான வழிகளைக் கையாண்டுள்ளனர்.

அகதி முகாம்களில் பெரும்பாலான அகதிகளுக்கு ஆங்கிலமே தெரியாத சூழ்நிலையில் திட்டமிட்டே 'நான் விரும்பிச் செல்கிறேன்' என்று எழுதப்பட்ட ஆங்கில படிவத்தில் கையெழுத்து வாங்கியுள்ளனர். இதைப் புரிந்துகொண்டு அகதிகள் கையெழுத்துப்போட மறுத்தபோது, 'ரேசன் கிடையாது, நிதி உதவி கிடையாது. LTTE என்று தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் போட்டுவிடுவோம்' என்று மிரட்டி கையெழுத்து வாங்கியுள்ளனர், இத்தனைக்கும் இலங்கையில் உக்கிரமான போர் நடந்து கொண்டு இருக்கிறது. யாழ்ப்பாணத்திலேயே 7.5 லட்சம் அகதிகள் முகாம்களில் உணவின்றி வாடிக் கொண்டிருக்கின்றனர்.



பக்கவாட்டில் கூட திரும்பி பார்க்க முடியாதபடி அதிகாரிகளால் சுற்றிவளைக்கப்பட்டு திரிகோணமலையில் இறக்கி விடப்படும் ஈழத்தமிழ் மக்கள்.

அவர்களின் உயிருக்கு எவ்வித உத்தரவாதமுமில்லாத சூழ்நிலையே நிலவுகிறது. பல்லாயிரக்கணக்கானோர் பேரினவாத அரசின் கொலைகாரப் படைகளால் கடத்தப்பட்டு கொல்லப்பட்டுள்ளதாக சர்வதேச மனித உரிமைகள் கழகம் மற்றும் ஆசிய கண்காணிப்புக் கழகம் போன்ற மனித உரிமை அமைப்புகள் தெரிவிக்கின்றன. இலங்கையில் நடக்கும் எச்சம்பவங்களும் தெரியாதபடி திட்டமிட்டு இருட்டடிப்பு செய்வதற்காக கடத்தப்படவிருந்த அகதிகளுக்கு எவ்வித நாளிதழ்களும் தரப்படவில்லை. இப்படி இருட்டடிப்பு செய்யப்பட்டு கட்டாயப்படுத்தி வெளியேற்றுவதால் இந்தியாவில் செயல்படும் அய்.நாவின் அகதிகள் நல்வாழ்வு அமைப்பு இத்திட்டத்தில் ஈடுபட முடியாது என்று மறுத்துவிட்டது.

இப்படி இருட்டடிப்பு செய்யப்பட்டு, மிரட்டப்பட்டு, வெளியேற்றப்படும் அகதிகளை தினமலர் 'மகிழ்ச்சியுடன் தாயகம் திரும்புவதாக' என்று எழுதுகிறது. சண்டே மெயில், சண்டே அப்சர்வர் போன்ற ஆங்கிலப் பத்திரிகைகளோ, 'அகதிகள் சரக்கு போய்விட்டது' என்றும், 'பிளேக் நோய் தொலைந்தது' என்றும் எழுதி தமிழினவிரோத வக்கிரத்தை வெளிப்படுத்துகின்றன. மனிதாபிமானம் கிஞ்சிற்றும் இன்றி பேரினவாத கொலைகாரப் படைகளுக்கும் குண்டுகளுக்கும் இரையாக்குவதற்கு தமிழ் அகதிகளைத் தள்ளிவிடும் இந்திய ஆட்சியாளர்களை ஈனப்பிறவிகள் என்றுதானே அழைக்க முடியும்? ✶

கேடயம் (16-29 பெப்ரவரி'92)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கண்ணைக் குத்தும் கை

ராஜம் கிருஷ்ணன்

பெண்ணுக்குப் பெண்ணே எதிரி? மாமியாரே மருமகளைக் கொடுமைப்படுத்துகிறாள்? வரதட்சணைக்காகக் கொலையே செய்கிறாள்!

....மாதர் மாநாட்டில், பெண் அமைச்சர் உரை!...

கொட்டைத் தலைப்பில் இந்த விஷயம் கண்களைப் பறிக்கும் எழுத்தில் பத்திரிகைச் செய்தியாக நெஞ்சில் இடிக்க அறிவுறுத்துகிறது.

'மேடம்? பெண் சிசுக் கொலையை அவ்வளவுக்குச் கண்டனம் செய்து எதிர்க்கிறீர்களே? கொலையை ஆண் பிள்ளையா செய்கிறான்? பெண்ணேதானே செய்கிறாள்? தாயே கொல்கிறாள்; இல்லாட்டி பாட்டி, இல்லாட்டி தாதி...'' என்று ஓர் அம்பை வீசி இந்தப் பத்திரிகை 'நிருபர்' கூட்டம் சமுதாய நீதிக்குக்குரல் கொடுக்கும் பெண்க்ளை மடக்குகிறது.

இந்தப் பத்திரிகைக்காரக் கும்பலுக்கு, எந்தச் சேதியிலும் கவர்ச்சி, விறுவிறுப்பு, கிளுகிளுப்பு வேண்டும். 'பெண்' பற்றிய செய்திகள் இதனாலேயே முக்கியத்துவம் பெற்று விடுகின்றன. இதற்கென்று தனியான 'பாஷை'கள், சங்கேதங்கள், ஆச்சரியக்குறிகள் உண்டு. எந்தப் பெண்கள் மாநாடானாலும்' தவறாமல் வந்து இடம் பற்றிக் கொண்டு தனிப்பத்திச் செய்திகள் வெளியிடுவார்கள். விதிவிலக்குப் பத்திரிகைகள் மிக அபூர்வமாக இருக்கின்றன. ஒரு மாநாட்டில், ஊதியமில்லாமல் உழைக்கும் பெண்களின் நிலை பற்றிப் பேச்சு வந்தது. உழைக்கும் மகளிர் என்று குறிப்பிடப்படுவதனால், உழைக்காத மகளிர் என்று பெருங்கூட்டம் இருப்பதாகக் கொள்ளலாகாது. பொருளாதார மேல் மட்டங்களில் சதை கொழுக்க, மேனி நலுங்காமல் இருக்கும் பெண்களை. ஒரு சிறு விழுக்காட்டினரை வேண்டுமானால் உழைக்காத மகளிர் என்று கொள்ளலாம். உழைக்கும் மகளிர் என்பவர், ஒரு குறிப்பிட்ட அலுவலகத்துக்கோ வேலைத் தலத்துக்கோ வீட்டை விட்டுச் சென்று உழைத்து, ஊதியம் பெறுகிறார்கள். தம் உழைப்புக்கு ஊதியம் பெறுகின்றவர்களை—'' உழைக்கும் மகளிர் என்று சொல்கிறோம். ஆனால், இலட்சோப இலட்சமாக பெண்கள் காலையில் கண் விழித்ததில் இருந்து, படுக்கும் வரை உழைக்கிறார்கள். அடுப்படியில், வேகிறார்கள். மாட்டுக் கொட்டிலில் சாணி வாரிப் பெருக்கி. மெழுகிக் கழுவுகிறார்கள். பல காதம் நடந்து தண்ணீர் சுமக்கிறார்கள். துணி துவைக்கிறார்கள். பெட்டி போடுகிறார்கள். அரைக்கிறார்கள்; கரைக்கிறார்கள்; ஊடே நூல் சுற்றுகிறார்கள்; தறி போடுகிறார்கள். குத்துகிறார்கள்; புடைக்கிறார்கள். நோயாளிகளுக்குப் பணிவிடை செய்கிறார்கள். குழந்தை பராமரிக்கிறார்கள். தைக்கிறார்கள், வலை பின்னுகிறார்கள்.... என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

பாண்டம் செய்வதையும், தோலை ஆடையாகத் தைப்பதையும் முதலில் கண்டு பிடித்துச் செய்தவள் பெண்ணே. தன் உபயோகத்துக்கு என்று செய்யத் தொடங்கி, பண்ட மாற்று முறையில் இந்தப் பயன்களை ஒருவருக்கொருவர் என்று பரிமாறிக் கொண்டனர். இன்றளவும், இத்தகைய எல்லாக் கலைத் தொழில்களும், பெண்ணுக்கு வாணிப ரீதியான உழைப்பாக மதிப்பைப் பெற்றுத் தரவில்லை. ஏனெனில், அது வாணிப ரீதியான உழைப்பாக மாறும் போது, ஆண் அதைக் கைக் கொண்டிருக்கிறான். வீட்டிலே பெண் சமையற்காரிதான். ஆனால் அது தொழிலாக உழைப்பூதியம் கொண்டு வரும்போது, ஆணுக்குத்தான் பெருவாரியாக உடமையாகிறது. எனவே, உழைப்பூதியம் இல்லாமலே பெண், உழைக்கிறாள்...... இந்த உரைகளின் சாராம்சத்தை மேற்படிப் பத்திரிகைகள் எப்படி வெளியிடுகின்றன?

பெண்கள் தங்கள் குடும்பங்களில் சமைப்பதற்கு, ஊதியம் கேட்கிறார்கள்! குடும்பப் பெண்களுக்கும் சம்பளம் வேண்டுமாம்! லீவு. பஞ்சப்படி எல்லாம் கேட்கிறார்கள்!''

இதைத் தொடர்ந்து, சில ஜோக்குகள் — பிச்சைக்காரராக ஒரு அதிகாரி காட்சி தருவார். ''என்ன ஆயிற்று இவருக்கு?''

'அவர் மனைவிக்குச் சம்பளம் கொடுத்து இந்த நிலைக்கு வந்து விட்டார்.'' என்ற மாதிரியில் ஆடவர், இவர்கள் அநியாயக் கோரலில் பரிதவிப்பதாகச் சில சித்திரங்கள்.

இதே போன்றுதான், 'வரதட்சணை கேட்பவள் மாமியாரே' என்ற சொல்லும், பெண் அமைச்சர் அதைக் குறிப்பிடுவதும் முக்கியத்துவம் பெறுகின்றன.

தொலைக்காட்சி நாடகங்கள், கதைகளில்கூட, மாமியார் ஒரு பெண்ணை வதைப்பதும், அவளே மண்ணெண்ணெயை ஊற்றி எரிப்பதும் சித்திரிக்கப் படுகின்றன.

நடைமுறையில் பெண்களே நிருவகிக்கும் கல்வி நிறுவனங்களில் பெண்கள் மகிழ்ச்சி பெற்றவர்களாக இருக்கிறார்களா?

பழைய மாமியார் மருமகள் உறவு நடப்புக்களே' புதிய உருவில் மாறி இருக்கின்றன. அதே மனப்பாங்குகள், புதிய வடிவில் அடக்கலும், மோதலும் என்று, புறத்தேயுள்ள ஆதிக்கங்களை உணரச் செய்யாமல் சிரஞ்சீவித்துவம் பெற்றிருக்கின்றன.

பெண்கள் படிப்பதற்கென்று பத்திரிகை நடத்துபவர்கள், சில பெண்களைச் சாட்சியாக வைத்துக் கொண்டு, பழைய ஆண் ஆதிக்கச் சக்திகளாகவே இயங்குகிறார்கள்.

பெண்களின் பிரச்னைகளையும் அவர்கள் படும் பிரசவ கால வேதனைகளையும்கூட, ஒரு சதைப் பிடிப்புடன் எழுதுவதில் தனக்கு நிகர் தானே என்று தோள் தட்டும் 'இலக்கியவாதி' நான் நூறு பெண்களைப் புணர்ந்த அநுபவத்தில் அவர்கள் வாயிலாகவே வேதனைகளை உணர்ந்து எழுதுகிறேன். எனக்குக் கற்புக் கிடையாது. அதேபோல் இந்தப் பூமியில் பிறப்பெடுத்த எந்தப் பெண்ணுக்கும் கற்பொழுக்கம் கிடையாது. அப்படிச் சொல்பவர்கள் வேடதாரிகள். குடும்பங்கள் பொய். என்று புதிய சித்தாந்தத்தை மகளிர் கூட்டத்தில் துணிந்து சொல்லி மார் தட்டுகிறான்.

இப்படி ஒரு பெண் சொல்ல முடியுமா? ''நீ யாரடா எங்கள் மீது சாணியை வீச'' என்று கேட்கக்கூட இவர்களுக்குத் திராணி கிடையாது. ஒருத்தியை மற்றவள் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள். இந்தப் புதிய அலையின் மகத்துவத்தில், பிராபல்யத்தில் கிறங்கிப் போகும் எழுத்துப் பெண்மணிகளும், நான் சதையே, நான் தசையே, இதுவே சிவ சக்தி' என்று 'கொச்சை' இலக்கியப் படைப்பு நாயகிகளாகப் பெருமை பெறுகிறார்கள்.

பெண்ணுக்குப் பெண் என்ற எதிர்ப்புக்களும், நான் சதையே, சதை தவிர வேறில்லை என்ற புத்தறிவுப் பெண்களும், தன் தலையில் தானே மண்ணைப் போட்டுக் கொள்ளும் கைங்கரியத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே இதை ஊக்கிவிடுவதில், எல்லாத் தொடர்புச் சாதனங்களும் மிக ஊக்கமாக இயங்குகின்றன.

ஒரு தாயே தன் பெண் மகவைக் கழுத்தைத் திருகிக் கொல்கிறாள் என்ற செய்தியை, என்னாலும் நம்ப முடியவில்லை. ஆனால், ''நான் கொல்கிறேன்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொன்றேன் அம்மா!'' என்று நெஞ்சுடைய அவர்கள் விம்மிய போது, பெண்மையின் அவலநிலை நெஞ்சை உருக்குவதாக இருந்தது. வயிற்றுக்குப் பற்றாத பொருளாதாரப் பற்றாக்குறைச் சுருக்கும், நுகர் பொருள் வாணிப கலாசாரத்தின் பற்றியெரியும் தேவை நிர்ப்பந்தங்களும், ஆண் ஆதிக்க, கற்பொழுக்க மேநிலைக் கலாசாரத்தின் கிடுக்கிப்பிடியும், பெண்ணைச் செல்லாக் காசுக்கும் மதிப்பில்லாதவளாக மட்டும் செய்துவிட வில்லை. அதற்கும் கீழே போய், இவள் ஒரு சுமை. ''இந்த வாழ்க்கையின் அவலங்களையே என்னால் சுமக்க முடியவில்லை. பெண்ணாகப் பிறந்து நீ இன்னும் அவலங்களைச் சுமக்க வேண்டுமா, வேண்டாம் தாயே!'' என்று நஞ்சூட்டுகிறார்கள். குருட்டுக்கன்றுக் குட்டியைக் கொல்வதனால் அந்தத் துன்பங்களில் இருந்து அதற்கு விடுதலை நல்குகிறோம், என்று தாயினும் அளப்பரிய கருணைக்கு அது எடுத்துக் காட்டென்று காந்தியடிகள் தெரிவித்த கருத்தே என்னுள் இடம் பெற்றது. இந்த மூடத்தாய், இதற்குத் தன்னையே கொன்று கொள்ளலாம் அல்லவா? ஆனால் இவள் இன்னும் புருஷனுக்காக வாழ்கிறாள். அவன் அதைக் கொன்று விட்டு வாடி என்று உத்தரவிடுகிறான்.

அவளே அதைக் கொல்பவளாக இருந்தாலும்' 'தன்னைப் பெற்று வளர்த்து தனக்கு சுகபோகமளித்துத் தன்னை வாழ வைக்கும் அன்னைக்குலத்தின் ஒரு பூந்துளியாகப் பிறந்த மகவை, 'ஏனடி கொல்கிறாய்?' என்று கேட்கலாமே? அப்படி ஒரு சொல் வந்திருந்தால், அவள் கொல்வாளா?

இப்போது அவன் வெறி, ஆதிக்கம் கோலோச்சும் மிருகத்தனங்களின் கோரங்களல்லவா அந்தப் பூந்துளியின் மீது படிகிறது?

அதைக் கொல்ல, இப்படி ஒரு சமாதானத்தைச் செய்து கொள்கிறாள். கணவன் இறந்ததும் உயிரோடு எரிக்கும் மங்கையரை, அவர்களாகவே நெருப்பில் விழும் பக்குவத்துக்கு வளைத்திருக்கின்றனர் அல்லவோ? மக்களுக்காக மக்களே தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளின் ஆட்சி இங்கே நடக்கிறது.

நாம் விடுதலை கோரிய அந்நிய ஆட்சியினர், இந்தக் கோரக் கொலைகளுக்கு முடிவு கட்டக் கடும் தண்டனையும் சட்டமும் கொண்டு வந்தார்கள். இந்த நம்மை நாமே ஆண்டு கொள்ளும் ஆட்சியில் பெண் கொலைகள், சிசுக் கொலைகள், ஆயிரம் ஆயிரமாக நடந்தாலும், வெளித் தெரியாமலே ஒப்புக் கொள்ளப்பட்டு விடும் சூழ்நிலையைக் காண்கிறோம். ஆங்காங்கு கொடி தூக்கும் மாதர் அமைப்பு எதிர்ப்புக்களும் சிறுபான்மைப் பிசுபிசுப்புக்களாக ஓய்ந்து போகின்றன. அத்துடன் கூட இல்லாமல், அநியாயங்களுக்கு நியாய வாதங்களும் கூடக் கண்டு பிடிக்கப்படுகின்றன என்றால் மிகையில்லை.

'பெண் குழந்தை குடும்பத்துக்கு மட்டும் சுமையில்லை; அவள் சமுதாயத்துக்கும் சுமையே; மக்கள் பெருக்கத்துக்கு முக்கியகாரணி அவளே. எனவே அவளைக் கருவிலேயே அழிப்பதுதான் மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய வழியாகும்' என்ற கருத்துக்களும் வலிமை பெறுகின்றனவே?

இதே வகையில் பெண் அழிப்புக்குக் காரணிகளாக இருக்கும், வரதட்சணை, சீதன வகைகளும்; நியாயமாக்கப்படாமல் இல்லை. இந்த நியாயங்களில் நேர் முகம், மறைமுகம் என்று இருவகைகளும் இருக்கின்றன. மறைமுக நியாயங்கள்—ஆட்சி பீடங்களிலோ, பெரும் பதவிகளிலோ, செல்வாக்கு உடையவர்களாக இருப்பவர்கள். தங்கள் வாரிசுகளின் திருமணங்களில் பணத்தைத் தண்ணீராகச் செலவிடுகிறார்கள். குமாரிகளின் திருமணங்களுக்கு இவர்கள் வைக்கும் சீர் வரிசைகள், செய் நேர்த்திகள், திருமண வைபவங்களின் ஆடம்பரங்கள் அனைத்தும், பத்திரிகைகளில் வண்ணப் படங்களுடன் வெளியாகின்றன. இவற்றைப் பார்க்கும் மக்கள் யாராக இருந்தாலும், இவ்வாறு கொடுப்பது சரியல்ல என்று சொல்கிறார்களா? எதிர்ப்புக் காட்டுகிறார்களா? இல்லையே? இது மறைமுகம்.

மாறாக, அத்தகைய ஆடம்பர வைபவங்கள், வண்ண வரிசைகளை எல்லாம் தங்கள் மகன்களுக்கும் கேட்கலாமே என்ற நியாயமும், தங்கள் பெண்களுக்கு இவ்வரிசைகளைச் செய்தல் சமூகத்தில் பெரிய மனிதக் கௌரவத்தை நிலை நாட்டக்கூடும் என்று விரும்பும் பெற்றோர் நியாயமும்தான் ஏற்படுகின்றன. இது நேர்முகம்.

எனவே, பெண் வருக்கத்தைச் சுரண்டிக் கொல்லும் அநீத 'தருமங்கள்' அவர்களாலேயே ஒப்புக் கொள்ளப் படும் ஒரு சூழல் அவர்களறியாமலேயே உருவாகி வந்திருக்கிறது.

தெளிந்த நீரில் எண்ணெயைத் தெளித்தால் அது நீர்ப் பரப்பில் பரவும். மேலே மேலே தெளித்துக் கொண்டிருந்தால் நீரிருப்பதே தெரியாமல் எண்ணெய்ப் படலம் மறைக்கும். நியாயங்களும், நேர்மைகளும் இவ்வாறு தான் 'அநியாய'ங்களால் மறைக்கப்படுகின்றன.

'பெண்ணுக்குப் பெண்ணே எதிரி' என்ற நடைமுறையை ஆழ்ந்து பற்றியிருக்கும் வேர் எது? எங்கே நிலை கொண்டிருக்கிறது?

இதைப் பற்றி, பாதிக்கப்பட்டிருக்கும் பெண்ணினமே சிந்திப்பதில்லை. அந்தப் பழைய நாட்களில் மருமகளைக் கொடுமைக்குள்ளாக்கிய மாமியாரின் பின்னணி யாது?

மாமியார் என்பவள் மகனையே சார்ந்து இருக்கும் படியாக விதித்து விடப்பட்ட சார்புப்பிராணி. அந்தக் காலங்களில் அவளுக்குக் கல்வி, பொருளாதார சுயச் சார்பு, சுதந்திரம் எதுவும் கிடையாது. பிறந்த வீட்டு வண்மைக் கொடையே, பெண்ணுக்கு, மருமகளாக வருபவளுக்கு மதிப்பு அளித்தது. இதே மனப்பாங்குடன் வரும் மருமகளைப் பார்க்கிறாள். அந்தக் காலத்தில் இவள் புதிய மருமகளாக வந்த போது, கணவனுடன் பேச முடியுமா? நிமிர்ந்து பார்க்க முடியுமா? பகலில் தலை குனிந்து இலையில் சோறு பரிமாறி, இருட்டில் அவனுக்குச் சுகிக்கக் கருவியாக இருந்தாள். இந்நாளில், இந்த மருமகளைப் பார்க்கையில், அன்றைய ஏமாற்றங்கள் மூர்க்கமாகத் தலையெடுக்க, மருமகளைத் தன் ஆணைக்குள் வைக்க முயலுகிறாள். மகனைத் தன் வசம் முழுவதுமாக்கிக் கொள்ள முனைகிறாள். இந்தப்பரம்பரை வெவ்வேறு உருவங்களில் வெவ்வேறு வடிவங்களில் 'மரபு,' போன்றே தொடருகிறது. மருமகள் தன் சம்பாத்தியத்தில் இவள் கேட்ட சீரை வாங்கி வருவது ஒப்புதற்குரியதாக இல்லை. ''பிறந்த வீட்டில் இருந்து ஏன் சீர்வரிசை வரவில்லை?''

வேலைக்குச் செல்லும் மருமகள், அன்றாடம் புதிய சேலை உடுத்துகிறாள்; புதிய பொருளாதார வசதிகளை அநுபவிக்கிறாள். வீட்டு வேலை என்ற முழுநேரப் பிடுங்கல்களில் இருந்து விடுபட வெளி உலகின் தோழமைகள் கிடைக்கின்றன. அவளை ஒத்த பெண்கள், அலங்காரங்களுடன், மகிழ்ச்சியோடு, பிரச்னைகள், சுமைகளைப் பரிமாறிக் கொள்ளவும் வாய்ப்புகள் இருக்கின்றன. இவற்றை எண்ணுகையில், மருமகள் விட்டுச் செல்லும் குழந்தையைப் பார்த்துக் கொண்டு, நாளெல்லாம் சிறைக்கைதி போன்ற நிலையில் தன்னைக் கட்டி வைத்திருக்கும் பொறுப்புகளையும் தட்டிக் கழிக்க முடியாமல் ஓய்வுக் காலத்திலும் தொல்லைப்படுவதை நினைத்து நினைத்துக் குமுறுகிறாள், மருமகளின் ஒவ்வொரு சிறு நடப்பும் இவளுக்குக் குற்றம் கற்பிக்கிறது. மருமகளையும் மகனையும் சேர்த்துப் பார்க்கவே வெறுக்கிறாள். மருமகளுடைய பொருளாதார ஆதாயத்தினால் என்ன நன்மை? மாமியாராகிய தனக்கு என்ன நன்மை?

இருட்டில் குமுறும் மாமியார் கொடியவளாகிறாள்.

இதே மாமியார் வேலைக்குச் செல்பவளாக இருந்து ஓய்வு பெற்றிருந்தாலும்கூட மருமகளைப் புரிந்துகொண்டு இணக்கம் காட்ட முடிவதில்லை. ஏனெனில் நெருக்கடிகளுக்குச் சமுதாயத்தின் பல்வேறு கூறுகள் காரணங்கள் என்று புரிந்து கொள்ளவே, பெண்கள் மறுக்கிறார்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனலாம்.

மகன் என்ற நிலையில் தாயின் மனம் அவனுக்குப் புரிவதில்லை; மனைவியின் நியாயங்களிலும் அவனுக்கு உள்ளோட்டமான கருத்து இல்லை. அவன் வரைக்கும் அவன் சுகமாக, இடைஞ்சலின்றி வாழ வேண்டும். சில வீடுகளில் ஆண் ஆதிக்கங்கள், புதிய பொருளாதார சுதந்திரத்தில் மிதக்கும் மனைவியைச் சார்ந்தே, அவளைக் கண்காணித்து, அவளை ஒடுக்குவதிலேயே கண்ணாக இருக்கின்றன. சம்பளம் முழுவதையும் இணக்கமாகவே வாங்கிக் கொள்வான். இச் செயலுக்கு, மாமியார், பெரியுவர் என்ற ஒப்புதலை, ஆமோதிப்பைப் பெறுவதால், மனைவியின் மனத்தாங்கல் தன் மீது விழாமல் தப்புகிறான்.

''இந்த வீட்டு வழக்கம். சம்பளம் வாங்கினதும், புருஷனிடம் கொடுத்து நமஸ்காரம் பண்ணிட்டுத்தான் எதுவும் வாங்கிக்கணும். அதுதான் மரியாதை!'' என்று அந்த மாமியார் மருமகளுக்கு ஆணையிடுவதை மகனின் மீது கொண்ட பெரிய உரிமையாகக் கருதுகிறாள்.

குடும்பத்தில் திருமணமாகாத பெண்களிருந்தாலோ, திருமணமான இளைய சகோதரிகள் இருந்தாலோ, அவர்கள் தாயைச் சார்ந்தே தங்கள் வசதிகளை—உரிமைகளைப் பெறவோ, சுரண்டவோ முற்படுகிறார்கள். 'பெண், சுயமரியாதையோடு, பொருளாதார சுயச்சார்போடு நிற்பதே மதிக்கத் தகுந்தது' என்று அறிவுறுத்தக் கூடிய நியதிகளே இல்லை.

ஒரு தாய் மகளுக்குச் சீர் செய்ய வேண்டும் என்றால், மகன் ஒப்புதல் கொடுக்கிறான். ஆனால் அவன் மனைவியோ, தன் வருவாயையும் பிடுங்கிக் குடும்பத்தில் போடுகிறார்களே என்று நினைக்கிறாள். 'தனிக்குடும்ப' மந்திரம் ஓதுகிறாள்.

இத்தகைய விரிசல்கள், மாமி மருமகள்-நாத்தி அண்ணி என்ற உறவில்மட்டுமின்றி, தாய்-மகள்-சகோதரி-சகோதரி என்ற உறவுகளில் இன்று மிக இயல்பாக வந்து விட்டன.

மருமகளைச் சீர் கேட்டு எரிப்பதில் மாமியார் மட்டுமா கருத்துடன் இருக்கிறாள்? மகனும், அவன் தந்தையும் அதில் பங்கு பெறவில்லையா?

மூடத்தனமான கருத்துக்கள் தாயிடம் இருந்து வெளியானால், வெளியுலக அநுபவம் பெற்ற மகன், அவளை ஏன் புறக்கணிக்கக் கூடாது? தந்தை என்ற ஆதிக்க ஆண், அவளை இந்த விஷயத்தில் ஏன் அடக்கித் திருத்தவில்லை?

ஒரு தாய் நடுத்தெருவுக்கு அடித்து விரட்டப்படும் போதுகூட, மகன் மனைவியுடன் சேர்ந்து அச்செயலைச் செய்ததாக வருகிறது.

மருமகளைத் தாய் கொடுமைப் படுத்தினாள். அதனால் அவன் தாயை விலக்கினான் என்று நிகழ்வது அபூர்வம்.

'இவளைத் தொலைத்து விட்டால் நீ இன்னொரு கல்யாணம் செய்து கொள்ளலாம்' என்று மூடத்தாய் கூறினால், படித்துப் பட்டம் பெற்ற ஆணும் தாய்க்குக் கட்டுப்படுகிறான்.

வரதட்சணை கேட்பவர்கள் பெண்களே! என்ற குற்றச்சாட்டுக்கு நான் இவ்வாறு மறுமொழி கூறுவதுண்டு.

தாய் கூறும் நல்லுரைகளை எப்போதும் எல்லாப் பிள்ளைகளும் கேட்பதில்லை. கேட்டதாக வரலாறே இல்லை. புகை பிடிக்கச் சொல்லி தாய் வற்புறுத்துவதில்லை. தாய் ஒரு மகனை மதுவருந்தச் சொல்வதில்லை. ஆனால் வரதட்சணைக்கு மட்டும் 'தாய் சொல் தட்டாத தருமம், பாலிக்க வேண்டுமா? தந்தை எப்படி நழுவுகிறார்?

''எங்களுக்கு ஒன்றும் முக்கியமில்லை. எல்லாம், வீட்டில் அவள் என்ன சொல்கிறாளோ அப்படி... ஏனென்றால், இந்த மாதிரியான வீட்டு வழக்கங்கள், சம்பிரதாயங்கள் எல்லாம் அவளுக்குத்தான் தெரியும்!'' என்பார்.

அவளுக்கு இந்த உயர்நிலை, ஆணைஇடும் நிலை. அருமையாக இப்போதல்லவா, இந்தப் பையனால் கிடைக்கிறது?

எந்த அறிவார்ந்த சிந்தனையும் இவள் கருவத்தின் ஊடே குறுக்கிடுவதில்லை. 'கல்யாணத்துக்குரிய மகனின் தாய்' என்ற மேலாம் கருவத்துடன், தன் வாழ்நாளின் முக்கிய சிகரத்திலேயே நிற்பதாக நினைத்துக் கொள்கிறாள்.

மிகப்-பெரும்பாலான இடைநிலை வருக்கக் குடும்பங்களின் நிலையே இப்படி என்றால், உணர்ச்சிகளை ஒழுங்கு படுத்திக் கொண்டு வெளியிடும் நாகரிகப் பண்பின் பரிணாமத்தையே பெற்றிராத, பொருளாதாரம் சார்ந்த அடிநிலைக் குடும்பப் பெண்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

இங்கு அநேகமாக எல்லாப் பெண்களும் உடலால் உழைப்பவர்கள். ஆண்மக்களால் சுரண்டப்படுபவர்கள். இங்கு எந்த வகைச் சட்ட, தரும, நியாய நெறிகளுக்கும் இடமில்லை. சாதிச் சமூக மூடவழக்கங்களும், ஆணாதிக்க மரபுகளும், ஜனநாயக-கட்சி அரசியலின் குண்டர் தருமங்களுமே கோலோச்சுகின்றன. அன்றாட வாழ்வே அறைகூவலாக இருக்கும் சேரிகளில், பெண்மை, தனித்தனி மூர்க்கங்களாகக் குதறிக் கொள்ளும் காட்சிகள், பொழுது போக்குக் கலைஅம்சமாகப் பரிணாமம் பெற்றிருக்கின்றன.

உயர்மட்டப் பெண்களுக்கோ, ஆடம்பரங்கள், களியாட்டங்கள் தவிர வேறு எந்தவிதமான வடிகாலும் கிடையாது. பார்ட்டிகள், பியூட்டிபார்லர், சீட்டுக் களியாட்டங்கள், வெளிநாட்டுச் சாமான்கள் என்ற வட்டத்தில் மற்றவர்கள் தன்னை மேலாக நினைத்துப் புகழ வேண்டும் என்று எதைஎதையோ செய்கிறார்கள். கூசும் பகட்டு ஒளி வண்ணங்களிடையே நடப்பியல் உண்மைகளையும், தன் சுய உணர்வுகளையும் புறக்கணிக்கப் பழகுகிறார்கள். இந்தப் பகட்டு நாகரிகங்களில், எல்லா ஒழுக்கங்களும் தகர்ந்து போகின்றன. எனவே

எந்தப் பெண்ணும், தன் இனம் என்ற உணர்வில் ஒற்றுமையாக வலிமை பெறவோ, பொதுவான அடக்குமுறை அநியாயங்களையோ, சுரண்டலையோ எதிர்க்க வேண்டும் என்ற உணர்வு பெறவே வாய்ப்பு இல்லாமல் போகிறது. இந்த ஓர் ஐக்கிய உணர்வை, அரசு, சமுதாயம் சார்ந்த கேந்திரமான நிலைகளில் பதவி வகிக்கும் பெண்களாலேயே தோற்றுவிக்க முடியவில்லை.

ஓர் அதிகார வருக்கப் பெண் அதிகாரியாகவே இருக்கிறாள், கீழ்மட்டத்துப் பெண்களுக்கு, தன் இனத்தாருக்கு மறுக்கப்படும் நியாயங்களை வழங்க வேண்டும் என்ற வகையில், இவளால் எந்த நன்மையையும் செய்துவிட முடியவில்லை. ஏனெனில், ஆண் மேல்நிலை ஆதிக்க அரசமைப்பின் சட்டதிட்டங்களுக்கு அவள் உட்பட்டவள். அவள் தன் பதவியைக் காத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே, ஓர் ஆண் அதிகாரி இன்னொரு பெண் அதிகாரி அல்லது ஊழியர் காட்டும் பரிவைக்கூட அவளால் காட்டமுடியவில்லை. ஏறக்குறைய பண்டைய 'மாமியார்' மனப்பாங்கையே அவளும் கொண்டிருக்கிறாள்.

பெண் இனம் சுயச்சார்பு பெற்று வலிமையுடையதாகி, உட்பிரிவுகளை அழித்துக் கொண்டு எழுச்சி பெறாத வண்ணம் ஆணாதிக்கச் சக்திகள் எப்போதும் விழிப்புடன் இருக்கின்றன.

'பெண்ணுக்குப் பெண்தான் எதிரி; ஆண் வருக்கம் அல்ல' என்று ஆணித்தரமாக எடுத்துரைத்துப் பெண் அமைச்சரும், தான் சார்ந்த கட்சித் தலைமைக்கும், பொதுக்கருத்துக்கும் உண்மையானவள் என்று பறைசாற்றிக் கொள்கிறாள். பத்திரிகைகள், இதைத் தெய்வ வாக்காக விளம்பரம் செய்வதில் வியப்பு இல்லையே?

**தாகம் வெளியீடு (1990)**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பாரம்பரிய தாயகப் பிரச்சினையும் முஸ்லிம்களும்

சட்டத்தரணி யு.எம். நிஸார் B.A.

இன்று இனப்பிரச்சினைக்கான தீர்வில் முக்கியபங்கு வகிப்பது பாரம்பரிய தாயகப் பிரச்சினையாகும். வடக்கும் கிழக்கும் இணைந்த பகுதி தமிழ் மக்களின் பிரிக்க முடியாத பாரம்பரிய பூமியாகும் என தமிழ் அரசியல், இராணுவக் குழுக்கள் பலமாக நம்புகின்றன.

வடக்கும் கிழக்கும் இணைந்த பாரம்பரிய தாயகத்தில் முஸ்லிம், சிங்கள மக்களும் கணிசமானளவு வாழ்ந்தாலும் இவர்களின் சட்டரீதியான அந்தஸ்த்து எப்படியிருந்த போதிலும் பொத்துவில் தொடக்கம் மன்னார் வரையிலான கரையோரப் பூமியானது தமிழ் மக்களின் பூர்வீக வரலாறு, பாரம்பரியம், கலாசாரம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் ஒன்றிணைந்த ஓர் அரசியல் அலகாக இருக்க வேண்டும் என்பதே தமிழ் அரசியல் மற்றும் இராணுவக் குழுக்களின் அபிலாஷையாகும். இந்த அபிலாஷையே இன்று அரசுக்கும் புலிகளுக்குமிடையில் நிகழும் பயங்கரமான யுத்தத்தில் அடிப்படையுமாகும்.

வடக்கும் கிழக்கும் இணைந்த பாரம்பரியத் தாயகத்தில் தமிழர்கள் இன்றும் என்றும் கருதிவந்த தொடர்ச்சியான நிலப்பகுதியில் மகாவலி அபிவிருத்தி, புனித பூமி பிரகடனம், புதைபொருள் ஆராய்ச்சி போன்ற பேரினவாத நடவடிக்கைகளை தமிழர்கள் மட்டுமல்ல வட, கிழக்கில் வாழும் முஸ்லிம்களும் பலமாக எதிர்க்கின்றனர். அம்பாறை மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா மாவட்டங்களில் திட்டமிட்ட அடிப்படையில் அந்நியர் குடியேற்றப்படுவதும் அபிவிருத்தி என்ற போர் வையில் மகாவலி 'சி' பகுதி மூலமாக அந்நியர்களுக்கு காணித்துண்டுகள் வழங்கப்படுவதும் சாதாரண ஒரு நடவடிக்கையல்ல, மாறாக வட, கிழக்கு பாரம்பரியப்பூமியின் சிங்களவர்களின் சனத்தொகையைக் கூட்டி அதில் வாழும் தமிழ், முஸ்லிம் சிறுபான்மை மக்களின் அரசியல் அதிகாரபலத்தை உடைத்து எதிர்காலத்தில் தமிழ் ஈழம் ஒன்று உருவாவதைத் தடுப்பதே பேரினவாத அரசின் நோக்கமென தமிழ் அரசியல், இராணுவக் குழுக்கள் குரல் எழுப்புகின்ற நேரத்தில் முஸ்லிம்களோ குறிப்பாக கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் 'தமிழ்ஈழம்' உருவாவதைத் தடுப்பது அல்லது ஆதரிப்பதைத்தமது பிரதான இலக்காகக் கொள்ளாது தமது பொருளாதார அபிவிருத்திக்கும் எதிர்காலச் சந்ததிகள் குடியேறி வாழ்வதற்கும் தேவையான நிலப்பகுதிகள் அந்நியரால் ஆக்கிரமிக்கப்படுவதையும் அபகரிக்கப்படுவதையும் பலமாக எதிர்க்கின்றனர். ஆனால் துரதிஷ்டவசமான நிலை என்னவெனில், சிங்களக் குடியேற்றங்களுக்கெதிராக தமது பலமான எதிர்ப்பைக் காட்டுவதற்கு போதுமான அரசியல் உந்து சக்தி ஒன்று இல்லாமல் கடந்த நாற்பது வருடங்களாக அவர்கள் திணறுவதையே தற்கால சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. முஸ்லிம்களுக்கு தனித்துவமான தலைமைத்துவமும், உரிமைகளும் பெற்றுக் கொடுக்க வந்த தனி வழிக்கட்சிகள் கூட இந்தத் திட்டமிட்ட குடியேற்றங்களை எதிர்ப்பதைத் தமது பிரதான இலக்காகக் கொள்ளாது, வேறு ஏதோ ஆதாயங்களுக்காக இயங்கிக் கொண்டிருப்பது போல தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன

தமிழ், முஸ்லிம் சிறுபான்மைத் தேசிய இனங்கள் தமது அரசியல் அதிகாரங்களைப் பேணிப்பாதுகாப்பதற்கும், பாரம்பரிய கலாசாரங்களை கடைப்பிடிப்பதற்கும் பொருளாதார அபிவிருத்தியடைவதற்கும் தனி அரசியல் அலகு (Seperate political unit) ஒன்று வேண்டுமென்றும் அதுவே வடக்கும் கிழக்கும் இணைந்த மாநிலமெனவும் அடையாளப்படுத்தி வருகின்றன, ஆனால், அண்மைக் காலங்களில் எல்.ரி.ரி.ஈ. எடுத்த ஒரு சில நடவடிக்கைகளின்படி தமிழ், முஸ்லிம் சமூகங்கள் இரண்டும் வடக்கையும் கிழக்கையும் தமது வாழ்விடமாக பல நூற்றாண்டு காலமாகக் கருதி வாழ்ந்து வருவதாலும் இவ்விரண்டு சமூகங்களும் தமிழைத் தாய் மொழியாகக் கைக்கொண்டு வருவதாலும் வடக்கும் கிழக்கும் இணைந்த நிலப்பகுதி தமிழ் பேசும் மக்களின் பொதுவான பாரம்பரியத் தாயகம் (Traditional Homeland) என்ற நிலைப்பாட்டுக்கு முற்றிலும் முரணாக வடக்கும் கிழக்கும் முஸ்லிம்களைத் தவிர தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட ஏனையோருக்கு மாத்திரமேயென்ற நிலைப்பாட்டை அதாவது வடக்கும் கிழக்கும் பாரம்பரியதமிழ் தாயகமென்ற (Traditional Tamil Homeland) உறுதியான

> "அண்மையில் முஸ்லிம்களுக்கெதிராக புலிகள் எடுத்துவரும் நடவடிக்கைகள் வடக்கும் கிழக்கும் இணைந்த பகுதி **தமிழ் பேசும் மக்களின் பொதுவான பாரம்பரியத் தாயகம்** என்றதற்கு முற்றிலும் முரணாக, முஸ்லிம்களைத் தவிர்ந்த தமிழை தாய்மொழியாகக் கொண்ட ஏனையோரது **பாரம்பரிய தமிழ் தாயகம்** என்ற கோட்பாட்டினை கொண்டுள்ளதை வெளிப்படுத்தியுள்ளது."

www.tamilarangam.net

கோட்பாட்டினைக் கொண்டுள்ளன.

மிதவாத தமிழ் இயக்கங்களைப் பொறுத்தவரையில் வடக்கும் கிழக்கும் பாரம்பரியத்தாயகமென்ற கோட்பாட்டில் வித்தியாசப்படாவிடினும் இவ்விரண்டு மாகாணங்களும் இணைந்த மாநிலமே எந்தவொரு அரசியல் தீர்வுக்கும் அடிப்படை அரசியல் அலகாகவும் (Basic Political Unit) அதன் அடிப்படையிலேயே மத்தியிலிருந்து அதற்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமெனவும் பிடிவாதமாக நிற்கின்றன.

ஆனால் முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் வடக்கும் கிழக்கும் இணைந்த மாநிலத்தில் முஸ்லிம்களின் தனித்துவமான அரசியல், கலாசார, பாரம்பரியங்களைப் பேணும் அலகுகளும் இருப்பதாகவும் அவை தமிழர்களின் பாரம்பரியத் தமிழ்த் தாயகத்தின் பகுதிகளாகாவென வாதிடுகின்றனர். மாறாக அவை மத்தியிலிருந்து அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய ஒரு முஸ்லிம் மாகாண சபையின் பிரிக்கமுடியாத பகுதிகள் எனக் காரணம் கூறுகின்றனர்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் வடக்கிலும் கிழக்கிலும் வாழ்கின்ற தமிழ் மக்கள் இலங்கையின் சனத்தொகையில் தமிழர்களின் சனத்தொகையில் நான்கில் மூன்று பங்கினராக இருக்கும் நிலையில் அவர்கள் எடுக்கும் எந்த முக்கியத்துவம் வாய்ந்த முடிவுக்கும் வடக்கு – கிழக்குக்கு வெளியே வாழ்கின்ற நான்கில் ஒரு பகுதி இலங்கைத் தமிழர்கள் முழு ஆதரவும் வழங்குகின்றனர். காரணம் வடக்கு-கிழக்குக்கு வெளியே வாழ்கின்ற தமிழர்கள் தமக்கு பாரம்பரியத்தாயகம் வடக்கும் கிழக்கும்தான் என நம்புவதாகும். எடுத்துக்காட்டாக கடந்த 83 ஜூலை கலவரத்தில் வடக்கு-கிழக்குக்கு வெளியே வாழ்ந்த தமிழர்கள் யாழ்ப்பாணத்தை நோக்கி கப்பல் மார்க்கமாக எடுத்துச் செல்லப்பட்டனர். கொழும்பு 'செட்டி' வம்சத்தினர் கூட பல நூற்றாண்டுகள் கொழும்பில் வாசம் செய்தும் கூட இவர்களும் கூட யாழ்ப்பாணத்தை நோக்கி பாதுகாப்புக்காகச் சென்றனர்.

மலையகத்தமிழர்களைப் பொறுத்தவரை தமிழ் அரசியல், இராணுவக் குழுக்கள் தீர்க்கமான முடிவை எடுத்துவிட்டன எனலாம். எப்படி

> "வடக்கும் கிழக்கும் முஸ்லிம்களுக்கும் 'தமிழ் பேசும் மக்கள்' என்ற அடிப்படையில் தாயகம் என்பதை தமிழ் அரசியல், இராணுவக் குழுக்கள் ஏற்க மறுக்கின்றன."

வடக்கும் கிழக்கும் இணைந்த மாநிலம் இலங்கையில் சிதறி வாழும் தமிழர்களுக்கு பாரம்பரியத்தாயகமோ அதேபோல் மலையகத் தமிழர்களுக்கும் அவர்கள் இந்திய வம்சாவழியாக இருந்தாலுஞ்சரி பதிவுப் பிரஜைகளாக இருந்தாலும்சரி அவர்களும் வடக்கிலும் கிழக்கிலும் காணிகள் பெற்று குடியேறலாம் என தமிழ் அரசியல், இராணுவக்குழுக்கள் அனுமதித்துள்ளன.

இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் வடக்கு- கிழக்கு மாகாண சபை, தனது பதவிக்காலத்தில் தமிழ்ப்பகுதிகளில் மலையகத்தவர்களுக்கு காணிகள் வழங்கி, வீடுகளைக் கட்டி குடியேற்றியது.

முஸ்லிம்களின் கண்ணோட்டத்தில், வடக்கும் கிழக்கும் வடக்கிலும் கிழக்கிலும் வதிகின்ற முஸ்லிம்களுக்கு பாரம்பரிய பிரேதசமாகும். வடக்கிலும் கிழக்கிலும் முஸ்லிம்கள் செறிவாய் வாழுகின்ற பிரதேசங்கள் முஸ்லிம்களின் பாரம்பரிய பிரதேசங்களே என ஒரு சில மிதவாத தமிழ் இயக்கங்கள் கூட ஒத்துக்கொள்கின்றன.

ஆனால் வட-கிழக்கு பிரதேசங்களுக்கு வெளியே வாழ்கின்ற மூன்றில் இரண்டு பங்கு முஸ்லிம்களுக்கு வடக்கும் கிழக்கும் பாரம்பரிய பிரதேசங்களாக அதாவது இரண்டு பிரதேசங்களையும் தமது பாரம்பரிய தாயகமாக வெளியே வதிகின்ற மூன்றில் இரண்டு பங்கு முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்கின்றனரா?

இதுதான் இன்றைய முக்கியமான கேள்வியாகும் சிங்களவர்களின் பாரம்பரிய பிரதேசங்களாகக் கருதப்பட்டு வருகின்ற வடக்கும் கிழக்கும் தவிர்ந்த பிரதேசங்களை தாம் பிறந்து வாழும் பாரம்பரிய தாயகமாகக் கருதியே வாழ்ந்து வருகின்றது. 83 ஜூலையில் தமிழர்களுக்கு ஏற்பட்ட ஒரு சோதனை, இப்பகுதியில் வாழும் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டால் கூட, வடக்கு-கிழக்கு பிரதேசங்களுக்கு வெளியே வாழ்ந்த நாலில் ஒரு பங்கு தமிழ் மக்கள் தமது பாரம்பரிய பிரதேசங்களான வடக்கையும் கிழக்கையும் நோக்கி புகலிடம் தேடிச் சென்றது போல வடக்கு-கிழக்கு பிரதேசங்களுக்கு வெளியே வாழுகின்ற மூன்றில் இரண்டு பங்கு முஸ்லிம்களுக்கு வடக்கையும் கிழக்கையும் தேடிச் செல்லக் கூடிய மனோநிலையோ அவ்வாறு தேடிவரும் மக்களுக்கு பாதுகாப்பு வழங்கக் கூடிய பிரதேசங்களாகவோ இன்று அவை இல்லை.

அது மட்டுமல்ல வடக்கும் கிழக்கும் தவிர்ந்த சிங்கள பாரம்பரிய பிரதேசம் அதில் வாழும் முஸ்லிம்களுக்கு ஆகக் கூடிய பாதுகாப்பு வழங்குவது போன்று வடக்கையும் கிழக்கையும் தமது பாரம்பரிய தாயகமாகக் கருதி வாழும் வட-கிழக்கு முஸ்லிம்களுக்கு அவை ஆகக் கூடிய பாதுகாப்பு வழங்கக்கூடிய பிரதேசங்களாக இன்று இல்லை. வடக்கில் பல நூற்றாண்டு காலமாக வாழ்ந்த முஸ்லிம்களும் கிழக்கில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த ஒரு தொகை முஸ்லிம்களும் இன்று தமது பாரம்பரிய பிரேதசங்களை விட்டு விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இன்று புகலிடம் வழங்கிக் கொண்டிருப்பது சிங்கள பாரம்பரிய பிரதேசமாகும்.

இந்தப்பின்னணியில், தமிழ்மக்களிடையே இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வாக வடக்கும் கிழக்கும் இணைந்த மாநில சபை உருவாக்கப்பட்டு அதற்கு மத்தியிலிருந்து கணிசமானளவு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற ஒருமித்த கருத்து முஸ்லிம்கள் மத்தியிலிருந்து எழும்பவில்லையே என ஒரு சில தமிழ் அரசியல், இராணுவக் குழுக்கள் குறைகூறுகின்றன.

இந்நிலையில், தமிழ் மக்களும் சிங்கள மக்களும் நூற்றுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நூறுவீதம் முரண்படுகின்ற இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இலங்கை முஸ்லிம் சமூகம் ஒன்றுபட்டு ஒருமைப்படான தீர்மானம் எடுக்க திண்டாடிக் கொண்டிருக்கிறது. இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்க்கமான முடிவை சர்வகட்சி மாநாட்டில் முன்வைக்க தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள் தவறிவிட்டன. இது பேரினவாதத்திற்கு பெரிய சாட்டாகப் போய்விட்டது.

வடக்கும் கிழக்கும் இணைந்தால் அது ஈழத்திற்கு ஒப்பாகும் என்ற பயம் சிங்களவர் மத்தியில் தோற்றுவிக்கப் பட்டுள்ள வேளையில் முஸ்லிம் மாகாண சபையைப் பெறும் நோக்கில் முஸ்லிம் அரசியல் கட்சிகள் வடக்கும் கிழக்கும் இணையவேண்டும் எனக் கருத்து தெரிவிப்பது சிங்களவர் மத்தியில் முஸ்லிம்கள் மீது சந்தேகத்தை ஏற்படுத்திவிட்டது. இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு எவ்வளவுக்கு இழுபறியாகிறதோ அதேயளவுக்கு முஸ்லிம்கள் மீதான ஆத்திரமும் அதிகரிக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன.

இந்நிலையில் சிங்கள மக்கள் மத்தியில் வாழும் முஸ்லிம்களின் நலன்களைப் பேண வேண்டுமாயின் இரு நிகழ்வுகள் நிகழவேண்டும்.

அவையாவன;

1) முஸ்லிம்கள் சிங்களமக்களின் அபிலாஷைகளுக்கு முரணில்லாத வகையில் இனப்பிரச்சினைக்கான தீர்வை வெளியிடவேண்டும்.

2) இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை சிங்கள அமைப்புகளோ அல்லது சிங்கள அரசியல் கட்சிகளோ வெளியிட வேண்டும்.

அண்மைக்கால நிகழ்வுகளை நோக்கின் இலங்கை முஸ்லிம் சமூகம் வடக்கும் கிழக்கும் இணைந்த அமைப்புக்குள் முஸ்லிம் மாகாணசபை வேண்டும் என்ற கோரிக்கையிலிருந்து நழுவி கிழக்கும் வடக்கும் தனியான இரு சபைகளாக இருக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டை ஏறக்குறைய எடுத்துவிட்டன போலத் தோன்றுகின்றது.

இதற்கு உதாரணமாக, அண்மையில் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தேசிய முஸ்லிம் பேரவை நடாத்திய இனப்பிரச்சினையும் முஸ்லிம்களும் என்ற தலைப்பில் பேசிய அனைவரும் கிழக்கு தனித்திருக்க வேண்டும் என்ற கோஷத்தினையே எழுப்பினர். இக்கூட்ட இறுதியிலும் கூட கிழக்கும் வடக்கும்வேறாக இருக்க வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேறியதாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து தமிழ் அரசியல் கட்சிகள், முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி முன்வைத்த வட-கிழக்கு இணைப்பிற்குள் முஸ்லிம் மாகாண சபை பாரம்பரிய முஸ்லிம் பிரதேசங்களை இணைத்து உருவாக்கப்படுவதோடு அதற்குரிய அதிகாரங்கள் மத்தியிலிருந்தே பகிரப்பட வேண்டும் என்ற கோரிக்கை தட்டிக் கழிக்கப்பட்டது. முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர் ஜனாப் எம். ஐ. எம். முகைதின் ஆக்ரோஷப்பட்டு வடக்கும் கிழக்கும் தனியாக இருக்க வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டமை நான் மேலே கூறிய கருத்தான முஸ்லிம்கள் படிப்படியாக சிங்களவர் நலன் பேணும் வகையில் நடந்துக் கொள்ளவும் வேண்டும் முடிவுகளை எடுக்கவும் வேண்டும் என்பதற்கு முரண்படவில்லை.

அகில இலங்கை முஸ்லிம் லீக் ஐ. தே. கட்சியுடன் சேர்ந்து சங்கமமாகிவிட்டபடியால் ஐ. தே. க எடுக்கும் முடிவுகளே அக்கட்சியின் முடிவாக அமையப்போகின்றது.

> "வடக்கும் கிழக்கும் தமிழ் மக்களின் பூர்வீக வரலாறு,பாரம்பரிய கலாசாரம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் ஓர் அரசியல் அலகாக இருக்க வேண்டும் என்ற அபிலாஷையே இன்று அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான யுத்தத்தின் அடிப்படையாகும்."

இதற்கிடையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டுமே வட - கிழக்கு இணைப்பு பற்றியோ அல்லது தமிழ் அரசியல் கட்சிகள் அர்த்தமுள்ள முஸ்லிம் மாகாண சபைக்கு அனுமதி கொடுக்க மறுத்தது பற்றியோ எவ்வித முடிவும் எடுக்காத நிலையில் அரசுடன் சேர்ந்து தொண்டமானைப்போல் சில உரிமைகளையும் சலுகைகளையும் பெறப்போவதாக கூறிக்கொள்கின்றனர்.

சிங்களப் பேரினவாதப் பயமுறுத்தலால் பண்டா- செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தமாகிய இரண்டும் அமுல்படுத்தப்படும் தறுவாயில் கைகழுவிவிடப்பட்டது போல தமிழ் முஸ்லிம் மக்களின் நியாயபூர்வமான உரிமைகளை வடக்கும் கிழக்கும் இணைந்த அமைப்பும் அதன் கீழ் உருவாக்கப்படும் முஸ்லிம் மாகாண சபையும் தான்வழங்க முடியுமென சகல கட்சிகளும் தீர்க்கமாக முடிவெடுக்கப்படும் பட்சத்தில் சிங்கள பௌத்த பேரினவாதம் மீண்டும் 'ஜாதிக சிந்தனய' என்ற போர்வையில் பேரினவாதத்தை கக்கத்தொடங்கிவிட்டது. இதன் விளைவு இன்னொரு சிங்கள - தமிழ் அல்லது சிங்கள – முஸ்லிம் கலவரத்தை உருவாக்க வித்திடாது எனக்கூறுவதற்கில்லை.

தமிழ் ம்க்களின் மீது 56, 83 களில் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்கள் முஸ்லிம்கள் மீதும் கட்டவிழ்த்து விடபபட்டால் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழ்கின்ற 2/3 பங்கு முஸ்லிம்கள் எங்கு போய் தஞ்சமடைவது?

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பரம்பரையாக வாழ்ந்து வருகின்ற முஸ்லிம்களின் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் நாளாந்தம் அச்சுறுத்தல் ஏற்படுகின்ற பொழுது எங்ஙனம் சிங்களப் பிரதேசங்களில் நிம்மதியுடன் வாழும் 2/3 பங்கு முஸ்லிம்கள் வடக்கையும் கிழக்கையும் நோக்கிச் செல்ல முடியும்.

இந்நிலையில் அரசுடனான யுத்தத்தில் எல். ரீ. ரீ. ஈ க்கு ஏற்பட்டுவரும் இழப்புக்களுக்கு முஸ்லிம்கள் தான் பொறுப்பு என தவறாக மதிப்பிட்டு வடகிழக்கு முஸ்லிம்களை அவர்களின் பாரம்பரிய தாயகத்திலிருந்து விரட்டியடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

க்க முடிவெடுத்துள்ளதாக எல். ரீ. ரீ. ஈ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதன் முதற் கட்டமாகவே மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போனற் தமிழ்ப் பிரதேசங்களில் சிறுபான்மையாக வாழ்ந்த முஸ்லிம்கள் அடித்து விரட்டப்பட்டுள்ளனர். இவ்வாறு விரட்டியடிக்கப்பட்ட 60,000 க்கு மேலான முஸ்லிம்கள் இன்று தஞ்சமடைந்திருப்பது சிங்கள பாரம்பரிய பிரதேசத்தில் என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு – கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழும் தமிழர்களுக்கு (மலையக தமிழர் அடங்கலாக) வடக்கும் கிழக்கும் பாரம்பரிய தமிழ் பிரதேசம் என பிரகடனம் செய்திருக்கும் தமிழ் இராணு, அரசியல் குழுக்கள் முஸ்லிம் விடயத்தில் வெளிப்படையான எக்கருத்தினையும் வெளியிடவில்லை. உதாரணமாக வடக்கும் கிழக்கும் ஒன்றிணைந்த ஒரே மாநிலமாக பாரம்பரிய தாயகத்தன்மை பேணக்கூடிய ஒரு அமைப்பாக இருக்க வேண்டும் என வட – கிழக்கு முஸ்லிம்களும் வடக்கு – கிழக்கு வெளியே வாழ்கின்ற முஸ்லிம்களும் ஒருமித்த குரலில் கோருகின்ற பொழுது சிங்கள இனவாதத்திற்கு பலிபோகும் 2/3 பங்கு முஸ்லிம்களுக்கு வடக்கிலும் கிழக்கிலும் அடைக்கலம் கொடுப்போம் என எந்த தமிழ் இராணு, அரசியல் குழுவும் இதுவரை பகிரங்கமாக கூறவில்லை.

மாறாக அனைத்திலங்கையிலும் வாழ்கின்ற இலங்கை, இந்திய தமிழர்களுக்கு வடக்கு கிழக்கு இணைந்த மாநிலம் பாதுகாப்பு வழங்கக் கூடிய தனித்தமிழ் தாயகமாகும் என பகிரங்கமாக கூறும் தமிழ் இயக்கங்கள் முஸ்லிம்களுக்கும் வடக்கும் கிழக்கும் “தமிழ் பேசும் மக்கள்” என்ற அடிப்படையில் தாயகம் என்பதை ஏற்கமறுக்கின்றன.

இந்நிலையில் தமிழ், முஸ்லிம் கட்சிகள் ஒன்றுபட்டு இனப்பிரச்சினைக்கு இணக்கமான தீர்வை முன்வைக்கத்தவறிவிட்டனர். அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் கூட் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வையும் முன்வைக்கவில்லை. கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடும் ஒரு முடிவுக்கு வர தவறிவிட்டது.

அண்மையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் திரு. மங்கள முனசிங்க அவர்கள் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முகமாக பாராளுமன்ற தெரிவுக்குழு (Parlimentary Select Committee) ஒன்றைத் தெரிவு செய்யும் முகமாக முன்மொழிந்த பிரேரணை பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினைக்கான தீர்வாக வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாண அமைப்பை தமது உறுப்பினர் முன்வைக்கும் என்பது சந்தேகமாக உள்ளது. அவ்வாறு முன் வைத்தாலும் கூட 2/3 பெரும்பான்மையுடன் அப்பிரேரணை நிறைவேறுமா என்பதும் சந்தேகமாக உள்ளது.

இந்நிலையில் கிழக்கிலங்கையில் முஸ்லிம்களின் மனோநிலையில் மாற்றமேற்பட்டு வருகிறது. காத்தான்குடி ஏறாவூர் பள்ளிவாசல் படுகொலைகள், முஸ்லிம்கள் தமது வயல்களுக்குச் சென்று தொழில் செய்யமுடியாத நிலை, முஸ்லிம்களின் பொருளாதார வளங்கள் சுவீகரிப்பு போன்ற சம்பவங்களால் முஸ்லிம்களின் மனதில் தமிழ் விரோத உணர்வுகள் மாறாத வடுக்களாக மாறி வருகின்றன. இதன் விளைவாக எதிர்காலத்தில் தமக்கு கிழக்கில் முஸ்லிம் மாகாணசபை கிடைத்தாலும் சரி கிடைக்காவிட்டாலும் சரி வடக்கும் கிழக்கும் இணைந்த எந்த ஒரு அமைப்பையும் போர்க்குணம் கொண்டு எதிர்க்கக்கூடும். இம்மாற்றத்தை மத்தியிலிருக்கும் எந்தெவாரு சிங்கள பேரினவாத அரசும் வரவேற்கும். இதை தமக்குச் சாதகமாக பாவித்து ஏற்கெனவே ஒத்திவைக்கப்பட்டிருக்கும் வட – கிழக்கு இணைப்பை பிரிக்கும் அல்லது நிரந்தரமாக்கும் சர்வசன வாக்கெடுப்பை அரசு நடாத்தி வடக்கையும் கிழக்கையும் பிரித்து இருநிர்வாகத்தின் கீழ் செல்ல அனுமதிக்கக் கூடும் இது நடந்தால் பலவருடங்களாக தமது நியாயமான உரிமைகளுக்காகப் போராடிவரும் தமிழ் இராணுவ, அரசியல் குழுக்களுக்கு பலத்த தோல்வியாக முடியும். ஏற்கெனவே இருக்கும் எல்லாவற்றையும் இழந்து சொல்லொண்ணாத் துன்பம் அனுபவிக்கும் தமிழ் மக்களுக்கு எந்தெவாரு நன்மையும் இல்லாமல் போகும் தமிழ் மக்களின் நீண்டகாலப் போராட்டம் சிதறிப்போய்விடும். இந்நிலைமை ஏற்பட்டதற்கு தமிழ் இராணுவக் குழுவான எல். ரீ. ரீ. ஈ ய முழுப்பொறுப்பை ஏற்கவேண்டும். எனவே தமிழ் மக்களின் ஆகக்குறைந்த பட்ச கோரிக்கையான வடக்கும் கிழக்கும் இணைந்த அமைப்பை வென்றறெடுக்க பின்வரும் வழிவகைகளை தமிழ் இயக்கங்களும் எல். ரீ. ரீ. ஈ யும் எடுக்கவேண்டும்.

1. வடக்கும் கிழக்கும் இணைந்த அமைப்பின் கீழ் முஸ்லிம்களின் பாரம்பரிய பிரதேசங்களையும் அதற்குரிய பொருளாதார வளங்களையும் உள்ளடக்கியதான அமைப்பொன்றை ஏற்படுத்தி அதற்கு மத்தியிலிருந்து கணிசமான அளவு அதிகாரம் பகிர்ந்தளிக்கபட தமிழ் குழுக்கள் இசைய வேண்டும்.

2. சிங்கள பாரம்பரியப் பிரதேசங்களில் அடைக்கலம் கோரி அல்லல்ப்படும் வடக்கு – கிழக்கு முஸ்லிம் அகதிகள் மீண்டும் திரும்பி வந்து தமது பழைய இடங்களில் வாழ எல். ரீ. ரீ. ஈ அனுமதிக்க வேண்டும்.

3. வடக்கிலும் கிழக்கிலும் முஸ்லிம்களிடமிருந்து அபகரித்த பொருளாதார வளங்களையும் சொத்துக்களையும் மீண்டும் அவர்களிடமே ஒப்படைக்க வேண்டும்.

4. வடக்கு – கிழக்கு பிரதேசங்களில் முஸ்லிம்கள் தமது வழமையான சமூக, கலாசார, அரசியல் நடவடிக்கைகளை சுதந்திரமாக பின்பற்ற அனுமதிக்க வேண்டும்.

மேற்கூறிய முடிவுகளை வெளியிட எல். ரீ. ரீ. ஈ இனதும் மற்றைய தமிழ் இராணுவ அரசியல் குழுக்களினதும் மனோநிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும். அவர்கள் நீண்டகாலமாக பின்பற்றிவரும் முஸ்லிம் விரோத சிந்தனைப்போக்கிலும் கொள்கையிலும் மாற்றம் ஏற்பட வேண்டும். தமிழை தாய் மொழியாகக் கொண்ட கிறிஸ்தவர்களையும் பௌத்தர்களையும் எவ்வாறு அன்னியோன்னியமாக நடாத்துகிறார்களோ அவ்வாறு முஸ்லிம்களை புரிந்துக்கொண்டு நடத்த வேண்டும். முஸ்லிம்களுடன் அதிகாரத்தை பகிர்ந்து அவர்களையும் சமமாக மதித்து நடக்கப்பழகிக் கொள்ளவேண்டும். கடந்த நாற்பது வருடங்களாக சிங்கள பேரினவாதத்திடமிருந்து தாம் பெற்ற அநீதியான இனவாதரீதியான அனுபவங்களை முஸ்லிம்களிடம் திணிக்கக்கூடாது.

www.tamilarangam.net

இக் கட்டுரை தொடர்பாக இரண்டு குறிப்புகளை எழுத வேண்டியதாகிவிட்டது. ஒன்று: இக்கட்டுரை அச்சுக்குப் போகத் தயாரானபோது வவுனியாவிலிருந்து கிடைத்த தகவலொன்று கூறுகிறது: கடந்த சனியன்று (ஜனவரி 18) யாழ் குடாவில் எஞ்சியிருந்த முஸ்லிம் குடும்பங்களில் நான்கு குடும்பங்களைச் சேர்ந்த 28 பேர் அங்கிருந்து புலிகளால் விரட்டப்பட்டுள்ளனர். இவர்கள் சுன்னாகத்தில் வசித்து வந்தவர்கள். இறைச்சி வியாபாரம் இவர்களது தொழில். சுன்னாகப் புலிப் பொறுப்பாளர் இவர்களை வாகனத்தில் ஏற்றி வந்து தாண்டிக்குளத்தில் விட்டுவிட்டு வவுனியாவுக்கு அப்பால் போகுமாறு விரட்டியுள்ளார். உடுத்த உடையுடன் மட்டுமே தாம் ஏற்றி வரப்பட்டதாக ஸியாகத் அலி (42 வயது), ரஹ்மதுல்லா (36 வயது) ஆகியோர் கூறுகின்றனர். தமிழ் ஈழத்தில் முஸ்லிம்களுக்கு இடமில்லை என்ற புலிகளின் கோட்பாட்டின்படி ஏறத்தாழ ஒரு வருடத்திற்கு முன்னர் வடக்கிலிருந்து 60,000க்கு மேற்பட்ட முஸ்லிம்கள் விரட்டப்பட்டதும் இன்னமும் அவர்கள் அகதி வாழ்வையே வாழ்ந்து வருகிறார்கள் என்பதும் ஒரு துயரம்!

'கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்களுக்கு செய்தவற்றை செய்துவருபவற்றை தமிழ் மக்களும், தமிழ் அரசுகளும் முஸ்லிம் மக்களுக்கு செய்யக்கூடாது' என்றும்,

அவ்வாறு 'முஸ்லிம் மக்களை அடித்துத் துரத்திவிட்டு உருவாக்கப்படும் ஈழம் இஸ்ரேலாகத் தான் இருக்க முடியுமே தவிர ஈழமாக இருக்க முடியாது' என்றும்,

"பலஸ்தீனியரை இஸ்ரேல் இவ்வாறு தான் வெளியேற்றியது. ஆனால் பலஸ்தீனியரின் சுயநிர்ணய உரிமைப் போரை நசுக்க முடியவில்லை. இஸ்ரேலும் தன்னுடைய 'பாதுகாப்பை' உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை" என்றும்

எனவே மொத்தத்தில் இது ஈழத்தின் தேசியத் தற்கொலையே என்றும் சரிநிகர் குறிப்பிட்டிருந்தது. இன்றும் சரிநிகர் கூற விரும்புவது அதைத்தான்.

இது ஒரு ஈழத்தின் தேசியத் தற்கொலையே!.

இரண்டாவது விடயம் என்னவென்றால், வெளியாகிற இந்தக் கட்டுரை பத்திரிகைச் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் பேணிப் பாதுகாத்து வளர்ப்பதாகக் கூறிக்கொள்கிற முன்னணித் தினசரிகளுக்கெல்லாம் கட்டுரையாளரால் அனுப்பப்பட்டு அவர்களின் 'பத்திரிகா தர்மத்திற்கமைய' பிரசுரிக்கப்படாது போய் இறுதியாக இப்போது சரிநிகரில் பிரசுரமாகிறது என்பது.

வாழ்க கருத்துச் சுதந்திரமும், பத்திரிகா தர்மமும்.

இவை எல்லாவற்றிற்கும் தமிழ் மக்களின் அடைப்படை சிந்தனையில் மாற்றம் ஏற்படல் வேண்டும். அதாவது வடக்கும் கிழக்கும் தமிழ் பேசும் அனைவருக்கும் உரித்தான பாரம்பரிய பிரதேசம் என பிரகடனப் படுத்த வேண்டும். தமிழ் தாயகம் தனித்தமிழ்ஈழம் போன்ற இனவாத கோஷங்களை களைய வேண்டும்.

இவ்வாறான போக்குகள் நிச்சயமாக சிங்கள பேரினவாதத்திற்கு பேரிடியாக முடியும். வடக்கு - கிழக்கு உட்பட முழு இலங்கையிலும் பலமானதும் ஆரோக்கியமானதுமான ஒரு தமிழ், முஸ்லிம் சமுதாயம் உருவாகவும் மீண்டும் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் அன்னியோன்னியமாகவும் சமாதானத்துடனும் வாழ அதற்குரிய வழிவகைகளை தேடுவோம்.

சரிநிகர் (ஜனவரி 1992)

நன்றி:

புதிய ஜனநாயகம் (இந்தியா)
சரிநிகர் (இலங்கை)
உயிர்ப்பு (இங்கிலாந்து)
மீட்சி புக்ஸ் (இந்தியா)
தாகம் (இந்தியா)
கேடயம் (இந்தியா)
மன ஓசை (இந்தியா)
பெண்கள் படைப்பில் பெண்கள் (இந்தியா)

www.tamilarangam.net

# "இங்கே இருந்தால் சித்திரவதை! அங்கே போனால் படுகொலை!"

## -ஈழ அகதிகளின் கண்ணீர் பேட்டி

ஜெயா வாழப்பாடி கும்பல் விரும்பியபடியே வாரம் ஒரு கப்பல் வீதம் ஈழத் தமிழ் அகதிகள் நாடு திருப்பி அனுப்பப்படுகின்றனர். ராஜீவ் கொலைக்குப் பழிவாங்கும் வகையில் ஈழத் தமிழ் அகதிகளை சிங்கள இனவெறியர்களிடம் பலிகடாக்களாக விரட்டுவது என்பது தான் அவர்களது ஆரம்ப நோக்கமாக இருந்தது. அகதிகளிடையே புலிகள் ஊடுருவியிருக்கிறார்கள்; அகதிகளால் இங்கே சட்டம் -ஒழுங்கு கெடுவதோடு பயங்கரவாத ஆபத்து ஏற்படும், அகதிகளைப் பராமரிக்க முடியவில்லை என்று பல காரணங்கள் சொன்னார்கள். இப்போது இலங்கையில் இயல்புநிலை திரும்பிவிட்டது; ஈழ அகதிகள் தாம் விரும்பியே நாடு திரும்புகிறார்கள் எனச் சொல்கிறார்கள்.

இப்போது மீண்டும் இலங்கை அரசியலில் தீவிரமாகத் தலையிட்டு ஆதிக்கம் செலுத்தும் நோக்கத்துக்காக ஈழத்தமிழ் அகதிகளைப் பலியிடுவதென இந்திய அரசு தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. இந்த நோக்கத்தோடுதான் ஈழத்தின் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அகதிகளை அனுப்புவதில் குறியாக இருக்கிறது. ஏனெனில் புலிகளுக்கு வடக்கிலும், ஈழத் துரோகிகள் கிழக்கிலும் முன்பு வலுவாக இருந்தனர் என்பது தெரிந்ததே. அதோடு இதுவரை அனுப்பப்பட்ட அகதிகளில் பெரும்பான்மையினர் கிழக்கு மாகாணத்தில் முன்பு அரசு அதிகாரிகள் -ஊழியர்களாகவும், ஈழத் துரோக அமைப்பாளர்களாகவும் இருந்தவர்களும் அவர்களது குடும்பங்களும் ஆகும். இவர்கள்தாம் சுய விருப்பத்துடன் இலங்கை திரும்புவதாகவும், இந்திய அரசு இதுவரை செய்துவந்த உதவிகளுக்கு நன்றி பாராட்டுவதாகவும் கூறியுள்ளனர்.

உண்மையில் ஈழத் தமிழ் அகதிகளில் பெரும்பான்மையினரது கருத்து இதற்கு மாறானது. அவர்கள் எத்தகைய நிலைமைகளில் இங்கு அகதிகளாக வரநேர்ந்தது, இங்கு எப்படி நடத்தப்பட்டனர், இங்கிருந்து வெளியேறும்படி எப்படி நிர்பந்திக்கப்படுகின்றனர் என்பதை சமீபத்தில் சில முகாம்களுக்குச் சென்று நமது பெண் தோழர்கள் இருவர் எடுத்த பேட்டிகள் தெளிவுபடுத்துகின்றன. அப்பேட்டிகளை இங்கே வெளியிடுகிறோம்.

**இலங்கையில் திரிகோணமலையில் பக்கத்தில் ஒரு கிராமம்; இது அங்கு நடந்த கண்ணீர்க் கதை.**

அங்கு இந்திய ராணுவத்திற்கும் எல்.டி.டி.ஈ.க்கும் மெயின் ரோட்டில் மோதல் நடந்தது. என்ர மகள் பிரசவத்திற்கு துடிச்சுக் கொண்டு இருக்கிறா. தனியா ஆம்பிளை வெளியவும் போக முடியாத சூழ்நிலை. மருமகனையும் என்ர மகளையும் அனுப்பி வைச்சனான். பிள்ளைகள் ஆஸ்பத்திரி போற வழியிலதான் சண்டை நடக்கிறது. மருமகன் சரி காட்டு வழியாகப் போகலாம் என்று பிள்ளையை கூட்டிக்கொண்டு போயிருக்குது. பிள்ளைக்கு வழியிலேயே வலி கூடிப்போச்சுது. அந்தக் காட்டுக்குள்ளேயே பிள்ளையும் பிறந்திட்டுது. பெடியன் வந்து எங்களிட்ட சொல்லலாம் என்று நினைத்தாலும் வந்து சொல்ல முடியாத நிலை. கடைசியா தாயும் பிள்ளையும் மருத்துவ வசதி இல்லாததால் செத்துப் போயிற்றுதுகள். மருமகன் கத்திக் குளறிக் கொண்டு பிணத்தையும் தூக்கிக் கொண்டு வருது. துவக்கு சத்தத்தையும் குண்டு சத்தத்தையும் மீறி ஒப்பாரி அழுகைக் குரல் மேலோங்கி கேக்கிறது. இறந்துபோன தாய்க்கு ஏற்கனவே ஒரு பெண் குழந்தை 6 வயதில் உள்ளது. என்னடா எல்லோரும் கத்திக் கொண்டு இருக்கிறார்களே என்று வந்து பார்த்ததும் அதுவும் சேர்ந்து அழுகிறது. இதைக் கண்ட தந்தை என் நெஞ்சே வெடிச்சிரும் போல உள்ளது என்று அப்பிள்ளையை தூக்கி மேலும் அழுகிறார், புலம்புகிறார். இனியும் நாம் இங்க இருந்தால் இன்னும் என்னவெல்லாம் நடக்குமோ வெளிக்கிடுங்க. இந்தியாவுக்கு போகலாம் என்று கிளம்பி விட்டோம். எங்கள் எல்லோரையும் அனுப்பி போட்டில் ஏத்திவிட்டு மருமகனே போட்டையும் ஒட்டிக்கொண்டு வந்து நாகப்பட்டினம் கரையில் விட்டுவிட்டு அந்த பிள்ளையை எங்களிடமே விட்டுவிட்டு, கவனமாய் பார்த்துக் கொள்ளுங்கள் மாமி என்று சொல்லிவிட்டு பிள்ளையை தூக்கி கொஞ்சிவிட்டு போன பெடியன் தான்; இன்னும் அவன் எங்கு இருக்கிறானோ தெரியவில்லை. செத்திட்டானோ உயிரோட இருக்கிறானோ தெரியவில்லை.

இப்ப வளந்து பிள்ளைக்கு 9 வயது. எங்களிடம் கேக்குது, ஏன் என்ர அம்மாவும் அப்பாவும் என்னோட இல்ல. அவங்கள வரச்சொல்லி கடிதம் போடுங்க அம்மம்மா என்று ஒவ்வொரு நாளும் என்னை பிச்சுப் புடுங்குது. நான் அழத்தான் முடியும். வேற என்ன சொல்லமுடியும். ஒருநாள், கேம்பில் கோயில் ஒண்டு இருக்குது. அங்க போய் சாமிகட்ட மன்றாடியிருக்குது. ஏன் என்னை எங்கட அம்மாட்ட சேர்த்து வைக்க மாட்டேன்குற; நான் என்ர அம்மாவையும் அப்பாவையும் தங்கச்சியையும் பாக்கனும். நீ எனக்கு காட்டாட்டி நான் இதே இடத்தில் வந்து செத்துப் போயிருவேன் என்டு அழுதுள்ளது. இதைப் பார்த்தவர்கள் போய் சொல்லியிருக்கிறார்கள். கோயிலுக்கிட்டே உங்க பேத்தி அழுதுகொண்டு இருக்குது என்டு. நான் போறேன். அங்க கண்ணை துடைச்சிட்டு நான் அழேலலணை, நானேன் கத்தோணும். நீ இருக்க; சும்மா வாணே என்று எனக்கு சமாதானம் சொல்லி கூட்டிக் கொண்டு வந்துவிட்டது. நான் வீட்டில வந்து சொன்னன், அடியே உன்ர அம்மா (பெரியம்மாவைக் காட்டி) இவ தானடி. நீ ஏன் வேற என்னமோ நினைச்சுக் கொண்டு இருக்கிற எண்டு. இவ இல்ல, என்ர அம்மாவ எனக்கு தெரியும். அப்ப ஏன் இவயெல்லாம் கறுப்பா இருக்கினம். நான் வெள்ளையா என்ர அம்மா மாதிரி இருக்கிறன். நீ பொய் சொல்லுற என்டு மீண்டும் அழுதுள்ளது.

இந்த பச்சப் பிள்ளைக்கு இந்திய அரசாங்கம் பதில் சொல்லி ஆகனும். சரி ஆம்பிளப் பிள்ளைகளை அங்க வைச்சிருந்தா இலங்கை ராணுவம் வந்து கூப்பிடும். இல்ல பெடியங்களை எல்.டி.டி.இ.ஆர் வந்து கூட்டிக் கொண்டு போயிடுவாங்க என்று பயந்து பிள்ளைகளை இந்தியாவுக்கு கொண்டு வந்தோம். இங்க என்னடா எண்டா, மண்ணாப்போவான் ராஜீவ் செத்ததால் பிள்ளைகளையெல்லாம் தேடிப்புடிச்சு சிறையில் அடைக்கிறார்கள். சரி, கலியாணம் முடிச்சு வைச்சாலும் பிள்ளை பிளைச்சிடுவான் எண்டு கல்யாணம் செய்து வைச்சேன். ஆரோ ஈ.பி.ஆர்.எல்.எ·ப். பெடியன்கள் போலீசில சொல்லியிருக்கிறான், என்ர பிள்ளை எல்.டி.டி.ஈ.க்கு சப்போட் எண்டு. மறுநாளே போலீஸ் வந்து நிக்குது. எங்க உன் மகன், உடனே எங்களோட அனுப்பிவை, இல்லை என்ன நடக்குமோ தெரியாது எண்டு மிரட்டினான்.

ஏன் பிள்ளையைத் தேடுறீங்க, அவன் நல்லபிள்ளை, வம்பு எதுக்கும் போக மாட்டான். நல்ல பிள்ளை என்று சொல்ல, ஆ... தெரியும் தெரியும் என்று சொல்லிவிட்டு, உடனே வந்ததும் அவனை வரச் சொல் எண்டு போய் விட்டான். மறுநாள் வேன் நிறைய போலீஸ் வீட்டை வட்டம் போட்டு விட்டது. கியூ பிராஞ்ச், ஸ்பெஷல் பிராஞ்ச் எல்லோம் ஆள் மாறிஆள் கேள்வி கேட்டுக் கொண்டே இருக்கிறாங்கள். பிறகு போய் விட்டனர். என்ர மகன் பிறகு வீட்டுக்கு வந்தான். நாங்கள் நடந்ததை சொல்லவும் சரி, நான் போலீஸ் ஸ்டேசன் போயிட்டு வாறன் எண்டு பிள்ளை வெளிக்கிட்டுது. பின்னால நானும் இவன்ர அப்பாவும் பொண்டாட்டி எல்லோருமே ஸ்ரேசன் போனோம். ஆ... ஆ... நீதான் சூரி... யா.. யா... என்று எகத்தா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளமாக கேலியாக பேசியுள்ளான். நீ ஏதோ நல்ல வளத்தியா. குண்டா இருப்பாய் என்று நினைத்தேன். பாவம் நீ என்றான். என்னங்கையா விசயம் என்று கேட்க லாக்கப்பில் வைத்துவிட்டது. என்னையும் இவரையும் அடிச்சு கிழட்டு நாய்களா எண்டு இன்னும் கேவலமா பேசி சிரித்து கொட்டமடித்தது இந்தப் போலீஸ். 'கியூ' பிராஞ்ச்கூட இந்த மாதிரிதான்.

☆ ☆ ☆

இப்ப கூட அந்த அம்மா எங்களிடம் பேசும்போது அந்த வயதானவர் வாட்டசாட்டமான ஆள் யாரையும் பார்த்தால் மீசையையும் பார்த்து விட்டு சாதாரண ஆளைக்கூட போலீஸ் வருது வாயை மூடு என்று அம்மா வாயை அடைக்கிறார். அவ்வளவு பயம் வெறுப்பு. அதைப் பார்க்கும் போது எவ்வளவு வயித்தெரிச்சலாக உள்ளது. அந்தப் பையனை என்.எஸ்.ஏ. (N.S.A.) சட்டம் போட்டு திருச்சி ஜெயிலில் இருக்கிறார்.


இப்பிரச்சினைகளை பார்த்து பயந்து அங்கதான் ராணுவத்திட்டேயும் எல்.டி.டி.ஈ., ஈ.பி.ஆர்.எல்.எஃப், டெலோ, இவர்களிடம் ஆண்பிள்ளைகளை பறிகொடுத்து விடுவோம் எண்டு இங்க வந்தா புதிய புதிய சட்டமெல்லாம் போட்டு ஜெயிலில் அடைக்கிறார்கள், சித்திரவதை செய்கிறார்கள். அதனால் இலங்கைக்கே போனாலும் பரவாயில்லை, எங்கட பிள்ளைகள் போராடியே சாகட்டும் என்று ஒருசிலர் இலங்கை செல்ல காரணமாயுள்ளது.

ஆண்பிள்ளைகளுக்கு பாதுகாப்பில்லை. அதனால் போகிறோம் என்று சொல்கிறார்கள்.

### இலங்கை அகதிகளின் அவலநிலை
### புதுக்கோட்டை மாவட்டம்

நாங்கள் இலங்கையில இருந்து வந்து இப்ப எங்கள புதுக்கோட்டை மாவட்டத்துக்கு பக்கத்து கிராமம் லேனா விளக்கு என்ற இடத்தில வச்சிருக்கிறாங்க. அந்த கேம்பில ஒரு வசதியும் இல்லை. 'ஆஸ்பெஸ்டாஸ்' கூரை போட்டு சின்ன ரூமாக அடைச்சுக் கொடுத்திருக்கினம். வெயில் வந்தா வெளியிலயும் இருக்க முடியாது. உள்ளயும் இருக்க முடியாது. கக்கூசு பத்தாது. கக்கூசு கட்டிக் கொடுத்திருக்கிறாங்க. ஆனா தண்ணீர் 'பைப்' இல்லை. இதனால் கக்கூசு சுத்தம் இருக்காது. பிள்ளைகளுக்கு ஏதாவது ஒரு வருத்தம் (நோய்) வந்து கொண்டே இருக்கும். எங்கட ஊரைவிட்டு இங்க வந்ததில பிள்ளைகளை அங்க 'ஆமி' யிட்டயும் (ராணுவம்) இங்க வருத்தத்திடமும் சாவு குடுத்துட்டோம். இப்படி சுத்தமில்லாம இருக்கிறதனால கிழமைக்கு ஒரு வருத்தம் வந்து கொண்டே இருக்கு. அம்மை நோய், கட்டி கட்டுது. வயிற்றாலடி, சத்தி (வயிற்றுப் போக்கு, வாந்தி) இப்பிடி வரும்.

அரிசி போடுறாங்கள். இந்த ஊர் பண்டி (பன்றி) கூட தின்னாம முகத்தை சுளிக்கும். வேற வழியில்லாம திண்டு தொலைப்போம். எப்பாவது வெள்ளையா அரிசி போட்டா 'இண்டைக்குத் தான் பொன்னி அரிசி போட்டிருக்கினம்' என்று நாங்கள் சந்தோசப்படுவோம்.



**வெளியேற்றப்படும் ஈழ அகதிகள்: இந்திய மேலாதிக்கத்துக்கு பலியாடுகளா?**

இப்ப மண்ணெண்ணை ஒரு மாசத்துக்கு 2 லிட்டர் தான். விளக்கு எரிக்கக்கூட பத்துதில்லை. திடீரென்று இலங்கைக்கு போகச் சொல்லி கையெழுத்து கேட்கிறார்கள். நாங்கள் கொடுக்கவில்லை. அங்க எங்கட வீடு. வாசலெல்லாம் அழிஞ்சு போச்சு. சிறுதொழில் செய்துதான் குடும்பம் நடத்தனும். அங்க போனா இப்போதைக்கு எங்களால பொழைக்கவே முடியாது. அங்க சாமான்கள் விலை எல்லாம் பயங்கரம். நாங்க இங்க வரும்போது எங்கட உசிரை கையில புடிச்சுக் கொண்டு வந்தோம். ஆனா இப்ப போ என்றால் நாங்கள் எங்க போறது. கையெழுத்து நாங்க போடமாட்டோம்

**கடிதத்தின் மூலம் அறியப்பட்ட இலங்கை நிலைமைகள்**

அரிசி 1 கிலோ - 50 ரூபாய்;
சீனி 1 கிலோ - 100 ரூபாய்;
ம.எண்ணை 1 லிட்டர் - 250 ரூ;
1 சோப் - 50 ரூபாய்.

உற்பத்திக்கான அடித்தளமே நொறுக்கப்பட்ட பிறகு அத்தியாவசிய பொருட்கள் வருவதற்கான தடயமே இல்லை. தேங்காய் எண்ணெயில்தான் விளக்கு எரிக்கின்றனர். மின்சாரமே இல்லை.

சோப் இல்லாததால், தலைக்கு பனம்பழத்தின் களியை எடுத்து தலைக்கு தேய்த்து குளிக்கிறார்கள். குளித்து விட்டு வரும் போது பனங்களி வாசனைக்கு மாடு விட்டு விரட்டுமாம். அங்கால ஓடினா ஆர்மிக்காரன் துரத்துறான். இங்கால ஓடினா மாடு. எதற்கு தப்புவதென்றே தெரியவில்லையென்று கண்ணீரோடு எழுதுகின்றனர்.

இன்னும் சாம்பல், கறையான் புற்று மண் இவையே அவர்களின் சோப்பாகவும் பயன்படுகிறது.

குறிப்பு: இவ்விலை உயர்விலும் இலங்கை மக்கள் ஏன் வாழ்கிறார்களென்றால் செஞ்சிலுவை சங்கங்கள் போன்ற சில, குறைந்த விலையில் சாமான்கள் கொடுக்கிறது.

என்று சொன்னா சொல்லுறான்கள். இப்ப போடுங்க; மேல முடிவு சொன்ன பிறகுதான் அனுப்புவேன் என்றார்கள். சரியென்று எழுதிக் கொடுத்தோம். இப்ப வந்து ஏறுங்கிறான்.

இந்தப் பிரச்சினை இப்ப வர காரணமே மண்ணாப் போவான், பாடையில போவான். அழிஞ்சு போவான் ராஜீவ் காந்திப் பயலால வந்த வந்த கேடு.

அவன் செத்த பிறகுதான் இப்ப சரியான கரச்சல். வெளியில வேலைக்கு போக விடுறான்கள் இல்லை. குடுக்கிற காசு பத்துதுமில்லை. 15 நாளைக்கு ஒருமுறை பெரியவர்களுக்கு 55, சிறுவர்களுக்கு 35 அல்லது 45 ரூபாய். இதையெல்லாம் நாங்கள் பாக்கும்போது இங்க இருந்து சாவுறத காட்டிலும் அங்க போயி சாவலாம் என்ற முடிவுக்கு நாங்களும் வரவேண்டியிருக்குது. ராஜீவ் காந்தி செத்தத கேட்டதும், நாங்கள் திடீரென்று சாமான் சட்டு, புள்ளை குட்டிகளை அள்ளிக் கொண்டு பொலிஸ்டேசனுக்கு ஓடினோம். போய் எங்களுக்கு பாதுகாப்பு கொடுங்க, ஊர்க்காரங்க எங்களை ஏதும் பண்ணிடப் போறாங்கன்னு; உடன அவன் ஒரு கிழட்டுப் பொலிச எங்களோட அனுப்பி திரும்ப கேம்புக்கு போகச் சொன்னான். நாங்கள் செத்தா சாவோம், இருந்தால் இருப்போம் என்று போனோம். அங்க காவலுக்கு வந்த கிழவன் குடிச்சிவிட்டு போதையில் நித்திரையாய்ப் (தூங்கிப்) போனான். அங்க என்ன நடந்தாலும் தெரியாது. இப்புடி எங்கள்ள கவனமே எடுக்கிறான்கள் இல்லை.

வெளியால சாமான்கள் சரியான விலை; எங்களுக்கு ஒரு மாதிரி விக்கிறான்கள், ஊர்க்காரங்களுக்கு ஒரு மாதிரி விக்கிறான்கள்; சாமான்களை விலை கூடினா எங்களை திட்டுகிறார்கள். நீங்கள் வந்தபிறகு தான் விலை கூடிப் போச்சு என்கிறார்கள். இந்த நிலைமைகளை பாக்கும்போது நாங்கள் ஊருக்கு போவதே சரியென பாக்குறோம்.

**புதிய ஜனநாயகம் (1-15மார்ச்'92)**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்கள்-

## சமகால எழுத்தாளர் பார்வைகள்

○ சூரியதீபன்

சமுதாயத்தின் புதிய நிலைமைகள், பெண்களிடம் சிந்தனை, வாழ்க்கை முறை, குடும்பத்தில் வகிக்கும் பாத்திரம் எல்லாவற்றிலும் மாறுதல்கள் கோருகின்றன. ஒரு 50 ஆண்டுகளுக்கு முன் உலவிய பெண், இன்று மடிந்து விட்டாள். பழைய குப்பைகளை கீழே போட்டு மிதித்து, அந்த இடத்தில் முற்றிலும் வேறு பட்ட புதுமைப் பெண் உருவாகி விட்டாள் என்று கூற முடியாது. சமுதாயத்தில் பாதியான பெண்கள் இனம் முழுதும், அப்படியொரு உருமாறுதலுக்கு வரும்போதே கூற முடியும். ஆனால் பழைய பெண் மடிந்து வருகிறாள்.

கணவன் மரவுரி தரித்து 14 ஆண்டுகள் வனவாசம், சீதைக்கும் வனவாசமாகிறது. ''நானும் காடேகுவேன்'' என மரவுரி தரித்து நிற்கிறாள். கம்பன் வடித்த கதாபாத்திரம் என்று சொல்வதை விட, கம்பன் காலத்துப் பெண் வெளிப்பட்டாள் என்பதே பொருந்தும். பெண்ணினத்தின் மீது குவிக்கப்பட்ட இந்த சாபங்களிலிருந்து, விமோச்சனம் தேடும் கேள்வி ஒரு பெண்ணிடமிருந்து பிறப்பதற்கு, ஆயிரம் வருடங்கள் தேவைப்பட்டது. ஆயிரம் வருடங்களின் சரித்திரம் ஓடிவிட்ட பின் அகலிகை கேட்கிறாள்.

''அக்கினிப் பிரவேசம் செய்ய ராமன் கேட்டாரா? நீ ஏன் செய்தாய்?''

''அவர் கேட்டார். நான் செய்தேன்'' என்றாள் சீதை அமைதியாக.

''அவன் கேட்டானா?'' என்று கத்தினாள் அகலிகை. அவள் மனதில் கண்ணகி வெறி தாண்டவமாடியது.

அகலிகைக்கு ஒரு நீதி, அவனுக்கு ஒரு நீதியா? ஏமாற்றா? கௌதமன் சாபம் குடலோடு பிறந்த நியாயமா?''

(புதுமைப்பித்தன் — சாபவிமோச்சனம்)

காலகாலமாய் ஆணின் குடலோடும், குருதி நாளத்தோடும் ஓடிக்கொண்டிருக்கிற சாபங்களிலிருந்து பெண்ணை மீட்டெடுக்க முதல் கேள்வி ஊசி.

''இப்போது நான் உன் கூட இருப்பது உனக்குச் சந்தோசம் கிடைக்கும் என்றுதான். உன் சந்தோசத்துக்கு மட்டுமே நான் வாழ முடியுமா? எனக்குன்னு நான் எப்போ வாழறது? என் சந்தோசத்துக்கு கல்யாணம் குறுக்கே நிற்கும்னா, நான் கல்யாணத்தை புறக்கணிப்பேனே தவிர, தொழிலை (வேலையை) புறக்கணிக்க மாட்டேன்''.

(ஒரு மனுஷி — பிரபஞ்சன்; பக்கம் 84)

அகல்யையின் முணுமுணுப்பு 50 ஆண்டுகளின் பின் உரிமையாக முன் வைக்கப்படுகிறது. நேருக்கு நேர் ஒரு ஆணைக் கேட்கும் நிகழ்வாக புது குணமாறுதல்.

இந்திய சமுதாயத்தில் பெண்ணுக்குத் தரப்பட்டுள்ள மிகப்பெரிய பாத்திரம் குடும்பப் பெண் என்பது. பெண் குடும்பம், சமையல், தாய், மனைவி என்றே நினைவுக்கு வருகிறாள். இன்றைய குடும்பப் படிமுறை அமைவுக்கு ஏற்ற ஒரு பெண், உடைமைச் சமுதாயத்திற்கு பொருத்தமான ஒரு பெண் நினைவுக்கு வருகிறாள்.

சமுதாயம் குடும்ப அமைவை பாதிப்பது போலவே, குடும்பம் சமுதாயத்திற்கு மறு சேவை செய்கிறது. இதனை 'எதிர் சேவை' என மக்கள் மொழியில் சொல்லலாம். மதுரை சித்திரைத் திருவிழாவின் போது, அழகர் மலையிலிருந்து இறங்கி வரும் கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கு முன், மக்கள் அவரை எதிர்கொண்டு சேவை செய்கிறார்கள். சமுதாயம் தொடர்ச்சியாக நடந்து வருகையில் அதனை எதிர்கொண்டு சேவை செய்வதற்கான மாந்தர்கள், இங்கேயும் நமது குடும்ப உறுப்பிலிருந்து தயாராக உருவாக்கப்படுகிறார்கள்.

அம்மா சமையல் செய்கிறாள், அப்பா வேலைக்குப் போகிறார் என்ற வாசகங்கள் சமீப காலம் வரை பாடப் புத்தகங்களில் கோடிட்டு இருந்தன. அம்மா வேலைக்குப் போய் வந்ததும் சமையல் செய்கிறாள் என்பது குழந்தைகளுக்கு அனுபவ ரீதியான பாடம். பிறகு அவர்கள் அதுவாகவே வளர்கிறார்கள். குடும்ப அமைவு, ஒரு பெண்ணிடம் மனைவியாவதற்கான மனோபாவத்தையும் ஆணிடம் கணவனாவதற்கான மனோபாவத்தையும் உருவாக்குகிறது. ஒரு ஆண் கணவனாகவும், ஒரு பெண் மனைவியாகவும் வளர்க்கப்படுகிறார்கள்.

''இக் காரணத்தினால்தான் திருமணமான அன்றே ஒரு இந்தியப் பெண் முன்பின் தெரியாத ஒரு ஆணுடன் சகஜவாழ்க்கை மேற்கொள்ளும் மனோநிலை உடையவளாக விளங்குகிறாள். பெரியோர்களால் கணவன் என்ற அந்த நபர் அவளுக்கு இனங்காட்டப்படுகிறான். மற்றவை அவளுக்கு ஏற்கனவே மனத்தளவில் மிடிந்துபோன விசயங்கள்''*1.

இவர்கள் இந்தச் சமூகத்தின் அச்சான பிரதிநிதிகள்; இந்தச் சமூகத்திற்கு பொருந்தும் மாந்தர்கள்.

''ஏற்கனவே சமூகம் தயார் நிலையில் வைத்திருக்கும் ஒழுங்குமுறை, பண்பு, நேர்மை, நியாயம் என்பனவற்றை முழுமையாக ஏற்றுக் கொண்டு, கடமை உணர்வுடன் ஆளும் வர்க்கத்திற்கு சேவை செய்யும் குடிமக்களாகத் திகழ்வார்கள்''*2

கதாநாயகனும், நாயகியும் (ஜானகி) ஒரு தனியார் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றுகிறார்கள். காதலித்து திருமணம் செய்து கொள்கிறார்கள். ஜானகிக்கு வேறு உயர்ந்த நோக்கங்கள் இருக்கின்றன. மேலும் கல்வி கற்பது, அறிவை வளர்ப்பது, கல்லூரிப் பேராசிரியராக ஆவது. இவை ஒரு பெண் தன்னை சுயமாக ஆக்கிக் கொள்வதற்கான தகுதிகளாகின்றன. இது அவர்களிடம் கருத்து வேறுபாட்டை உருவாக்குகிறது. அவன் தடை போட்டும் நிற்காமல் ஜானகி மேல்படிப்புப் படித்து, பம்பாயில் கல்லூரி ஆசிரியராகப் போய் விடுகிறாள். இருவரும் பிரிகிறார்கள். தந்தையின் அறிவுரை கேட்டு, நிச்சயிக்கப்பட்ட பெண்ணை மணந்திருந்தால் இத்தகைய அவமான வெட்டு தன்வாழ்வில் விழுந்திருக்காது என கதாநாயகன் சிந்திக்கிறான். மீண்டும் பெற்றோரிடமே போய்ச் சேர்ந்து, அவர்கள் ஏற்பாடு செய்யும் பெண்ணை மணக்கிறான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாழ்வு மணம் வீசுகிறது.*3

தா. பா. வின் இந்தக் கருத்தோட்டம், நிலவும் குடும்பப் படிமுறை அமைவை, உயர்ந்ததெனப் போற்றுகிறது. இந்தச் சமூகம் தயார் நிலையில் வைத்திருக்கும் ஒழுங்குமுறை, நெறி, பண்பு, மதிப்பீடுகளை மாறாமல் ஏற்றுக் கொள்ளும் குடும்ப உறுப்பை வரவேற்கிறது. பெண்ணின் கல்வி மேம்பாடு, அறிவுத்தேடல், கல்வி வளர்ச்சி, ஆணின் சுயநலத்திற்குத் தடை என்ற உணர்வை உருவாக்குகிறது. புதிய பண்புகளாக அமையும் காதல் மணமும், கலப்பு மணமும் மறுநாளே வாடிவிடும் மல்லிகை என்றும், மரபுத்திருமணம் என்றென்றும் மணம் வீசும் மரிக்கொழுந்து என்றும் உவமை சொல்லப்படுகிறது.

சனநாயகம், சமத்துவம் போன்ற பண்புகள் அரசியல், பொருளாதாரம் சம்பந்தப்பட்ட விசயங்களாகவே இன்றும் கருதப்படுகிறது. இவை அனைத்துத்துறை சம்பந்தப்பட்ட விஞ்ஞானப் பண்புகள் என இவர்கள் கருதவில்லை. எனவே ஆண் இன்னும் அவன் உடல்வலிமை காரணமாக மதிக்கப்படுகிறான். விவரிக்கப்படுகிறான். அதுபோல் பெண்ணின் பலவீனம், அவளுடைய உடம்பாகக் கருதப்படுகிறது. அவளுடைய பலவீனம் உடலியல்புகளாக, மென்மை, நளினம், அழகு, நாணம் என்பதாக முன்வைக்கப்படுகிறது. இன்னும் நமது கதாசிரியர்கள், கவிஞர்கள் பரம்பரையாக தான் ஒரு பெண் என்ற உணர்வு ஊட்டப் படவும், உணரவும் அந்த அளவிலேயே சிந்திக்கவும், செயல்படவுமான அவளது பலவீனம் என்று உணரவில்லை. அவளுடைய உடல் அமைப்போடு தொடர்புடைய விசயங்களாக சமாதானப் படுத்தப்படுகிறது, போற்றப் படுகிறது.

''விடியற்காலை குளிர் அம்மா மாதிரி. இந்த இருட்டே கூட அம்மா மாதிரிதான். ஆழ்ந்த அமைதி. பயமுறுத்தும் இருட்டாய் இல்லாது வானம் மட்டும் வெளிச்ச இதழ் பிரித்து பூமியைப் பார்த்து மெல்லச் செய்யும் புன்முறுவல். அம்மாவின் மெட்டி மாதிரி, கால் கொலுசு மாதிரி, பறவைகள் சப்தம் போடும். பட்டுப்புடவை மாதிரி, காற்று வீசும். தூங்குகின்ற பிள்ளையின் விசமங்கள் நினைத்து வாஞ்சையோடு சிரிக்கிற அம்மா மாதிரி வானம் புன்னகை செய்யும். ஈரம்பட்ட புழுதி ரோடு கூட மெத்மெத்தென்று அம்மாவை ஞாபகப் படுத்தும்''

''விடியற்காலை குளிர் அம்மா எனில், ஏஸி குளிர் என்ன மாதிரி... மனைவி மாதிரி. முன்னிரவில் களைத்துக் கட்டிலில் சாயும் போது பரமசுகம்... ஏஸி குளிர் முத்தமிடும், கால்களைக் குறுகுறுக்க வைக்கும்......''

(மாலை நேரத்து மயக்கம் - பாலகுமாரன்)

தாய்மை, பாலியல் இன்பம் இரண்டும் பெண்ணின் பண்புகள். தாய் என்ற ஸ்தானமும், மனைவி என்ற ஸ்தானமும் வேறு வேறு பண்புகளைக் கொண்ட ஒரே பெண் இவர்களது பார்வையில்.

தாய்மை, கற்பு, பாசம், பாலியல் சுகம் இவை பெண் உடம்பு ஒட்டிய விசயங்களாகப் பார்க்கப்படுகின்றது. தாய்மை என்பதும் அப்படித்தான் பார்க்கப்படுகிறது. 'பத்து மாதம் சுமந்து பெற்ற தாய்' என்று அறிவுள்ளவர்களாலும், 'பெற்ற வயிறு பற்றி எரிகிறது' என்று பாமர மக்களாலும் சொல்லப்படுகிறாள். அப்படியானால் தாய்மை, பாசம் என்பது பெண்ணின் கர்ப்பப்பை, வயிறு, மார்பகம் என்று பெண்ணின் உறுப்புகள் சம்பந்தப் பட்ட பண்பாக ஆகி விடுகிறது. உண்மையில் அவை அப்படித்தானா? ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவான பண்புகள் இல்லையா? ஒரு பெண், கருவை தனது வயிற்றில் ஏந்துகிற போதே, ஒரு தாயின் கடமைகள் தொடங்குவது போலவே, ஒரு ஆணின் கடமையும் தொடங்குகிறது. குழந்தை பிறப்புக்கு முன்பும், பின்பும், குழந்தையை குளிப்பாட்டுவதிலிருந்து வளர்ப்பது வரை ஒரு ஆணும் பங்கேற்க வேண்டும். நேரமும், உழைப்பும், உணர்வும் செலவழிக்கப்பட வேண்டும். குழந்தையிடம் தாய்ப் பண்புகள் கொண்டவனாக அவன் ஆகிறான். இங்கு, அந்தக் கடமை ஆற்றாத, சூழலும் பிரக்ஞையும் கொள்ளாதவனாக ஆண் இயங்குகிறான்.

பெண்ணின் இடத்திலிருந்து செய்திருந்தால் அவனுடைய பாசமும் அவளுக்குச் சமதையாகவே நிற்கும்.

அப்படியானால் எல்லா உணர்ச்சிகளும், பண்புகளும் பொதுவானவைதானா?

''ஆமாம், அப்படித்தான் அவற்றைப் பார்க்க வேண்டும். அப்போது யார் வேண்டுமானாலும், எந்த உணர்ச்சியை வேண்டுமானாலும் இயல்பாக்கிக் கொள்ளலாம்''

''பெண்களுக்கு என்று தனியாக ஒரு நோக்கு இல்லையா?''

''அது பெண்ணாய் பிறப்பதால் மட்டும் வரும் நோக்கு இல்லை. அது பிரக்ஞையால் வரும் நோக்கு. அவள் வாழ்வு, அவள் உடம்பு, அவள் பிரச்சினை, அவள் இடம், சூழல் இவை பற்றிய பிரக்ஞை. அவளுக்கும், வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பு பற்றிய பிரக்ஞை கறுப்பனுக்கும், அரிசனுக்கும் உண்டாகும் பிரக்ஞை போல''

(அம்பை — வீட்டின் மூலையில் ஒரு சமையலறை, பக்கம் 88)

பெண் மீது போர்த்தப்பட்ட அல்லது பெண்ணின் உளவியல் ரீதியான அடிமைத் தனங்களையே எழுத்தாளர்களும், கலைஞர்களும் போற்றிக் கொண்டிருக்கிறார்கள். தி.ஜா.ரா.வின் படைப்புக்களில் இத்தகைய மதிப்பீடுகளிலிருந்து திமிறி வெளியே வருகிற பெண்கள் உண்டு. பெண்ணளவிலான மீறல்கள் உண்டு. மீறலில் உளரீதியான அவளின் போராட்டங்களே விவரிக்கப்படுகின்றன. அவர்கள் தங்களளவில், இந்தத் தளைகளை உதறப் பார்க்கிறார்கள். சமுதாய நிலைமைகளுக்கும் இதற்குமான சங்கிலிகள் அவர்களுக்குத் தெரியாது. எனவே பழைய மதிப்பீடுகளை உடைக்க முனைந்து, அவர்களே உடைந்து போகிறார்கள். (நாவல்—மரப்பசு)

பாலியல் பிரச்சினைகள் மட்டுமே தி.ஜா.ரா.வின் பாத்திரங்கள். பாலியல் பிரச்சனைகள் அன்றி பெண்களுக்கு மற்ற பிரச்சனைகள் இல்லை என்பதே தி.ஜா.ரா.வின் கணிப்பு.

**ஆண் இன்னும் அவன் உடல்வலிமை காரணமாக மதிக்கப் படுகிறான். விவரிக் கப்படுகிறான். அது போல் பெண்ணின் பலவீனம் அவளுடைய உடம்பாகக் கருதப் படுகிறது.**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

## II

பெண்ணின் உடலும், உடல் பற்றிய அவளின் உணர்வுகளும் ரசிப்புக்குரியதாக, பெண் மீதான லயிப்புக்களாக சமகால எழுத்தாளர்களால் பார்க்கப்படுகின்றன. முந்திய தலைமுறை எழுத்தாளர்கள், யதார்த்த மாக பார்க்க முயன்றதும், வணிகக் கலப்படம் இல்லாத, தீவிர படைப்பாளிகளாக இருந்ததும், இன்றைய தலைமுறை அதை உதறிவிட்டதும் காரணம். பேர் பார்க்கும் ஆசை, புகழ் தேடும் வேட்கை, பணம் சேர்க்கும் உத்தி. ஏற்கனவே இவர்களுக்கிருக்கும் கண்ணோட்டத்தை இன்னும் மலினப்படுத்தி விடுகின்றன.

உரிமை கோரும் புதுமைப் பெண்களைப் படைக்கும் போது கூட, பெண்ணை உடம்பு ரீதியாக பார்க்கிறார்கள். உரிமைக் குரல்களி னூடே, பழைய பார்வையும் விட்டுப் போகா மல் வருகிறது.

விஞ்ஞானத்தின் வளர்ச்சி, சமுதாயத்தில் மிகப்பெரிய மாற்றங்களை முன்கொண்டு வந்துள்ளது. புரட்சிகளும், புதிய மாற்றங் களும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. சமுதாயத் தின் குண அளவில் மட்டுமல்ல; மனிதனின் பண்புகளிலும் மாறுதலை விளைவித்துக் கொண்டிருக்கிறது. மனித வாழ்வில், சமுதாய இயக்கத்தில் விஞ்ஞானம் ஆற்றும் பாத் திரத்தை, விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளை அறிமுகப்படுத்தும் சுஜாதா பெண்ணை பெண்ணாகவே காண்கிறார். பழைய பெண், வீட்டின் சமையலறை மூலை என்றால் சுஜாதாவின் பெண் கம்ப்யூட்டர் ஏ.சி. அறை. குளித்து தலை முழுகி, முன்னால் குங்குமம் சுமந்து, பின்னால் பூ சுமந்து 'லட்சுமி' கர மாய் பழைய பெண். ஜீன்ஸ் பேண்ட், சர்ட் அணிந்து சுஜாதாவின் புதுமைப் பெண். ஆனால் உடம்பு மட்டுமே கொண்டவள். பாலியல் உறவுக்கு மட்டுமே உருவாக்கப்பட்ட வள். அவளுடைய உடம்பும், உழைப்பும் பழமைக்குத் தேவைப்பட்டதென்றால், இப்போது அவைகளுடன் அவளுடைய மூளைத் திறனும் முதலாளியத்திற்குத் தேவை.



முதலாளித்துவ உலகம், தொழில் நுட்பம், சிந்தனை, பண்பாட்டுக்குப் பொருத்தமான உடம்பாக பெண்களைக் காண்கிறார்.

விஞ்ஞானக் கதை, மர்மக் கதை, கொலைக் கதை, துப்பறியும் கதை — (ராஜேஷ்குமார், பட்டுக்கோட்டை பிரபாகர் வகையறா) இவை எல்லாமே இந்தப் பார்வைக் கதைகளே.

ஒரு ஆணும் பெண்ணும் பழகுவது காதல் வயப்பட்டதாகவே இருக்க முடியும். அல்லது கணவன், மனைவியாக இருக்க முடியும். அதற்கப்பால் எந்த உறவும் இல்லை என்று இந்திய சமுதாயம் கருதுகிறது. எழுத்தாளர் களின் கண்ணோட்டமும் அப்படியே.

ஆண் — பெண் உறவுகளில் நட்பு என்பதே இல்லை. அது காதல் உறவு மட்டுமே. பெரும்பாலான எழுத்தாளர்களிடமும், இந்தக் கருத்தோட்டமே தங்கியிருப்பதால், 100-க்கு 75 கதைகளில் இளம் பருவத்தினர் மட்டுமே கதாபாத்திரங்கள். காதல், ஆண், பெண் விழைவு தொடாமல் வருவதில்லை.

பூமணி, வீர. வேலுச்சாமி, அஸ்வகோஷ், பாவண்ணன், கந்தர்வன், சுப்ர பாரதி மணியன், தமிழ்ச் செல்வன், கோணங்கி, கிருஷி, கோபி கிருஷ்ணன், ராஜம் கிருஷ்ணன் போன்றவர்கள் விதிவிலக்கு. இவர்கள் மனித உறவுகள் அனைத்தையும் தீண்டி எழுதுகிற வர்கள்.

''நான்சி, நா ஒன்னு சொல்றேன். நம்ம தொடர்ந்து பழகனும். நீ என்னை ஒரு நல்ல 'ப்ரண்டா' நெனைச்சிக்கோ. ஒங் கஷ்டத்தக் கேட்டதும் என் துக்கமெல்லாம் பறந்து போயிருச்சி. வா 'மெரினா கேண்டீனிலே' சாப்பிடுவோம். நாம் சந்திச்ச இந்த தினத்தை தோழமை தினமாகக் கொண்டாடுவோம்...... நா ஒம்மேல எந்த ஒரு விசேஷ சுதந்திரத் தையும் எடுத்துக்க மாட்டேன். இன்னும் பச்சையா சொல்லப் போனா, நா ஒன்ன நிச்சயமாகக் காதலிக்க மாட்டேன்.''

(கோபி கிருஷ்ணன் — நிகழ்)

ஒரு ஆண் பெண்ணிடம் காட்டும் அன்பு காதலாக மட்டுமே இருக்க முடியும் என்ற பழைய மதிப்பீடுகளை இவர்கள் உடைக்கிறார் கள். எழுத்தாளர்களின் செக்குமாடு மனோ பாவங்களை களைந்தெறிகிறார்கள்.

பெண் அன்பு, கருணை, தியாகம் மிக்கவள். அவளது தியாகம், அன்பு, பரிவால் ஆண் திருத்தப்பட வேண்டியவன் என்று ஆணுக்கு எல்லாச் சலுகைகளையும் தந்து, பெண்கள் தங்களது தியாகத்தால், காதலால், அன்பால், தாய்மையால் அவனை மேம்படுத்துவதாகக் காட்டுபவை சிவசங்கரி, இந்துமதி கதைகள்.

பெண் பற்றி ஆண் மனதில் இயல்பான படிவங்கள் பெண்ணை விடுதலைப்படுத்தும் குரல்களாக ஒலிக்கவில்லை. இதன் தாக்க மாக, பாதிக்கப்பட்ட பெண்ணின எழுத்தாளர் கள் அந்தக் குரலை ஒலிக்க ஆரம்பித்திருக் கிறார்கள். பெண்ணுரிமை இயக்கங்களின் வளர்ச்சி, முதலாளித்துவ நாடுகளின் பெண் நிலைவாதம், முற்போக்கு இயக்கங்கள் ஊட்டிய விழிப்புணர்வு பின்புலத் தூண்டுதல்களைத் தந்தன.

பெண்களின் பிரச்சினை, சமூகப் பிரக்ஞை கொண்ட எவருக்கும் பொதுவானது. கலை, இலக்கியத்துறைகளில் முன்னிற்கும் கலைஞர்கள் தீவிர நோக்கு கொள்ளவில்லை. பெண்களுக்காக பெண்களே குரல் கொடுத்தல், மற்ற துறைகளைப் போலவே, இங்கும் மேலெழுந்துள்ளது. அம்பை, ராஜம் கிருஷ்ணன், ஜோதிர்லதா கிரிஜா, பிரசன்னா ராமசாமி சொல்லாத சேதிகளின் கவிஞர்கள்— என்று, பெண்களின் பிரச்சினைகளை அவர்களே எழுது கிறார்கள். இவர்கள் பெருவாரியாகத் தொடுகிற அளவுக்கு பெண்கள் பிரச்சினை கள் வேறு எந்த எழுத்தாளர்களின் வேலைத் திட்டத்திலும் இல்லை.

'சொல்லாத சேதிகள்' — கவிதைத் தொகுப்பு — ஒரு புதிய போக்கில் ஒரு புதிய சேதியாக வெளிப்பட்டுள்ளது. தமிழில் இது வரையிலும் எழுதப்படாத கவிதைகள் இவை.

தமிழகக் கல்வி நிலையங்களில் 15 ஆண்டு களாக உயராமலிருந்த ஊதியத்திற்காக 45 நாட்கள் விரஞ்செறிந்த போராட்டத்தை ஆசிரியர்கள் எடுத்தார்கள். போராட்ட எழுச்சி புதிய முறைகளைக் கற்றுத் தந்தது. ஆசிரியை கள் கைக் குழந்தையுடன், குடும்பத்துடன் போராட்ட முன்னணியில் நின்ற போது, அவர் களைக் கைது செய்யவும் முடியாமல், துரத்த வும் முடியாமல் அதிகார வர்க்கத்தை திணற அடித்தார்கள்.

'மக்களே கவனித்துக் கொள்வார்கள்' என்று, அரசியல் கட்சிக் குண்டர்களை ஏவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விட்டு சிதைக்கப் பார்த்த எம்.ஜி.ஆரின் சர்வாதிகாரமும், ஆசிரியர்களின் போராட்டத்தின் முன் வில் முறிந்தது. போராட்டத்தின் விளைவு, அனைவருக்கும் பழைய பாக்கித் தொகையுடன் ஊதியஉயர்வு கிடைத்தது. அதில் ஒரு டி.வி. வாங்க வேண்டுமென்று கருதிய விருப்பம் கொண்ட பேராசிரியை பத்மா, மீதித் தொகை வந்தால் தன் ஆராய்ச்சிக் கட்டுரையை புத்தகமாகப் போடவேண்டுமென்று கருதிய வசந்தா இருவருமே தோற்றுப் போகிறார்கள். ஒரு வீட்டில், டி.விக்குப் பதில் கணவரின் கௌரவத்தைக் காப்பாற்றும் மோட்டர்பைக் காக. மற்றொரு வீட்டில் ஆணுக்குரிய வேறொன்றாக மாறிப் போகிறது. அவர்கள் போராட்டத்தில் வீராங்கனைகள்; வீட்டில் பெண்கள் மட்டுமே.

''உனக்குத் தயக்கமா இருக்குன்னு நினைக்கிறேன். அதனால நான் சொல்றேன். அவங்க மாதிரி நாம பொருளாதார சுமையைச் சுமக்கலாம். இருந்தாலும் இலட்சுமணன் வரைந்த கோடாய் எத்தனை தடைகள் நமக்கு? நீ புத்தகம் வெளியிடனும்னு ஆசைப்படலாம். நிறைவேற்ற முடியறதாக் கூட இருக்கலாம். ஆனால் அதை நீ மட்டும் நினைத்தால் முடியாது; இப்ப நான் ஏன் டி.வி. வாங் கலேன்னு புரியுதா?''

பிரேமா அருணாசலம்
('நெல்லுச்சோறு' தொகுப்பு- பக்.56)

பெண்ணை ஆபாசப்படுத்தும் பத்திரிகையை மனதாலும் கண்களாலும் கவ்விச் சாப்பிட்டு காலரா நோயை மனசில் பெருக்கும் பஸ் பயணிகளை, செத்த பெருச்சாளியைக் கவ்வி இழுக்கும் நாய்களுக்கு ஒப்பிடும் இந்திரா பவானியின் மற்றொரு சிறப்பான கதை அதே தொகுப்பில்.

இவர்களிடம், பெண்ணை உடம்பாகக் காணும் பேய் மனதை காலால் உதைக்கும் ஆவேசம், யதார்த்தமாய்ப் பொங்கிப் பெருகுகிறது.

## III

பெண்கள் அவர்களுடைய குரல்களை ஒலிக்க ஆரம்பித்தார்கள்; அவர்களின் போராட்ட ஆயுதங்களை எடுக்கத் தொடங்கினார்கள். ஒவ்வொரு பெண்ணும் நசுக்கப் படுகிறபோதும், அவளின் எதிர்ப்பு, அவளின் அழுகை, அவளின் குரல் மட்டுமே ஒலித்தது. நீண்ட காலமாய் அந்த ஈனக்குரல்கள் வரலாற்றின் சுவர்களில் மோதி மோதி விழுந்தன. குடும்பச் சுவர்களின் உயரத்தை தாண்டி மேலே வரமுடியாமல், சமையலறைகளின் மூலைகளில் மோதிக் கருகின. ஒவ்வொரு வீட்டின் சமையறையும், படுக்கையறையும் சுவர்கள் லேசாய்த் தட்டப்படுகிறபோது, உள்ளிருந்து ஆயிரமாயிரம் ஆண்டுகளாய், லட்சோபலட்சம் பெண்களின் வீறிடும் குரல்கள்.

பெண்நிலை அவலமாக இருக்கிறதால், அவலத்தின் மீதான கேள்விக் குறிகள், சமுதாயப் போராட்டமாக மாற்றப்பட வேண்டும். மனுச இனம் மொத்தத்துக்கும் உரிய பிரச்சனையாக மேலெடுக்கப்பட வேண்டும். ஆனால் ஆண் எதிர்ப்பு சீர்திருத்தக் குரலாகவே வெளிப் பட்டது.

ஆணாதிக்கத்தை எதிர்த்து, குரல்கள் மையம் கொண்டன. பெண்நிலைவாதம் இந்த இடத்தில் வேர் விட்டது.

''ஒவ்வொரு பெண்ணும், இன்னொருத்தியின் கண் அடியின் கருவட்டங்களைத் தடவ வேண்டும். பிரசவக் கோடுகளில் உள்ளங் கைகளை வைக்கவேண்டும். புடைத்த நரம்புகளில் விரலை வைக்கவேண்டும். வெடித்த கால்களை கைகளில் ஏந்தவேண்டும்''*4

ஆணாதிக்க எதிர்ப்பில் ஊன்றி எழும் பெண்ணிலைவாதக் குரல் இது.

பெண் அடக்குமுறைக்கு உள்ளானவள். இந்தச் சமூகத்தின் வர்க்கப் பிரிவுகளுக்குள்ளும் ஒரு வர்க்கப் பிரிவாக அவளிருக்கிறாள். எனவே கூடுதல் அடக்குமுறைக்கு உட்பட்ட வள். ஆண்சமூகம், பெண் சமூகம் எனப் பிரிந்து கூடுதலாகவும் அவள் மீது அடக்குமுறை பிரயோகிக்கப்படுகிறது. இவை அத்தனைக் கும் இந்த சமூகக் கூறு காரணம்; உடமைச் சமூக அமைப்பு அடிப்படை.

சமூகப் பிரச்சனையை முன்வைத்துப் பணியாற்றும் ஆண்தலைமை கொண்ட முதலாளித் துவ அரசியல், சனநாயக இயக்கங்கள், சீர்திருத்த இயக்கங்கள் பெண் விடுதலையை சமூகப்பிரச்சனையின் அம்சங்களாகக் காணாமல் நிராகரித்தன. இதனால் வெறுப்புற்ற பெண் நிலை அமைப்புக்களும் சமூகப் பிரச்சனையின் அம்சமாகக் காணவில்லை.

பெண்ணின் வேதனையை பெண்ணே உணர்ந்துகொள்ளமுடியும் என்பது சரியானது. வர்க்கமும் வாழ்நிலையும் ஒன்றாயிருப்பதால், உணர்தலும் சிந்தனையும் ஒத்ததாக இருக்கும். ஆனால் பெண்விடுதலை என்று வருகிறபோது, அது போராட்டமாக உருக்கொள்ளவேண்டியது. ஆணாதிக்கத்தை எதிர்த்த போராட்டத்தினூடேயே, இந்தச் சமூக அமைப்பை எதிர்த்த போராட்டமாக மாற்றி எடுக்கப்படவேண்டியது. பெண்ணை அடிமையாக வைத்திருப்பதில் ஆணாதிக்கத்திற்கே அடிப்படையான பொருளியல், அரசியல், வர்க்க சமூகம் என்ற மையங்கள் பிரதானமானவை. அம்பையின் 'கறுப்புக் குதிரைச் சதுக்கம்'— பெண்நிலைவாதத்திற்கு முன்மாதிரியான கதை.

ரோஸா— போலீஸ் வெறியர்களால் மாற்றி, மாற்றி குதறப்பட்டதைக் கண்டித்து பெண்கள் எழுச்சி, ஊர்வலம், கூட்டம் கிட்டமிடப்படுகிறது. பலவண்கயான பெண்கள் அமைப்புக்கள், குழுக்கள். 'பெண்களைத் தெய்வமாகப் போற்றுங்கள்' என்ற மேற்கோள்களுடன் வந்த பெண்கள் குழு—

ஊர்வலத்தை ஏற்பாடு செய்து நடத்தும் மீனாவின் சர்ட் காலரைப் பிடித்து உலுக்கி— ''பாண்ட் — ஷர்ட் போட்டுக் கொண்டு பெண்களுக்கு ஆதரவு தேடாதே. புடவை கட்டு'' என்று அவள் ஷர்ட் காலரை கிழித்த குழு— அவர்கள் புடவை கட்டியிருந்தாலும் அவர்களுக்கும் தெய்வத்தன்மைக்கும் இடையே மீனாவின் கிழிந்த காலர் தூரம் இருந்தது என்று அம்பையே விவரிக்கிற பழமைவாதிகளான பெண்கள் குழுவை— போராட்டத்தில் இணைத்துக் கொள்கிறார்கள்.

''நல்ல கிறித்துவர்களே! பெண்களை உதாசீனம் செய்வது, ஏசுவுக்கு துரோகமிழைப்பது. ஏசுவின் பக்கம் வாருங்கள். பெண்களைக் கருணையுடன் நடத்துங்கள்'' என்ற அட்டையுடனும், பிரசுரத்துடனும் வந்த கிறித்துவ மாதுவைச் சேர்த்துக்கொள்ளத் தயாராக இருக் கிறார்கள்.

ஆனால் இந்தக் கொடுமையை எதிர்த்துப் போராட முன்வரும் எந்த ஆண்கள் சம்பந்தப் பட்ட அமைப்புகளையும் தங்களோடு இணைத் துக் கொள்ள அவர்கள் தயாராக இல்லை.

சமூக, அரசியல், பொருளியல், வர்க்க மையத்தை புறக்கணித்து, ஒரு பிரச்னையை தனியாக மட்டுமே காணும் முதலாளியச் சிந்தனை, முதலாளித்துவ ஜனநாயக இயக்கங்களின் செயல்பாடு ஆகியவற்றிலிருந்து பெண் நிலைவாத் இயக்கம் கருக்கொண்டது என்பதைக் காண வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உழைக்கும் மகளிரின் வர்க்க நலன்களும், முதலாளித்துவ மகளிர் இயக்கத்தின் வர்க்க நலன்களும் ஒன்றானவை அல்ல. இரண்டையும் ஒன்றாக சமப்படுத்தி, பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. அவற்றுக்கிடையே உள்ள பொதுவான அம்சம் மக்கள் சனநாயகத்திற்கும் முதலாளித்துவ சனநாயகத்திற்கும் இடையில் நிலவும் அம்சம் தானே, தவிர வேறில்லை. வர்க்கங்களாகப் பிளவுண்டிருக்கும் சமுதாயத்தில், உழைக்கும் வர்க்க மகளிர் இயக்கமும், முதலாளித்துவ மகளிர் இயக்கமும் வேறுவேறாக, நலன்கள் அடிப்படையில் மட்டுமே இருக்கமுடியும். பெண்நிலைவாதம், ஆணாதிக்க எதிர்ப்புக் குரலோடு மட்டுமே தன்னை நிறுத்திக்கொண்டு அதற்கான சில உரிமைகளின் எல்லைகளுக்குள் தன்னைக் குறுக்கிக்கொள்கிறது. முதலாளித்துவ சமுதாயத்தின் சுரண்டல் உறவுமுறைகளை சேதமுறாமல் அப்படியே விட்டு வைப்பதால் ஒரு முதலாளித்துவ மகளிர் இயக்கத்தின் பங்கை ஆற்றுகிறது என்பதைக் கவனிக்க வேண்டும்.

"பெண்களின் நிலைமையையும், அவர்களின் வாழ்க்கை முறையையும் தீர்மானிப்பது, அவர்கள் எந்த வர்க்கத்தின் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்பது தானேயொழிய ஆண்களின் ஆதிக்க நிலைக்குப் பணிந்து போகும் விதத்தில் ஒடுக்கப்பட்டு, எந்தவித உரிமையும் இல்லாத நிலைக்குத் தள்ளப்பட்ட அவர்களது பாலினச் சமூகப் பிரிவால் அல்ல. எனவே முதலாளித்துவ மகளிர் இயக்கங்கள் கோரும், "இரு பாலினருக்குமிடையேயான சட்டரீதியான சமத்துவத்தால்" கிடைக்கும் உரிமையும் சமத்துவமும் ஒடுக்கப்பட்ட உழைக்கும் மகளிரைப் பொறுத்தவரை, ஒரு கண்துடைப்பே. ஒடுக்கப்பட்ட வர்க்கத்தைச் சார்ந்த ஆண்களுக்கு எந்த அளவுக்கு வழங்கப்பட்டுள்ளதோ, அந்த அளவுக்குச் சிறியதே"*5

---

*1 *ராமமூர்த்தி ரவீந்திரன்— காலச்சுவடு ஜூலை-88*

*2 *மேற்படி.*

*3 *மரிக்கொழுந்து—நா. பார்த்தசாரதி*

* 4. *அம்பை வீட்டின் மூலையில் ஒரு சமையலறை. பக்கம் 74.*

* 5. *கிளாரா ஜெட்கின்- மகளிர் விடுதலை இயக்கங்கள் பக்-4.* (கேடயம் வெளியீடு)

மனஓசை (பெப்ரவரி 1990)

மே - யூன் மாதத் "தூண்டில்"...

* கலியாணம் கட்டாததால் நாடுகடத்தல்!

** கொள்ளிமலைக் காடு.

*** நானும் எனது முகமும்.

# இரவல் தூண்டில்

தொகுப்பு: கடலோடிகள்

✉: THOONDIL
Südasien Büro
Grosse Heim Str. 58
46oo Dortmund 1
Germany

☎ :(o231) 13 66 33
(திங்+வெள்ளி: 16.00-21.00மணி.
புதன்: 14.00-18.00 மணி)

## சந்தா

ஜேர்மனி: 6 மாதங்கள் = 20,-டி.எம்.
1 வருடம் = 38,-டி.எம்.

ஐரோப்பா:
6 மாதங்கள் = 25,- டி.எம்.
1 வருடம் = 48,-டி.எம்.

அமெரிக்கா,ஆபிரிக்கா,ஆசியா:
1 வருடம் = 65,-டி.எம்.

அவுஸ்திரேலியா:
1 வருடம் = 75,-டி.எம்.

தபாற்கணக்கு இல. 3o8 o7 468
Postscheckamt Dortmund
BLZ 44o 1oo 46

---

*சஞ்சிகை வளர்ச்சிக்கான உதவிகளில் ஒன்றாக உங்கள் சந்தா நிதியை அனுப்பி வைத்ததும் எமக்கு கடிதம் மூலம் அறிவியுங்கள்.*

---

*இத் தொகுப்பில் பிரசுரமாகும் கருத்துகள் யாவற்றுடனும் தொகுத்தவர்களுக்கு முழு உடன்பாடு இருக்க வேண்டுமென்பதில்லை.*

---

தவிர்க்க முடியாத காரணத்தினால் "செய்திக் குறிப்பு" இத் தொகுப்பில் இடம்பெறாமைக்கு மன்னிக்க வேண்டுகிறோம். அடுத்த கலத்திலிருந்து மீண்டும் தொடரும். - கடலோடிகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# 'தேசிய சக்தி' பற்றிய சில பிரச்சினைகள்

**— ஏகலைவன் —**

இன்றைய யுத்தத்தில் புலிகளை எவ்வாறு மதிப்பிடுவது என்பது தொடர்பாக பல வாதப்பிரதிவாதங்கள் கடந்த சில காலமாகவே நடைபெற்று வருகின்றன. ஒரு பகுதியினர் புலிகளை பாசிச சக்தியாக இனங் கண்டு அதனை அழிப்பதே பிரதான பணி என்ற வகையில் செயற்படுகின்றார்கள். இன்னோர் பகுதியினர் புலிகளின் போராட்டத்தில் உள்ள தேசிய அம்சங்களைக் கருத்திற் கெடுத்து அதனை தேசிய சக்தியாக இனங்கண்டு அதனைப் பலப்படுத்தும் அளவிற்கு செல்கிறார்கள்.இந்த இரண்டு நிலைகளுக்கும் இடைப்பட்ட நிலைப்பாடுகளை பல்வேறு சக்திகள் மேற்கொள்கின்றன. இன்று தீவிரம் அடைந்து வரும் யுத்த நிலைமையில் ஒவ்வொரு அமைப்பும் தனது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு முன்பு புலிகள் பற்றிய தனது நிலைப்பாட்டை வகுத்துக்கொ ள்வது அவசியம் என்பதால் தேசிய சக்தி தொடர்பான பலதரப்பட்ட வாதப்பிரதிவாதங்களையும் பரிசீலிப்பது அவசியமானது. தேசிய சக்தி தொடர்பான பல்வேறு நிலைப்பாடுகளையும் பரிசீலிப்பதற்கு முன்பு தேசியம் என்பது பற்றி ஒரு தெளிவான வரையறையை கொண்டிருப்பது அவசியம் என்பதால் நாம் முதலில் முகம் கொடுக்கும் பிரச்சினை, தேசியம் என்பது என்ன? என்பதாகும்.தேசியம் என்பது ஒரு வரலாற்றுப் பூர்வமான நிகழ்வாகும். முதலாளித்துவத்தின் தோற்றத்துடன் உருவாகும் விரிவான பண்ட உற்பத்தியானது ஒரு பாரிய சந்தையை வேண்டி நிற்கிறது. இதனால் அதுவரையில் நிலவிவந்தசிறுபண்ட உற்பத்தியிற்கு பொருத்தமான குறுகிய,தன்னிறைவு கிராமிய பொருளாதார முறையும் அதனுடன் இணைந்த சமூக இனங்காணலும் சிதைந்து புதிய வகையிலான இனம்காணல் உருவாகிறது . பரந்த,விரிவான பிரதேசத்தில் தொடர்ச்சியாக வாழும், ஒரே மொழியையும், பொதுவான கலாச்சாரத்தையும் கொண்ட மக்கள் பழைய கிராமிய இனங்காணலை கடந்து தேசிய இனங்களாக தம்மை இனம்காண முனைகின்றன. இதுவே தேசியத்தின் தோற்றமாகிறது. இவ்வாறு முதலாளித்துவத்தின் ஆரம்பகால கட்டத்தில் தேசிய இனங்கள் விழிப்படைகி ன்றன.இந்த தேசிய எழுச்சியானது நடப்பில் இருந்து வரும் நிலப்பிரபுத்துவ உற்பத்திமுறை, ஆதிக்க முறைகளுக்கும், நிலப்பிரபுத்துவ சமூகத்தின் குறுகிய உணர்வுகளுக்கும் எதிரானது என்பதால் இது இயல்பாகவே நிலப்பிரபுத்துவ எதிர்ப்புத்தன்மை கொண்டதாகவும்,முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை நோக்கி இட்டுச் செல்வதால் வரலாற்றில் முற்போக்கானபாத்திரம்வகிப்பதாகவும் இருக்கிறது.

முதலாளித்துவமானது இன்னும்வளர்கையில்மூலதனமும், சந்தையும் குறிப்பிட்ட தேசிய இனத்தின் எல்லைகளை கடந்து ஏனைய தேசிய இனங்களின் மூலதனம், உழைப்பு, சந்தை ஆகியவற்றுடன் கலக்கும் நிலைமை உருவாகிறது. இந்தவகையான பொருளாதார நிலைக்கு பொருத்தமான சமூக உணர்வாக தேசிய இனங்கள் ஒன்று கலப்பது எனும் நிகழ்வு தோன்றுகிறது.

ஆகவே தேசியம் என்பது முதலாளித்துவத்தின் வளர்ச்சியுடன் இரண்டு திட்டவட்டமான இயக்கப்போக்குகளை காட்டுகிறது. முதலாளித்துவத்தின் ஆரம்பகாலத்தில் தேசிய இனங்கள் விழிப்படைவது ஒரு கட்டம். முதலாளித்துவம் முதிர்ந்த நிலையில் தேசிய இனங்கள் ஒன்று கலப்பது இன்னோர் கட்டம் ஆகும்.

காலனித்துவத்திற்கு உட்பட்ட நாடுகளின் தேசிய எழுச்சியானது ,முதலாளித்துவம் இயல்பாக தோன்றி வளர்ந்த நாடுகளில் ஏற்பட்ட தேசிய எழுச்சியில் இருந்து வேறுபட்டதாகும். காலனிஆதிக்கத்தை முன்னெடுக்கும் வளர்ந்த முதலாளித்துவ நாடுகளின் உடனடி நோக்கம் ஏனைய நாடுகளை சுரண்டுவதும் கொள்ளையடிப்பதுமேயாகுமிந்த நோக்கத்திற்கு பொருத்தமான விதத்தில் ஆதிக்க் நாடுகள்காலனி நாடுகளின் பொருளாதார அமைப்புகளை, தனக்குச் சேவை செய்யும் விதத்தில் மாற்றியமைக்கின்றன. காலனி நாடுகளில் முதலாளித்துவம் சுயமாக வளர்வதை தடுத்து காலனிநாடுகள் தனது முதலாளித்துவ உற்பத்திக்கு சேவையாற்றும் விதத்தில் மலிவான மூலப்பொருட்களை விநியோகிக்கவும், தனது உற்பத்திப் பொருட்களுக்கு இலாபகரமான சந்தையாகவும் அமையும் விதத்தில் மாற்றி விடுகின்றன. உள்ளூர் உற்பத்தி முறைகள் திட்டமிட்டு சிதைக்கப்படுகின்றன. தமது உற்பத்திப் பொருட்களுக்கான சந்தையை செயற்கையான முறையில் உருவாக்கப்படுகின்றன. இதன் மூலம் காலனி நாடுகளின் பொருளாதாரத்தை தனது நாட்டின் முதலாளித்துவ உற்பத்தி முறையுடன் பலவந்தமாக பிணைத்து விடுகின்றனர். இப்படியாக ஆதிக்கநாடுகளின் நலன்களுக்கு கீழ்ப்பட்ட விதத்திலேயே உள்ளூர் முதலாளித்துவம் தோன்றவும், வளரவும் ஆதிக்க நாடுகள் அனுமதி அளிக்கின்றன.

இப்படிப்பட்ட சாதகமற்ற நிலையிலேயே காலனிநாடுகளில் முதலாளித்துவம் தோன்றி மெதுவாக வளர்கிறது. இவ்வாறு மெதுவாக வளர்ந்து வரும் முதலாளித்துவமானது தனது வளர்ச்சியின் ஒரு கட்டத்தை அடைகையில் அது ஆதிக்க நாடுகளின் நலன்களுடன் நேரடியாக முரண்படத் தொடங்குகிறது. இந்த நிலையில் ஆதிக்க நாடுகளின் பிடியில்இருந்து விடுதலை பெறுவது காலனி நாடுகளின், முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கு அவசியமாகிறது. இதனால் தேசிய முதலாளித்துவ வர்க்கமானது ஆதிக்க சக்திகளின் சுரண்டலினாலும்,ஒடுக்கு முறையினாலும் பாதிக்கப்பட்டு ஏற்கனவே வெறுப்புற்றிருக்கும் ஏனைய வர்க்கங்களையும் இணைத்துக் கொண்டு காலனி ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தில் குதிக்கிறது. காலனி நாடுகளில் தேசியமானது ஆதிக்க நாடுகளுக்கு எதிரான போராட்டத்தில் பிறக்கிறது. இந்த நிலையில் ஆதிக்க நாடுகளில் பொருளாதாரத்துடன் தம்மை நெருக்கமாக பிணைத்துக் கொண்டுள்ள உள்ளூர்தரகு முதலாளிகளைப் பொறுத்தவரையில் ஆதிக்க நாடுகளை எதிர்ப்பது என்பது அதன் பொருளாதாய நலன்களுக்கு முரணானது என்பதால் இந்த வர்க்கமானது ஆதிக்க நாடுகளுக்கு விசுவாசமாக செயற் படுகிறது. இதனால் தேசிய சக்திகளின் இலக்குகளில் ஒன்றாகிறது. நிலப்பிரபுத்துவ வர்க்கங்கள் ஆதிக்க நாடுகளால் பாதுகாக்கப்படும் வர்க்கங்களாக இருப்பதனாலும், தேசிய எழுச்சியின் மூலம் தேசிய முதலாளி வர்க்கமும் ஏனைய சுரண்டப்படும் வர்க்கங்களும் தனது ஆதிக்கத்திற்கு முடிவு கட்டிவிடும் என்பதாலும் இந்த வர்க்கமும் தேசிய விடுதலைக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்கிறது.ஆகவே தேசிய விடுதலை இயக்கத்தில் தேசிய முதலாளிகள்,குட்டி முதலாளிகள்,புத்திஜீவிகள், விவசாயிகள்,தொழிலாளர்கள் ஆகியோர் பிரதான இயங்கு சக்திகளாக இருக்கின்றன. தரகு முதலாளித்துவம்,நிலப்பிரபுத்துவம் என்பன போராட்டத்தின் இலக்குகளாகின்றன.

இலங்கையில் தேசிய எழுச்சியானது இந்தியாவின் தேசிய எழுச்சியிலும் பார்க்க அடிப்படையில் வேறுபட்ட சில அம்சங்களைக் கொண்டதாகும். இந்தியாவில் போலன்றி இலங்கையில் முதலாளித்துவ சக்திகள் போதியளவு பலம்பெற்றதாக விளங்கவில்லை . மிகவும் பலவீனமாக முதலாளித்துவமானது மிகவும் பலவீனமான தேசியத்தையே தோற்றுவித்து. இலங்கையில் சாராயக் குத்தகை, காரீயச்சுரங்கம் போன்ற துறைகளில் மூலதனமிட்டு வளர்ந்து வந்த பலவீனமான முதலாளித்துவசக்திகள் பிரித்தானிய முதலாளித்துவ சக்திகளுடன் மோதுமளவிற்கு



www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பலம்பெற்று விளங்கவில்லை. இந்த சக்திகளது போட்டியாளர்களாக விளங்கியது பிரித்தானிய முதலாளிகள் அல்ல. மாறாக உள்ளூரில் ஏற்கனவே வியாபாரம் போன்றவற்றில் ஈடுபட்டு வந்த தமிழ், முஸ்லீம், இந்திய வியாபாரிகளே இவர்களது முதல் இலக்காக இருந்தார்கள். சிங்கள, பௌத்த தேசிய வாதத்தை முன்னெடுத்த இவர்கள் பிரித்தானிய காலனி ஆதிக்கத்துடன் மோதுவதற்குப் பதிலாக ஆரம்பத்திலேயே சிறுபான்மை இனங்களை நசுக்கும் வடிவத்தை பெறலானார்கள்.

ஐரோப்பிய நாடுகளில்உருவானமுற்போக்கான சிறுபான்மையினரையும் அணைத்துச் செல்லும் ஜனநாயகப் புரட்சியின் ஒரு பகுதியாக அமைந்த தேசியத்திற்குப் பதிலாக இலங்கையில் ஏகாதிபத்தியற்கு சேவை செய்யும்சிறுபான்மை இனங்களுக்கு எதிராக பிற்போக்கு அம்சங்களை முன்னெடுக்கும், ஜனநாயகத்தை மறுக்கும் 'குறுகிய' தேசியவாதமே தோற்றம்பெற்றது.

ஒரு நாட்டில் தோன்றும் தேசிய இயக்கம் எந்த அளவிற்கு பலம்பெற்றதாக விளங்குகிறது என்பது இரண்டு முக்கிய காரணிகளில் தங்கியிருக்கிறது.முதலாவது, அந்த நாட்டில் தோன்றும் முதலாளித்துவ பலம் எப்படிப்பட்டது என்பது, பலமான முதலாளித்துவ வளர்ச்சி முற்போக்கான தேசியத்தை தோற்றுவிக்கிறது. பலவீனமான முதலாளித்துவமானது பிற்போக்கான தேசியத்தை தோற்றுவிக்கிறது.

இரண்டாவது, தேசியம் என்பதில் அந்த சமூகத்தின் பல்வேறு வர்க்கங்களின் நலன்களும் பிரதிபலிக்கச் செய்கின்றன. தேசிய எழுச்சியில் இணைந்து கொள்ளும் ஒவ்வொரு வர்க்கமும் தத்தமது நலன்களை மனதில் கொண்டே செயற்படுகின்றன. எந்தவர்க்கம் தேசிய இயக்கத்தை தலைமை தாங்குகிறது என்பதைப் பொறுத்து தேசிய இயக்கத்தின் முற்போக்கான தன்மை அமைகிறது.

தமிழ் தேசியமானது சிங்களப் பேரினவாதத்திற்கு எதிரான போராட்டத்திலேயே உண்மையில் தோற்றம் பெற்றது. சுதந்திரத்திற்குப் பின்பு அதிகாரத்திற்கு வந்த சிங்களத் தரகு முதலாளித்துவ வர்க்கம் இனவாத கண்ணோட்டத்துடன் முன்னெடுத்த பல்வேறு இனஒடுக்குமுறை நடவடிக்கைகள் தமிழ்த் தேசிய இனத்தின் பல்வேறு வர்க்கங்களையும் வர்க்கத் தட்டுக்களையும் தேசிய இயக்கத்தில் குதிக்குமாறு தூண்டியது. மலையகமக்கள் பிரஜாஉரிமை, வாக்குரிமை பறிப்பு, தமிழ்ப் பிரதேசம் திட்டமிட்ட விதத்தில் பொருளாதாரரீதியாக பாகுபாட்டுடன் நடத்தப்படல், குடியேற்றம், சிங்களம் மட்டும் என்றமொழிக்கொள்கை கல்வி வேலைவாய்ப்புக்களில் காட்டிய பாரபட்சம் போன்றவை இறுதியில்இனக்கலவரம், இனப்படுகொலை எனும் வடிவங்களை எட்டிய பின்பு தமிழ்த் தேசிய இனத்தில் ஒவ்வொரு வர்க்கமும், வர்க்கத்தட்டும் தேசியத்தை நோக்கி தள்ளப்படுவது தவிர்க்க முடியாததாகியது.

நவகாலனித்துவ பிடியில் சிக்கியுள்ள குறைவிருத்தி நாடுகளில் தேசிய முதலாளிவர்க்கம் இருக்கமுடியுமா? என்ற பிரச்சினையுடன் கூடவே சிங்கள தரகு முதலாளித்துவ அரசு இனவாத கண்ணோட்டத்துடன் கடைப்பிடித்த தமிழ்ப்பிரதேசத்தை கைத்தொழில் ரீதியாக வளரவிடாமல் தடுக்கும் கொள்கையின் காரணமாகவும் தமிழ்ச்சமுதாயத்தில் குறிப்பிடத்தக்க பலத்துடன் தேசியமுதலாளி வர்க்கம் என்ற ஒன்று காணப்படவில்லை. அல்லது மிகவும் பலவீனமாகவே இருக்கிறது. அப்படி யாராவது இருப்பின் அவர்கள் சிறு உற்பத்தியாளர்கள் என்ற வகையில் தான் உள்ளார்கள். இவர்கள் சிறீலங்கா அரசின் பேரினவாத ஏகாதிபத்திய சார்பு நிலைபாடுகளால் பாதிக்கப்பட்டவர்கள்.இதனால் தமிழ்த் தேசியத்தின் ஆதரவாளர்கள். ஆனால் வர்க்கம் என்ற வகையில் குறிப்பிடத்தக்க பங்காற்றும் அளவிற்கு இவர்கள் பலமானவர்கள் அல்ல.

பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் தரகு முதலாளி வர்க்கத்தில் குறிப்பிடத்தக்க பங்காற்றிய தமிழ்த்தரகு முதலாளிகள் சுதந்திரத்திற்கு பின்பு அரசினால் படிப்படியாக ஒதுக்கப்பட்டு வந்துள்ளார்கள். அடுத்தடுத்து வந்த இனக்கலவரங்கள் இவர்களை இன்னும்பலவீனமடையச் செய்துள்ளது. இவர்கள் சிங்கள தரகு முதலாளி வர்க்கத்துடன் சந்தையை பங்கு போட்டுக் கொள்வதற்காக போட்டியிடுகின்றார்கள். ஆனால் அரசும் பேரினவாதமும் இவர்களைத் தடுக்கிறது.இதனால் இவர்கள் சிங்கள பேரினவாத தரகு முதலாளித்துவ அரசுக்கு எதிராக தமிழ்த்தேசியத்தை ஆதரிக்கிறார்கள். தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை அரசுடன் பேரம் பேசும் சாதனமாக பயன்படுத்தப் பார்க்கிறார்கள்.பேரம் பேசலின் மூலம் தமக்குரிய பங்கைப் பெறமுடியாத விடத்தில் தமிழ்ச் சந்தையை தனியே பிரித்தெடுத்து அதனை தமது கட்டு ப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு முயல்கிறார்கள். ஏகாதிபத்திய எதிர்ப்போ,இந்திய மேலாதிக்க எதிர்ப்போ இவர்களது நிலைப்பாடல்ல.தனது சித்தாந்த அரசியல் செல்வாக்கை தேசிய விடுதலைப் போராட்டத்தில் நிலைநாட்ட இந்த வர்க்கம் பலவழிகளிலும் தொடர்ந்து முயற்சி செய்யும்.

குட்டி முதலாளிகள் புத்திஜீவிகள் போன்றோர் அரசின் பேரினவாத நட வடிக்கைகளான மொழிக்கொள்கை, கல்வி- வேலைவாய்பிலான பாரபட்சம் , குடியேற்றம், இன ஒழிப்பு நடவடிக்கைகள் போன்றவற்றால் தேசிய இயக்கத்திற்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். தேசிய இயக்கத்தின் முக்கிய சக்தியாக இவர்கள் இருப்பினும் ஒரு உறுதியான, புரட்சிகரமான நிலைப்பாட்டைத் தொடர்ந்து முன்னெடுக்க மாட்டாதவர்கள். ஊசலாட்ட சக்திகள் முதலாளித்துவ சித்தாந்தத்தின் பலமான காவிகள். தேசிய இயக்கத்தில் ஏற்படும் ஊசலாட்டங்களுக்கு பெரிதும் காரணமானவர்கள்.ஸ்ரீ லங்கா அரசின் குடியேற்றம், திறந்த பொருளாதாரக் கொள்கைகள் காரணமாகவும் இன ஒழிப்பு நடவடிக்கைகள் காரணமாகவும் விவசாயிகள் , நிலப்பிரபுத்துவ சக்திகள், பணக்கார விவசாயிகள்,நடுத்தர, வறிய விவசாயிகள், விவசாயக்கூலிகள் போன்ற அனைவரும் உள்ளடங்கலாக சிங்கள பேரினவாத,தரகு முதலாளித்துவ அரசிற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார்கள்.தேசிய விடுதலை என்பது ஒரு வகையில்நிலம்பற்றிய பிரச்சினையாகவும் இருப்பதால் இவர்கள் தேசியவிடுதலையின் முக்கிய ஆதரவாளர்கள். குறிப்பாக இதன் அடித்தட்டுக்கள் பலமான ஆதரவாளர்களாவர். தேசிய விடுதலை இயக்கத்திற்கு பெருமளவிலான போராளிகள் இவர்கள் மத்தியில் இருந்தே தோன்றுகிறார்கள்.

தொழிலாளி வர்க்கமானது இலங்கையின் குறைவிருத்தி காரணமாகவும், வடக்கு- கிழக்கில் தொடந்து இடம்பெற்ற பொருளாதார பாரபட்சம் காரணமாகவும் தமிழ்ப்பிரதேசத்தில் கைத்தொழில் விருத்தி மிகவும் குறைவு. இதனால் தொழிலாளர் வர்க்கத்தின் எண்ணிக்கை மிகவும் குறைவாகும். சிங்கள பேரினவாதத்தால் இவர்களும் பாதிக்கப்படவே செய்கிறார்கள். பொதுவாகவே பேரினவாத ஒடுக்கு முறையின் கொடுமையை சுரண்டும் வர்க்கங்கள் சுரண்டப்படும் வர்க்கங்களின் தலையில் சுமத்திவிடுவதால் சுரண்டப்படும் வர்க்கங்களே அதிகளவில் துன்பத்திற்குள்ளாகின்றன. இந்தவகையில் சுரண்டப்படும் வர்கங்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பலமான பங்காற்றக் கூடியவை. ஆனால் ஒரு வர்க்கம் என்றவகையில் இது எண்ணிக்கையில் சிறிதாகும். ஏனைய வர்க்க சித்தாந்தங்களுக்கு பலியாகிப் போயிருப்பது இதன் பிரதான குறைபாடாகும். தமிழ்தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஒரு பலமான பாட்டாளிவர்க்க கட்சி தோன்றாததற்கான காரணங்களை பாட்டாளிவர்க்கத்தின் பலவீனமான நிலையுடன் இணைத்துப் பார்க்கையில் புரிந்து கொள்ளக் கூடியதே.

www.tamilarangam.net

ஆகவே தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு வர்க்கங்களின்நலன்களும் பிணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வர்க்கமும் தன்னுடைய வர்க்கநலன்கள் என்ற கண்ணோட்டத்திலிருந்தே இதனை அணுகுகின்றன. தேசிய விடுதலைப் போராட்டத்தில் எழும் பல்வேறு திருப்பு முனைகளின் போது பலதரப்பட்ட கோரிக்கைகளை புரிந்து கொள்ள வேண்டுமாயின் அந்த கோரிக்கைகளின் பின்னால் ஒழிந்திருக்கும் நலன்கள் எந்த வர்க்கத்திற்குரியவை எனக் கண்டறிய வேண்டும். தேசிய இயக்கத்தில் ஏற்படும் முன்னேற்றங்களையும்,பின்னடைவுகளையும் அந்தந்த காலகட்டத்தில் போராட்டத்தில் தலைமை கொடுக்கும் வர்க்கங்களை இனம்கண்டு கொள்வதன் மூலமே விளக்கமுடியும். இவ்வாறு தமிழ்த் தேசியத்தின்பலம், பலவீனம்கள், முறபோக்கான, பிற்போக்கான அம்சங்களைப் புரிந்து கொள்வதற்கும் தமிழ் சமுதாயத்தில் ஏற்படும் முதலாளித்துவ உற்பத்தி முறையின் வளர்ச்சி நிலையும் போராட்டங்களுக்கு தலைமை தாங்கும் வர்க்கங்களின் தன்மையையும் புரிந்து கொண்டாலேயே விளக்கமுடியும்.

தமிழ்த்தேசியத்தின் குறிப்பான தன்மைகள் எவை?

நிலப்பிரபுத்துவ கட்டுத் தளைகளினுள் தோன்றி வளரும் முலாளித்துவமானது ஒரு முன்னேற்றகரமான உற்பத்தி முறையாகும். இந்த முதலாளித்துவ உற்பத்தி முறையானது அதன் வளர்ச்சிக்கு அவசியமான பல முற்போக்கான சமூகவடிவங்களை,மதிப்பீடுகளை படைக்கிறது. இதனால் நிலப்பிரபுத்துவத்தின் பிற்போக்கான மதிப்பீடுகளை தகர்த்தெறியும்தேசிய இயக்கமானது பலமுற்போக்கான அம்சங்களை கொண்டிருக்கிறது. முற்போக்கான தேசியவாதம் என்பது பல விருவான மானுட விழுமியங்களையும் படைப்பதாக இருக்கவேண்டும். பழைய நிலபிரபுத்துவ மதிப்பீடுகளை கடந்து வருவது பிரதேச, சாதி, மத தடைகளை கடந்து இனம்காண முற்படுவது என்பது தேசியத்தின் முற்போக்கான அம்சங்களுள் ஒன்றாகும். தேசிய இனப்பிரச்சினை என்பது அடிப்படையில் இனங்களுக்கிடையிலான ஜனநாயகம் பற்றிய பிரச்சினையாகும். முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கு பண்டங்களை மட்டுமல்ல உழைப்பை விற்பதிலும் மூலதனத்தை இடுவதிலும், சந்தையில் சுதந்திரமாகவும், சமத்துவமாகவும் போட்டியிடும் நிலமை இருப்பது அவசியமானது. இதனால் முதலாளித்துவ வர்க்கமானது சுதந்திரப் போட்டிக்கு அவசியமான ஜனநாயகத்தை வலியுறுத்துகிறது. எந்தவொரு தேசிய இனப்பிரச்சினைக்கும் முதலாளித்துவத்தினுள் முரணற்ற ஜனநாயகத்தின் மூலம் தீர்வு காணலாம். ஆகவே தேசிய விடுதலைப் போராட்டம் என்பது கூட தன்னளவில் ஜனநாயகத்தை கொண்டிருப்பது அவசியமானது. தமிழ்த் தேசியத்தை இந்த வெளிச்சத்தில் பரிசீலித்தால் அதன் முற்போக்கான , பிற்போக்கான அம்சங்களை இனம் காண முடியும். தமிழ்த் தேசியமானது சிங்கள பேரினவாதத்திற்கும் தரகு முதலாளித்துவ அரசுக்கும் எதிரானது என்ற வகையில் நடப்பிலுள்ள சமூக அமைப்பை எதிர்த்துப் போரிடும் முற்போக்கான அம்சங்களைக் கொண்டதாகும். ஏகாதிபத்தியத்தின் நலன்களுடனும், இந்திய மேலாதிக்க நலன்களுடனும் இது ஏற்கனவே முரண்பட்டுள்ளமை ; இதன் முற்போக்கான பாத்திரத்தின் வெளிப்பாடாகும். ஆனால் தமிழ்த் தேசியமானது பல குறுகிய மதிப்பீடுகளை கொண்டிருப்பதும் கவனிக்கத்தக்கதாகும். யாழ், இந்து, சாதிய எல்லைக்குள் இன்னும் சிக்கிக் கொண்டிருக்கிறது. பிரதேச சாதிய மத எல்லைகளைக் கடந்து ஒரு விருவான தேசியமாக இதனால் வளர முடியும்.

ஜனநாயகம் என்பது தேசிய இனப்பிரச்சினையில் அடிப்படையிலான பிரச்சினையாக இருக்கையில் தேசியவிடுதலை அமைப்பே பாசிச வடிவம் பெறுவது என்பது இன்னோர் முரண்பாடாகும். புலிகள் மட்டுமல்ல கடந்த காலத்தில் அநேகமாக எல்லா அமைப்புகளுமே மக்களுக்கும் சொந்தத் தோழர்களுக்கும் எதிராக ஒரு தடவையேனும் ஆயுதத்தைத் திருப்பாமல் இருக்கவில்லை. ஆகவே பாசிசவடிவம் இல்லையென்றாலும் ஜனநாயமின்மை என்பது எல்லாஅமைப்புக்குள்ளும் ஊடுருவியது எப்படி? ஏனைய சிறுபான்மை இனங்களை அணைத்துக் கொண்டு செல்வது தேசியத்தின் முற்போக்கான அம்சங்களில் ஒன்றாகும். ஆனால் முஸ்லிம் மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் எதனைக் காட்டுகின்றன.

தமிழ்த் தேசியமானது பல்வேறு பிரதேச, சாதிய பிரிவினரையும் மதசிறுபான்மையினரையும் அணைத்துச் செல்லும் அளவிற்கு விரிவானதாக பரந்ததாக இல்லை என்பதுதான் உண்மை. இந்த அர்த்தத்தில் இது குறுகியதே (மனிதம்,தூண்டில் ஆகிய இரண்டும் இதே கருத்தையே கொண்டிருப்பினும் இதனை எந்தப் பதத்தால் குறிப்பிடுவது பெருந்தேசியம் என்பதா? குறுந்தேசியம் என்பதா? என்பதிலையே முரண்படுகிறார்கள்.)

தமிழ்த் தேசியத்தில் காணப்படும் இந்த பலவீனமான பிற்போக்கு அம்சங்களை எப்படி விளக்குவது?

இந்த கேள்விக்கான விடையை காண்பதற்கு முதலில் இரண்டு தத்துவ பிரச்சினைகளை தெளிவுபடுத்திக் கொள்வது அவசியமானது. முதலாவது பிரச்சினை, குறிப்பிட்ட ஒரு சமூக அமைப்பையும்அதில் தோன்றும் பல்வேறு பிரச்சினைகளையும் அச்சமுதாயத்தில் நடப்பிலிருக்கும் பல்வேறு கருத்துப் போக்குகளையும் புரிந்து கொள்வதற்கான வழிமுறை என்ன? என்பதாகும். ஸ்தூலமான நிலமைகளில் ஸ்தூலமான ஆய்வு என்பதே இதற்கான ஒரே வழிமுறையாகும். குறிப்பிட்ட சமுதாயத்தின் பொருளாதார அடித்தளத்தை சரியாக இனங்காணுதல், உற்பத்தி சக்தியின் வளர்ச்சி நிலை, அதிலிருந்து தோன்றும் பல்வேறு வர்க்கங்கள், இந்த வர்க்கங்கள் குறிப்பான நலன்கள், அவை அரசியலில் பிரதிபலிக்கும் விதம் போன்றவற்றை புரிந்து கொண்டால் மட்டுமே ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் எழும் பல்வேறு சமூக சக்திகளின் அரசியல் போக்குகளை புரிந்து கொள்வதும் சரியான அரசியல் நிலைப்பாட்டை வகுத்துக் கொள்வதும், அச்சமுதாயத்தை புரட்சிகரமாக மாற்றியமைப்பதும் சாத்தியப்படும்.

இன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் சம்பந்தப்படும் பல்வேறு சக்திகளை மதிப்பிடுவது எப்படி? என்ற விவாதத்தில் தூண்டில் தமிழ் சமுதாயத்தில் தேசிய முதலாளிகள் இல்லாவிட்டாலும் பலஉறுதியான தேசியம் உருவாக்கலாம் என நிரூபிக்க முனைகயில் குறிப்பிட்ட ஒரு கருத்தானது சமூகத்தில் அது பிரதிபலிக்கும் குறிப்பிட்ட ஒரு சமூகசக்தி தோன்றும் முன்பே உருவாகலாம் எனக் கூற முனைகிறது. தனது நிலைப்பாட்டை இன்னும் உறுதிப் படுத்தும் வகையில் தூண்டில் மார்க்சியத்தின் தோற்றமானது பாட்டாளிவர்க்கத்தின் தோற்றத்திற்கு முன்பே நடைபெற்றது எனும் கருத்துப்பட கூற முனைகிறது. ஆகவே சமூக சக்திகளுக்கும் அவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கருத்துக்களுக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதை முதலில் தெளிவு படுத்திக் கொள்வது அவசியமாகும்.

கருத்துக்கள் என்பவை ஒரு சமூக உருவாக்கமாகும். சமூக நடைமுறைகளின் அனுபவங்கள் தொகுக்கப்பட்டு பொதுமைப்படுத்தப்பட்டு அவற்றை ஒரு ஆட்சுமப்படுத்தப்பட்ட வடிவத்திற்கு வளர்த்தெடுக்கையில் தத்துவமாகிறது. மீண்டும் இந்தத்துவமானது சமூக நடைமுறைகளை இன்னும் சிறப்பாக முன்னெடுக்க வழிகாட்டுகிறது. இந்த விதத்தில் கருத்தானது சமூக நடைமுறையிலிருந்து பிறப்பது. குறிப்பிட்ட வரலாற்றுச் சக்தியின் உருவாக்கத்தின் பின்பே குறிப்பிட்ட கருத்துக்களும் தத்துவங்களும் உருவாகின்றன.

கருத்துக்கள், தத்துவங்கள் வெறும் பிரதிபலிப்புக்கள் மட்டுமல்ல இவை நடைமுறையை பாதிக்ககூடியவை செல்வாக்கு செலுத்தக்கூடியவை என்பதைக்ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் இந்த செல்வாக்கு

செலுத்தும் நிலையென்பது குறிப்பிட்ட சமூக சக்திகள் இன்றியே கருத்துக்கள் உருவாக்கலாம் என வலியுறுத்தும் அளவிற்கு போய்விடக்கூடாது.

முதலாளித்துவ உற்பத்தி முறை 16ம், 17ம் நூற்றாண்டுகளில் சிறிது சிறிதாக ஆரம்பித்தாலும் 1760 களை அடுத்து வரும் 50 ஆண்டுகளில் நடைபெற்ற கைத்தொழில் புரட்சியின் மூலம் தான் முதலாளித்துவ உற்பத்தி முறை பிரதான உற்பத்தியாக ஆனது. கைத்தொழில் புரட்சியானது அதுவரையில் நடப்பில் இருந்து வந்த சமூக அமைப்பில் உற்பத்தி முறை ,வர்க்கங்கள், வர்க்க அமைப்புகள், அரசியல் அதிகாரம், வியாபாரம், முதலீடு, வெளிநாட்டுக் கொள்கை போன்ற அனைத்திலுமே பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. பெருமளவில் பாட்டாளிகள் தோன்றி நகரங்களில் தொழிற்சாலைகளை அண்டி குடியேறினார்கள். இவ்வாறு நகரங்களில் திரட்டப்பட்ட பாட்டாளிகள் தமது மோசமான வாழ்க்கை நிலை வேலைநிலமைகள் சுரண்டல் போன்றவற்றை எதிர்த்து பகிரங்கமாகவே போராடினார்கள். இந்த போராட்டமானது ஆரம்பத்தில் தனிப்பட்ட சிறு களவுகள் அபகரிப்புகள் என ஆரம்பித்து (களவு என்பது சொத்துடமை உறவின் புனிதத்தன்மையை மீறுவது என்ற அர்த்தத்தில் இது தன்னளவில் உள்ளார்ந்த வகையில் சுரண்டலுக்கும்,நடப்பிலுள்ள சொத்துடமை உறவுகளுக்கும் எதிரானதாகும்.வர்க்க விரோத உணர்வின் முரட்டுத்தனமான வெளிப்பாடாகும்) முதலாளித்துவத்தின் உற்பத்தி இயந்திரங்களை உள்ளடக்கும் வடிவத்திற்கு வளர்ந்து அடுத்த கட்டத்தில் தொழிற்சங்க அமைப்பாக திரண்டு, தொழிலாளர்களது திட்டவட்டமாக வடிவமைக்கப்பட்ட போராட்டமாகிறது. தொழிற்சங்க போராட்டங்கள் கூட ஆரம்பத்தில் வெறும் பொருளாதாரக் கோரிக்கைகளுடன் தொடங்கி அரசியற் கோரிக்கைகளாக பரிணமித்தன. இந்த போராட்டங்களின் போது பல கற்பனாவாத சோசலிசக் கருத்துக்கள் தொழிலாளர்களிடையே செல்வாக்கு செலுத்தத் தொடங்கின. தொழிலாளர்களது இந்த உயிர்த்துடிப்புள்ள போராட்டங்களை 1845இல் ஏங்கல்ஸ் இங்கிலாந்தில் தொழிலாளர்கள்வர்க்கத்தின் நிலமை எனும் நூலில் படம்பிடித்து காட்டினார். இந்த நூலின் இறுதியில் தொழிலாளர் விரைவிலே புரட்சி மூலம் தனிச் சொத்துடமை உறவுகளுக்கு முடிவு கட்டி சோசலிசத்தை அமைப்பார்கள் என உறுதியாக கூறினார். இந்த நூல் வெளியாகி மூன்று வருடங்களின் பின்பு தான் அதாவது 1848இல் தான் கொம்யூனிஸ்டு கட்சியின் அறிக்கை எனும் மார்க்சியத்தின் முக்கியமான கொள்கைப் பிரகடனம் வெளிவந்தது. அதே ஆண்டிலேயே பிரஞ்சு கட்சியின் பிரான்ஸ் நாட்டின் பாட்டாளி வர்க்கம் தனது போர்க்குணாம்சத்தை இன்னொரு தடவை நிரூபித்தது. 1867 இல் மூலதனத்தின் முதல்பாகம் வெளிவந்தது. இதற்கு 4 ஆண்டுகளின் பின்பு பிரெஞ்சுத் தொழிலாளர்கள் தமது நாட்டில் பாரிஸ் கொம்யூனைநிறுவி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்றால் என்ன என்று நிரூபித்தார்கள்.

இவை காட்டுவது என்ன? மார்க்சிசம் என்பது பாட்டாளி வர்க்கத்தின் தோற்றத்திற்கு முன்பே தோன்றியது அல்ல என்பதுதானே . பாட்டாளி வர்க்கத்தின் போராட்ட அனுபவங்களை பொதுமைப் படுத்தி அதனை ஒரு உயர்ந்த தத்துவமட்டதிற்கு மார்க்சிமம் வளர்த்தெடுத்து. இதனால் அடுத்தடுத்த நடவடிக்கைகளில் பாட்டாளிவர்க்கத்தின் செயலுக்கு வழிகாட்டும் தகுதியை பெற்றது என்பது தானே.

இவ்வாறாக ஏனைய கருத்துக்களும் சமுதாயத்தின் வரலாற்றுப்போக்கில் தோன்றி வளர்ச்சியுற்றதைக் காணமுடியும். உதாரணமாக நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பில் அரசானது பிரபுக்களின் கரங்களில் இருப்பதை தெய்வீக உரிமை கோட்பாட்டின் மூலம் நியாயப்படுத்தப்பட்டது. முத முதலாளித்துவத்தின் தோற்றத்துடன் தெய்வீக உரிமைக் கோட்பாடு சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டின் மூலம் பிரதியீடு செய்யப்பட்டது. புதிதாகதாக தோன்றிய முதலாளிவர்க்கம் அரசதிகாரத்தில் பங்கு கேட்க முனைந்ததன் தெளிவான வெளிப்பாடு இது. இந்த சமுதாய ஒப்பந்தக் கோட்பாடானது பின்பு சொத்துடையவர்களின் வாக்குரிமை எனவும் அனைத்து மக்களின் வாக்குரிமை எனவும் இன்னும் விரிவு பெற்றது. இப்படியாக சமுதாய அரங்கில் புதிதாக தோன்றி வளர்ந்து வரும் ஒரு வர்க்கம் அல்லது சமூக சக்தி தனது நலன்களைக் காத்துக் கொள்ள புதிய கருத்துக்களையும் புதிய அரசியலையும் முன்னெடுக்கிறது. 1760களில் தோன்றிய கைத்தொழில் புரட்சியின் மூலம் பலம் பெற்ற முதலாளித்துவ வர்க்கம் 1789 இன் பின்பு பூர்சுவா ஜனநாயகப் புரட்சியின் மூலம் அரசியல் அதிகாரத்தை தனது கரங்களில் எடுத்துக் கொண்டது.

இப்படியாக வரலாற்றில் குறிப்பிட்ட சமூக சக்திகள் தோன்றி பலம் பெற்று வளரும் போதுதான் அவற்றின் நலன்களை வெளிப்படுத்தும் அரசியற்கோரிக்கை அரங்கிற்கு வருகின்றன. ஆகவே எந்த ஒரு அரசியல் கோரிக்கையையும் சரியாக புரிந்து கொள்ள வேண்டுமாயின், அந்தக் கோரிக்கையின் பின்னால் மறைந்திருப்பது எந்த வர்க்கத்தின் நலன்கள் என தெளிவாக இனங்கண்டு கொள்ள வேண்டும். எந்த ஒரு சமூக இயக்கத்தையும் புரிந்து கொள்ள, அது எந்த சமூக சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என புறநிலையாக வைத்து மதிப்பிடவேண்டும் இதற்கு மாறாக கருத்துக்களை சமூக சக்திகளில் இருந்து பிரித்துப் பார்ப்பதோ அல்லது சமூக இயக்கங்களை தனிநபர்களின் சித்தத்தின் வெளிப்பாடாக காண்பதோ மார்க்சிய அணுகுமுறையாகாது. இது அகநிலைக் கண்ணோட்டமாகும். இவ்வாறாக சமூகசக்திகளை மதிப்பிடுவதில் இழைக்கும் அகநிலை தவறானது அடுத்தகட்டத்தில் தேசிய முதலாளிகள் இன்றியே பலமான தேசியம் இருக்கலாம் என்று 'தூண்டிலை' கூறவைக்கிறது. ஆனால் இந்த வாதத்திற்கு போதிய ஆதாரங்களை வழங்க 'தூண்டில்'தவறிவிடுகிறது.

தமிழ்த் தேசியத்தை இனம் காண்பதற்கு முன்பு தீர்வு கண்டாக வேண்டிய அடுத்த தத்துவார்ந்த பிரச்சினை முதலாளித்துவத்தின் பண்புகள் பற்றியதாகும். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு சக்திகளையும் மதிப்பிடுவது தொடர்பான விவாதங்களின் போது முதலாளித்துவம் = தேசிய முதலாளிவர்க்கம்= பூர்சுவா ஜனநாயகம் என்ற ஒரு சூத்திரத்தை சுற்றியே பலரது வாதங்களும் அடிக்கடி வலம் வருவதை அவதானிக்க முடிகிறது. ஆதலால் இந்த சூத்திரம் பற்றி சற்று பரிசீலிப்பதுஅவசியமாகும்.

முதலாளித்துவ உற்பத்தி முறையை பிரதான உற்பத்தி முறையாகக் கொண்டுள்ள சமூகங்களை பொதுவாக முதலாளித்துவ சமுதாயங்கள் என்கிறோம். இவை பல்வேறுபட்ட அரசுவடிவங்களைக் கொண்டுள்ளன. லிபரல் ஜனநாய அரசு, சமூக ஜனநாயக நலன்புரி அரசு, பாசிச அரசு, இராணுவசர்வாதிகார அரசு... இப்படிப்பட்ட பல வடிவங்களை குறிப்பிடலாம். அந்த நாட்டில் உள்ள முதலாளித்துவ உற்பத்தி முறையின் வளர்ச்சிநிலை, அந்த நாட்டின் முதலாளித்துவ உற்பத்தி முறையுடன் கூடவே காணப்படும் வேறு உற்பத்தி முறைகள், இந்த உற்பத்தி முறையிலிருந்து தோன்றும் வர்க்கங்கள், சர்வதேச மூலதனத்துடன் இந் நாட்டு மூலதனம் கொண்டுள்ள உறவு, ஆட்சி அதிகாரம் எந்த வர்க்கத்தின் கைகளில் இருக்கிறது, சுரண்டப்படும் வர்க்கங்களின் பலம், அந்நாட்டில் குறிப்பான வரலாற்று நிலைமைகள் போன்ற பல அம்சங்கள் அரசின் வடிவத்தைக் தீர்மானிப்பதில் பங்கு வகிக்கின்றன.

ஐரோப்பிய முதலாளித்துவத்தின் தோற்றகாலத்தில் அங்கு தோன்றி வந்த முதலாளித்துவசக்திகள் தாம் தேசியத்தை முன்னெடுத்தது என்பது உண்மையே. ஆனால் இது சர்வவியாபகமான விதியாகிவிடமாட்டாது. காலனிஆதிக்கத்திற்கு உள்ளான நிலையில் அந்த நாட்டில் உள்ள பல்வேறு வர்க்கங்களின் (தரகு





www.tamilarangam.net

முதலாளித்துவ நிலபிரபுத்துவ வர்க்கங்கள் தவிர்ந்த ஏனைய வர்க்கங்களின்) அபிலாசைகளை தேசியமானது பிரதிபலிக்கிறது. இதற்கு தேசிய முதலாளிகள் தலைமை தாங்குவதுண்டு. ஆனால் பல்வேறு ஏகாதிபத்தியங்கள் முட்டி மோதிக் கொள்ளும் நிலையில் காலனிநாட்டிலுள் ள ஒரு ஏகாதிபத்தியத்தைச் சார்ந்த தரகு முதலாளிவர்க்மானது இன்னோர் ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்கத்திற்கு எதிரானபோராட்டத்தில் தேசியத்தை சார்ந்து நிற்கவோ அல்லது சிலவேளைகளில் தேசிய இயக்கத்திற்கு தலைமை தாங்கவோசெய்யலாம். நவகாலனித்துவ நாடுகளில் முதலாளிவர்க்கங்கள் தமது வரலாற்றுப் பாத்திரத்தை இழந்து விட்ட நிலையில், அந்த நாட்டின் ஜனநாயகப்புரட்சியின் கடமைகள் பாட்டாளிவர்க்கத்தின் தலைமேல் விழுந் த நிலையில், பாட்டாளிவர்க்கமானது தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க நேருகிறது. இது போன்றே ஹிட்லரின் பாசிசமானது ஆரிய, ஜேர்மனிய தேசியவாதக்கலவையாகவே வெளிப்பட்டது. இங்கு ஏகபோக முதலாளிகள் குறிப்பான வரலாற்று நிலைமைகளின் கீழ் தமது நலன்களை தேசியத்தின் பேரால், தேசியத்துடன் இணைந்து முன்னெடுத்தார்கள். இதன்மூலம் ஜேர்மனிய பாட்டாளிவர்க்கத்தையே தமது தலைமையின்கீழ் அணிதிரட்ட இவர்களால் முடிந்தது.

இன ஒடுக்குமுறையானது இனப்படுகொலை எனும் வடிவத்தை பெற்ற பின்பு சிறுபான்மை தேசிய இனத்தைச் சேர்ந்த ஒவ்வொரு வர்க்கமும் கூட தமது உயிர் வாழ்க்கைக்காகவே போராடியாக வேண்டிய நிலையில் உள்ளது. தேசிய முதலாளிகள், தரகு முதலாளிகள், நிலபிரபுக்கள், பெரும் வர்த்தகர்கள், பணக்கார விவசாயிகள், மீனவ முதலாளிகள், குட்டி முதலாளிகள், விவசாயிகள், தொழிலாளர்கள் போன்ற பல்வேறு வர்க்கங்களும் சமூகத்தட்டுக்களும் தேசியத்தை முன்னெடுக்க நேர்ந்தன. இவ்வாறு பல்வேறு வர்க்கங்கள் தேசியத்தை முன்னெடுத்த போதிலும் அவை ஒவ்வொன்றும் தமது வர்க்க நிலைப்பாட்டில் நின்றே அதனை முன்னெடுத்துச் செல்கின்றன. தேசிய முதலாளி வர்க்கமானது சுயசார்பு பொருளாதாரம், பூர்சுவா ஜனநாயகம், ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆகியவற்றுடன் முன்னெடுக்கிறது. தரகு முதலாளிவர்க்கம் ஏகாதிபத்திய சார்பாக முன்னெடுக்கிறது .நிலபிரபுத்துவவர்க்கமானது பழமைவாதம், ,ஜனநாயகமறுப்பு கண்ணோட்டத்துடன் முன்னெடுக்கிறது. பாட்டாளிவர்க்கமானது சோசலிசம், பாட்டாளிவர்க்க சர்வதேசியம் ஆகியவற்றுடன் இணைந்து முன்னெடுக்கிறது. ஆகவே தேசியம்=தேசியமுதலாளிவர்க்கம்=பூர்சுவா ஜனநாயகம், என்ற சூத்திரத்தை யாந்திரியமாக நாம் உருவாக்கிக் கொள்ளக்கூடாது. குறிப்பிட்ட வகைத் தேசியத்தை அல்லது குறிப்பிட்ட ஒரு அமைப்பின் கோரிக்கைகளை ஸ்தூலமாக ஆராய்வதன் மூலம் அது எந்த வர்க்கத்தை பிரதிபலிக்கின்றன என்று கண்டறிய வேண்டும் .அந்த சமூகத்திலுள்ள பிரதான வர்க்கங்கள் அவற்றின் புறநிலையான நலன்கள், பல்வேறு தேசிய, அரசியல் கோரிக்கைகளில் இந்த நலன்கள் பிரதிபலிக்கப்படும் விதம் போன்றவற்றை சரியாக இனம்காண்பதன் மூலம் குறிப்பிட்ட அமைப்பானது எந்த சமூக சக்தியை, எந்த வர்க்கத்தை பிரதிபலிக்கிறது என உறுதியாக கூறமுடியும். மாறாக, தேசியத்தில் உறுதியாக நிற்பதால் குறுப்பிட்ட ஒரு அமைப்பானது தேசிய முதலாளிவர்க்கத்தை பிரதிநிதிப்படுத்துவதாக கூறுவதோ, அல்லது ஜனநாயகம் இல்லாததால் தரகு முதலாளி வர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக கூறுவதோ முழுமையான சமூக கண்ணோட்டமாகாது. இது பெருமளவில் தலைகீழான அகநிலை கண்ணோட்டங்களை தன்னுள் கொண்டிருக்கும் அணுகுமுறையாகும்.

தேசியம் என்றவுடன் தேசிய முதலாளிவர்க்கத்தை முன்னனுமானிப்பதும், தேசிய முதலாளிவர்க்கம் என்றதும் பூர்சுவா ஜனநாயகத்தை முன்னனுமானிப்பதும் இலகுவான சூத்திரம் தான். ஆனால் இது யதார்த்தத்தின் நிலையை புரிந்து கொள்ள உண்மையில் உதவப்போவதில்லை. முதலாளித்துவம் பற்றிய விரிவான புரிதலும் அந்த, புரிதலின் அடிப்படையில் தமிழ்ச்சமுதாயம் பற்றிய சமூக- பொருளாதார ஆய்வும், அதன் வெளிச்சத்தில் பல்வேறு வர்க்கங்களையும், அவற்றின் நலன்களையும், இந்த நலன்கள் அவற்றின் அரசியலில்- தேசியத்தில்- பிரதிபலிக்கப்படும் விதத்தையும் கண்டறிவது மட்டுமே தீர்வுகளை முன்வைக்க கூடிய, சரியான புரிதலை உருவாக்க உதவும்.தமிழ்ச்சமுதாயத்தில் நிலவும் தத்துவார்த்த வறுமையும், தமிழ்ச்சமூகம் பற்றிய சமூக- பொருளாதார ஆய்வுகள் இன்மையும் இந்த திசையில் நாம் முன்னேறபெருந்தடைகளாகும். இருப்பினும், இந்த தடைகளை இனம் காண்பதே குறுகிய வரட்டுச் சூத்திரத்தில் அடைபட்டு கொள்ளாமல் இருப்பதற்கும், அடுத்து முன்னேற வேண்டிய திசையை இனங்காணவும் உதவும்.

இப்பொழுது நேரடியாக பிரச்சினைக்கு வருவோம். புலிகளின் அரசியலை எப் படி புரிந்து கொள்வது? எந்த சமூகசக்தியின் நலன்களை இவர்கள் பிரதிநிதுத்துவப் படுத்துகிறார்கள்? புலிகளின் அரசியலை ஏதோ ஒரு விதத்தில் புரிந்து கொள்வதும் பின்பு இந்த அரசியலை வைத்துக் கொண்டு அதன் வர்க்க பின்னணியை ஊகிப்பதுமான அணுகுமுறை எமது வாதங்களிடையே பரவலாக காணப்படுகிறது. புலிகள் தேசியத்தில் உறுதியாக இருப்பதாக அனுமானித்துக் கொண்டு இந்த அனுமானத்தின் அடிப்படையில் அவர்களை தேசிய முதலாளித்துவ சக்திகளை- அப்படி ஒரு வர்க்கம் தமிழ் சமூகத்தில் இல்லாத போதிலும்- பிரதிநிதித்துவப்படுத்துவதாக 'தூண்டில்' கூறுவது இதன் ஒரு வகையாகும். இதற்கு மாறாக 'சமர்' நாட்டில் தேசிய முதலாளிகள் இல்லாமல் இருப்பதும், புலிகள் முதலாளித்துவ சித்தாந்தத்தைக் கொண்டிருப்பதால் அவர்கள் தரகு முதலாளிகளை பிரதிநிதித்துவப்படுத்துவ தாகவும், புலிகளின் பாசிசமானது இதன் குறிப்பான குணங்குறி என்பது இன்னோர் வாதமாகும். இவை தலைகீழான -அகநிலை -அணுகுமுறைகளாகும். மாறாக புலிகளின் அரசியலை புரிந்து கொள்ளவே தமிழ்ச் சமுதாயம் பற்றிய வர்க்கபகுப்பாய்வும், குறிப்பிட்ட வர்க்கங்களின் நலன்கள் தமிழீழவிடுத்லைப் போராட்டத்தில் எப்படி பிரதிபலிக்கின்றன என இனம் காண்பதும் முக்கியமானதாகும்.

ஒரு குறிப்பிட்ட அமைப்பானது எந்த வர்க்கத்தை அல்லது எந்த சமூக சக்தியை பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதை இனங்கான இரண்டு வழிகள் உள்ளன.

முதலாவது, அந்த அமைப்பின் வர்க்க மூலத்தை (Class Origin) கண்டறிவதாகும்.புலிகளைப் பொறுத்தளவில் மட்டுமல்லாமல் அநேகமாக எல்லா விடுதலை அமைப்புக்களிலுமே பெரும்பாலாக முன்னணி அங்கத்தவர்கள் குட்டி முதலாளித் துவ வர்க்க பின்னணிகளைக் கொண்டவர்கள். அரச ஊழியர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், மீனவர்கள் போன்ற குடும்பங்களைச் சேர்ந்தவர்களாவர். இத்துடன் சில அமைப்புகள் வல்வெட்டிதுறையுடன் கொண்டுள்ள உறவுகளையும் கருத்திற்கெடுத்துக் கொண்டால் கள்ளக்கடத்தலில் ஈடுபடும் உதிரிமுதலாளிகளின் பிரிவொன்றும் சிலஅமைப்புகளுடன் கொண்டுள்ள தொடர்புகளும் கவனத்திற்கு கொள்ள வேண்டியவையாகும். அமைப்புக்களின் வளர்ச்சிப் போக்கில் அதன் முன்னணிஅங்கத்தவர்களின் வர்க்கநிலைகள்மாறலாம் என்பதாலும், சமூக அளவில் பலம்பெற்ற வர்க்கங்கள் இப்படிப்பட்ட குட்டி முதலாளித்துவ வர்க்கசக்திகளை இலகுவில் தமது செல்வாக்கிற்கு உட்படுத்தலாம் என்பதாலும் குறிப்பிட்ட அமைப்பால் பிரதிநிதித்துவப் படுத்தப்படும் வர்க்கத்தை இனம்காண இந்த அணுகுமுறை பொறுத்தமானதல்ல.

இரண்டாவது முறை ,சமூகத்திலுள்ள பிரதான வர்க்கங்களையும் அவற்றின் பொருளாதாய நலன்களையும் சரியாக இனம் கண்டு பல்வேறு அமைப்புக்களின் அரசியல் கோரிக்கைகளின் பின்னால் மறைந்திருக்கும் நலன்கள் எந்த வர்க்கத்தினுடையவை என இனம் காண்பதன் மூலம் அந்த அமைப்பானது எந்த வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்ற முடிவிற்கு வருவது. இந்த





www.tamilarangam.net

அணுகுமுறை முன்னைய அணுகுமுறையிலும் பார்க்க பொருத்தமானதாகும். ஆகவே தமிழ்ச் சமுதாயத்தில் பிரதான வர்க்கங்களையும் அவற்றின் பொருளாதாய நலன்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் வெளிப்படக்கூடிய வழிமுறைகளையும் இனம் காண முயல்வோம்.

இலங்கையில் நூற்றாண்டுகளாக நீடித்த காலனித்துவ ஆட்சியும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட நவகாலனித்துவ சுரண்டலாலும் உள்ளூரில் தேசிய முதலாளித்துவ வர்க்கத்தை வளர விடாமல் செய்து விட்டது. இத்துடன் சுதந்திரத்திற்குப் பின்பு சிங்கள பெருந் தேசிய வாதமானது பொருளாதாரத்துறையில் காட்டி வந்த இனரீதியான பாகுபாட்டின் காரணமாக தமிழ்ப்பிரதேசத்தில் தொழிற்துறைகள் பெருகவோ தமிழ்த் தேசிய முதலாளி வர்க்கம் வளரவோ வாய்ப்பற்றுப் போய்விட்டது. இதனால் தமிழ்ச்சமுதாயத்தில் தேசிய முதலாளிவர்க்கம் என்ற ஒன்று குறிப்பிடத்தக்கதாக இல்லை. அப்படி இருப்பினும் மிகவும் பலவீனமானதாக சிறு உற்பத்தியாளர் என்ற அளவிலேயே காணப்படுகின்றனர். இந்த நிலையில் தனது பொருளாதார நலன்களை தானே முன்னெடுப்பதோ, தனித்து நின்று காற்பாற்றுவதோ, இந்த வர்க்கத்திற்கு சாத்தியமில்லை .சுயசார்பு உற்பத்தி, அந்நிய, ஏகாதிபத்திய எதிர்ப்பு , உறுதியான தேசியம், பூர்சுவா ஜனநாயகம் போன்றவை இந்த வர்க்கத்தின் பொருளாதாய நலன்களில் இருந்து பிறக்கக்கூடிய அரசியல் நிலைப்பாடுகளாகும்.

காலனித்துவ ஆட்சியில் தோன்றி வளர்ந்து வந்த தரகு முதலாளித்துவவர்க்கமானது சுதந்திரத்திற்கு பின்பு இனரீதியாக பிளவுபட்டுள்ளது. சந்தையில் தமக்குரிய பங்கை சிங்கள தரகு முதலாளி வர்க்கமானது கொடுக்க மறுப்பதனால் தமிழ் தரகு முதலாளித்துவ வர்க்கமானது தேசியத்தை முன்னெடுக்க நேர்ந்துள்ளது. ஏகாதிபத்திய ஏகாதிபத்திய, அந்நிய சார்பு என்பது இதன் குறிப்பானதன்மையாகும். தேசிய வாதத்தை பேரினவாத அரசிற்கு நெருக்கடி கொடுக்கவும், அதன்மூலம் சந்தையை மறுபங்கீடு செய்யவும் பயன்படுத்த முனையும். இந்த வர்க்கமானது இது சாத்தியப்படாத இடத்து பிரிவினையின் மூலம் தனது சந்தையை துண்டித்து எடுத்துக் கொள்ளவும் முனையும் .பேச்சு வார்த்தை மூலம் சமரசம் செய்வதையே முன்பு அதிகளவில் விரும்பிய இந்த வர்க்கமானது, சிங்கள பேரினவாதம் இலகுவில் தன் பங்கை கொடுக்கமாட்டாது எனக் கண்டு கொண்ட நிலையில் பிரிவினையை ஆதரிக்கிறது. ஆனால் எப்போதெல்லாம் பேரினவாதம் இறங்கி வந்தாலும் அதனுடன் சமரசம் செய்ய தயாராகவுள்ளது. சிங்கள பேரின வாதத்தை எதிர்த்தாலும் கூட இன்னும்கூட தனது பிழைப்புக்காக பல தொடர்புகளை அரசுடன் இது கொண்டுள்ளது. அரசுடன் சமரசம் செய்து வைக்க முனையும், தொடர்பாளர்களாகச் செயற்படும் கொழும்பிலுள்ள பிரமுகர்கள் குறிப்பாக இந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். சிங்கள அரசை இவர்கள் எதிர்த்தாலும் ஏகாதிபத்தியங்களையோ அதன் சுரண்டல்களையோ எதிர்க்க மாட்டார்கள்.

நிலப்பிரபுத்துவ சக்திகள் தமிழ்ப்பிரதேசத்தில் குறிப்பிடத்தக்க அளவுற்கு இல்லை. அப்படி இருந்தவர்களும் அரசினால் கொண்டுவரப்பட்ட நிலுச்சவரம்புச்சட்டம் போன்றவற்றாலும் பசுமைப்புரட்சியுடன் விவசாயத்தில் நவீனமுறைகள் நுழைந்ததனாலும் இவர்கள் முதலாளித்துவ உற்பத்தி முறையுடன் இணைந்து விட்டார்கள். பணக்கார விவசாயிகள், பணக்கார மீனவர்கள் (மீனவ முதலாளிகள், சம்மாட்டிகள்) போன்றோரும் நவீன உற்பத்தி முறைகள் காரணமாக ஏகாதிபத்திய பொருளாதார வலைப்பின்னலுடன் நெருக்கமாக பிணைந்துள்ளார்கள். இவர்கள் தரகு முதலாளிவர்க்கத்திற்கு நெருக்கமானவர்கள். பெரிய கடைக்காரர்கள் திறந்த பொருளாதார கொள்கையின்கீழ் ஏகாதிபத்தியத்தின் இறக்குமதிப் பொருட்களை விற்பனை செய்தே வாழ்பவர்கள் இவர்களும் தரகுமுதலாளிகளுக்கு மிகவும் நெருக்கமானவர்களே.

முதலாளித்துவ பெருவீத உற்பத்தி மிகவும் பலவீனமாக இருக்கும் நிலையில் தமிழ்ப்பிரதேசத்தில் பாட்டாளிவர்க்கத்தின் எண்ணிக்கை மிகவும் குறைவாகும். வறிய விவசாயிகள் , வறிய மீனவர்கள் போன்றோர்களும் பேரினவாத ஒடுக்கு முறையினாலும், ஏகாதிபத்திய சுரண்டலினாலும் அதிகம் பாதிக்கப்படுபவர்களாகும் தொழிலாளர் வர்க்கத்தின் உறுதியான கூட்டாளிகளாக அமையக் கூடியவர்கள் இவர்கள்.தேசிய விடுதலைப் போராட்டத்தில் இவர்களது ,நலன்களும் உறுதியாக பிணைந்துள்ளன. முதலாளித்துவ சித்தாந்தத்திற்கு பலியாகிப் போய்யுள்ள நிலையில் இவர்கள் தமக்கென ஒரு வர்க்க தாபனத்தையோ, தனியான அரசியல் கோரிக்கைகளையோ முன்னெடுக்காது தரகு முதலாளித்துவ சக்திகளையே பலப்படுத்தி வருகின்றன. எதிர்காலத்தில் தோன்றும் எந்த ஒரு புரட்சிகர அமைப்பும் இவர்களையே போராட்ட சக்திகளாக கருதி செயற்பட வேண்டும்.

முதலாளித்துவம் பலமாக வளராத நிலையில் குட்டி பூர்சுவா வர்க்கம் அதிகளவில் காணப்படுகிறது. இத்துடன் எமது நாட்டில்அரசசேவைத் துறையே பிரதான வேலை வழங்கும் துறையாக இருப்பதனால் அரச கீழ் நடுமட்ட ஊழியர்களாகவும் இதன் எண்ணிக்கை மிகவும் பெரிதாகவுள்ளது. நடுத்தர விவசாயிகள், மீனவர்களும் இவர்களுடன் ஒப்பிடக்கூடியவர்களே. அரசின் பேரினவாத ஒடுக்குமுறையினாலும் ஏகாதிபத்தியத்தின் சுரண்டலினாலும் அதிகம் பாதிக்கப்படும் இவர்கள் ஒரு மாற்றத்தை விரும்பினாலும் இழப்பதற்கு தயாரற்ற இவர்களது வாழ்நிலை காரணமாக ஊசலாடுகிறார்கள். குறுகிய சமூக கண்ணோட்டம் இவர்களது பிரதான குறைபாடாகும். போராட்ட அமைப்புகளில் முன்னணி அங்கவத்தவர்களுள் பெரும்பாலானோர் இந்த வர்க்கத்தை சேர்ந்தவர்களாக இருப்பதனால் அமைப்புக்களின் பல குறைபாடுகளுக்கு இந்த வர்க்கம் நேரடி காரணமாகிறது.

தமிழ்ப் பிரதேசத்தில் -குறிப்பாக யாழ்ப்பாணத்தில்- கள்ளக்கடத்தல் என்பது ஒரு குறிப்பிடத்தக்க தொழிலாகவே நடைபெற்று வந்தது. கடந்த காலத்தில் தமிழ்ப்பிரதேசத்தில் பொருளாதார நடவடிக்கைகளில் இதன் பங்கு என்ன? இந்த உதிரி முதலாளிகள் சமுதாயத்தில் வகித்த இடம் என்ன? போன்றவை தெளிவற்றதாகவே உள்ளன. தமிழீழ விடுதலைப் போராட்டமானது இந்தியாவை பின்தளமாக பாவித்ததனால் வண்டி ஒட்டத்திற்காகவும் பின்பு நிதித்தேவைக்காக அமைப்புகள் போதைப்பொருட்களை கடத்தவும்,ஆயுதங்களை கடத்திவர முயன்ற போது பல்வேறு அமைப்புக்களும் இந்த வர்க்கத்துடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தும் அவசியம் ஏற்பட்டது. ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பகாலத்தில் உதிரிப்பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்த பலர் இயக்கங் களால் அவர்களது சமூக விரோத நடவடிக்கைகளுக்காக வேட்டையாடப்பட்டார்கள். பிற்காலத்தில் இந்த வர்க்கம் அமைப்புக்களுக் குள்ளேயே பிரதான அடியாள் கூட்டமாக உருவெடுத்தும் குறிப்பாக கவனிக் கப்பட வேண்டியதாகும். எமது போராட்டத்தில் தோன்றிய பல சமூக விரோத போக்குகளுக்கு இவர்களது செல்வாக்கு காரணமா என்று நுணுக்கமாக பரிசீலிப்பது அவசியமாகும்.

எமது போராட்டத்தில் தோன்றிய பல்வேறு அரசியல் போக்குகளையும் இப் போது இனம்காண முயல்வோம். தமிழ்த்தேசியத்தின் ஆரம்பமானது பூர்சுவா ஜனநாயகப் போராட்ட வடிவங்களாக இருந்தன. பாராளுமன்ற வாதம், அகிம்சைப் போராட்டங்கள்,பேரம் பேசும் பேச்சுவார்த்தைகள்,அரசுடன் இணக்கம் காணுதல்,அரசு உறுதி மொழிகளை கைவிடுதல் மீண்டும் போராட்டம் எனத் தொடங்கிய ஆரம்பகால தேசியமானது 70 களில் ஆயுதப் போராட்ட வடிவம் பெற்றது. ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பகால நடவடிக்கைகள் பூர்சுவா ஜனநாயக அரசியல் தலைமைகளை பலப்படுத்தும் விதத்திலும் அதற்கு துணையாகவுமே அமைந்த போதிலும் பிற்காலத்தில் ஆயுதப் போராட்டமானது சட்டரீதியான போராட்ட வடிவங்களில் இருந்து விலகின. பின்பு



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சட்டவடிவங்களான அகிம்சைப் போராட்டங்களை பின்னுக்கு தள்ளிவிட்டு பிரதான வடிவம் பெறவும் தொடங்கின. 80 களில் இந்திய அரசிடம் இருந்து இளைஞர் அமைப்புக்கள் உதவி பெறவும்,இந்திய அரசின் விருப்பத்திற்கு ஏற்ப போராட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முனைந்தன. 86 இல் புலிகள் ஏனைய அமைப்புக்களை தடைசெய்ய தொடங்கியது தடைசெய்யப்பட்ட அமைப்புகளில் பெரும்பாலானவை இந்திய, இலங்கை அரசுகளுடன் ஒத்துழைத்து செயற்பட தொடங்கின.தமிழீழ கோரிக்கைகளை முற்றாக கைவிட்டன. புலிகள் தமிழீழ கோரிக்கைகளில் ஒப்பீட்டளவில் உறுதியாக இருந்தாலும் அவ்வப்போது பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளவும், மாற்றுத் திட்டங்களை பரிசீலிக்கத் தயாராகவும் இருந்தது. புலிகள் மக்களையும், சக அமைப்புக்களையும், முற்போக்கு எண்ணமுடைய தனிநபர்களையும் நசுக்கி தனது அரசியல் ஏக போகத்தை நிறுவிக்கொண்டன. பல சந்தர்ப்பங்களில் தனது ஏகபோகத்தை அங்கீகரிக்கும் படி வலியுறுத்திய அளவில் அரசியல் கோரிக்கைகளை வலியுறுத்தாமல் விடுவதும் கவனிக்கத்தக்கது. இந்திய, இலங்கை அரசுகளுடன் தேவைக்கேற்ப பேசவும், உதவிகளைப் பெறவும், பின்பு மூர்க்கத் தனமாக எதிர்த்து போராடவும் செய்கிறது. சிங்கள,முஸ்லிம் மக்களைபடு கொலை செய்கிறது. பெருமளவில் இளைஞர்களை திரட்டி தற்கொலை வடிவங்களையும் பயன்படுத்தி இராணுவத் தாக்குதல்களை ஒருவித வெறித்தனத்துடன் மேற் கொண்டு செல்கிறது. இந்த வகைகளில் தமிழ்த்தேசியத்தை பலவித குறைபாடுகளுடன் தான் என்றாலும் முன்னெடுத்துச் செல்லும் ஒரே அமைப்பாக புலிகள் திகழ்கின்றனர்.

இந்த பல்வேறு அரசியல் போக்குகளையும் புறநிலையான வர்க்கங்களின் நலன்களுடன் இனம்காண முயல்வோம். ஆரம்பகால தேசியமானது தமிழ்த்தரகு முதலாளித்துவ வர்க்கங்களின் நலன்களையே பிரதிநிதித்துவம் செய்தது எனலாம். அரசுடன் சமரசம் செய்தல், சலுகை பெறுதல் போன்ற வையும் ஏகாதிபத்திய சார்பு நிலைப்பாடுகளும் இதனையே காட்டுகின்றன. தேவைக்கேற்ற விதத்தில் போராட்டத்தை தீவிரப்படுத்தும் விதத்தில் குட்டி பூர்சுவா வர்க்கத்தின் கோரிக்கைகளையும் முன்னெடுத்து வெகுஜன போராட்டமாக மாற்றின. ஆனால் இந்தப் போராட்டங்களின் இறுதி நோக்கம் சலுகைகளை பெறுவதாகவே இருந்தது. 72 இல் தரப்படுத்துதலை அடுத்து குட்டி பூர்சுவா வர்க்கம் பின்னணியைக் கொண்ட மாணவர்களது போராட்டங்கள் ஓரளவு சுயதீனத்தன்மையுடன் வெளிப்பட்டன. பின்பு இந்த குட்டி பூர்சுவா வர்க்கப் பின்னணிகளை உடைய தீவிர இளைஞர்கள் தரகு முதலாளித்துவ வர்க்கத்தின் மிதமான போக்குடன் முரண்பட்டதே இளைஞர் அமைப்புக்கள் தோன்றுவதற்கு காரணமாயின. இந்த இளைஞர் அமைப்புக்களே ஆயுதப்போராட்டத்தையும் முன்னெடுக்கலாயின. இளைஞர் அமைப்புக்கள் குட்டி பூர்சுவா நலன்களையும், அம்சங்களையுமே பிரதானமாக வெளிப்படுத்தின. நீண்டகால,தெளிவான கண்ணோட்டமின்மை ,சுயமான அரசியல் இன்மை, சாகச மனோபாவம், மக்களின் பாத்திரத்தை புரிந்து கொள்ளாமை, போலிப் பெருமை, பழமை வாதத்தை கைவிடாமை, இலட்சியவாத வாழ்க்கை முறைப்பிரேரித்தல் போன்றவற்றில் குட்டி பூர்சுவா மனோபாவமே வெளிப்பட்டது. இளைஞர் அமைப்புகள் வளர்ச்சியில் ஒரு கட்டத்தில் தமக்குள் மோதிக் கொள்ள ஆரம்பித்து இன்று புலிகள் தமது மேலாதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டுள்ளார்கள்.

புலிகள் இந்த போராட்டங்களில் ஒப்பீட்டளவில் உறுதியாக நிற்கின்றனர். இவர்களது ஜனநாயக மறுப்பானது 'பாசிச' வடிவத்தை பெற்றுள்ளது . மக்கள் மீதும், ஏனைய அமைப்புகள் மீதும் சொந்த அங்கத்தவர்கள் மீதும் அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விடும் அதிகார வர்க்கமாக இதன் தலைமை ஆகிவிட்டது. இவர்களது தேசியமானது ஏனைய சிறுபான்மை இனங்களை ஒடுக்கும் அளவிற்கு குறுகியதாகி விட்டது. சுய உற்பத்தி போன்றவற்றில் எந்த அக்கறையும் காட்டாத இவர்கள் இறக்குமதியாகும் அல்லது தென்னிலங்கையில் இருந்து கொண்டுவரப்படும் பொருட்களுக்கு வரிவிதிப்பதையே தமது பிரதான வருமானமாக கொண்டுள்ளார்கள். தங்க வசூலிப்பாகவும்,வியாபார நிறுவனங்களில் மூலதனத்தில் பங்கு கேட்பதன் மூலமும் ஓரளவு வசதியானவர்களை பணயம் வைத்தும், கப்பம் கேட்ம் இவர்க ள் செய்யும் மூலதனத் திரட்டலானது இன்று பெட்டிக் கடைக்காரர்களைக்கூட விட்டுவைக்கவில்லை. தமிழ்ப்பிரதேசத்தில் தமது மூலதனங்களைப்போட்டு தொழில் புரிய விரும்பும் தேசிய உணர்வுள்ள ஒரு சிறு உற்பத்தியாளர்கள் புலிகள் தமது சொத்துக்களை அபகரித்துவிடலாம் என்ற அச்சத்தினாலேயே அவ்வாறு செய்யாமல் விடுகிறார்கள். பேரினவாதத்திற்கு எதிராக போராட்டத்தை முன்னெடுப்பதன் மூலம் மக்களது அபிலாசைகளை ஓரளவு வெளிப்படுத்தும் புலிகள் அதேசமயத்தில் மக்களை அடக்குவதிலும், அவர்களது ஜனநாயக அடிப்படை உரிமைகளை நசுக்கியும், பலவிதத்தில் கட்டையப்படுத்தியும் பலவந்தப்படுத்தியும் தமது தேவைகளுக்கு சேவை செய்யவைத்தும் , மக்களது அடிப்படை நலன்களைப்பற்றிக்கூட கவலைப்படாது அவர்களைக் கசக்கிப் பிழிந்து வரிவசூலித்தும் ஒருவிதத்தில் மக்களை விட்டுப் பிரிந்த மக்களுக்கு மேலானவர்களாக புல்லுருவித்தனத்துடன் செயற்படுகிறார்கள். அதுவும் தமிழ் மக்களின் பெயரால்,அவர்களின் ஏகபோக பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டு செயற்படுகிறார்கள். இவர்களிடம் திட்டவட்டமான உறுதியான ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாடு கிடையாது. தமது குழுநலன்களுக்கு ஏற்ப இந்திய அரசையோ, இலங்கை அரசையோ, இஸ்ரேல் போன்ற ஏகாதிபத்தியத்தின் எடுபிடிகளையோ காலத்திற்கு, காலம் சார்ந்து நின்று தம்மைப் பலப்படுத் துவதில் மிகவும் கவனமாகவும், திறமையாகவும் செயற்படுகிறார்கள். இப்படியாக அந்நிய சக்திகளை சார்ந்து செயற்படும் போதே தனது குழுநலன்கள் பாதிக்கப்படுகையில் அவர்களுடனான உறவுகளை துண்டித்துக் கொள்வதையும் காண்கிறோம். புலிகளுக்கு ஆதரவாக வெளிநாடுகளில் செயற்படும் சில சக்திகள் திட்டவட்டமாக அமெரிக்க ஏகாதிபத்திய சார்புடையவர்கள் என்பது கவனிக்கத்தக்கது. இப்படியாக புலிகள் பலவிதத்திலும் முன்னெடுக்கும் தமது அரசியல் மூலம் வெளிப்படுத்தும் நலன்கள் எந்த வர்க்கத்தினுடையவை ?

தேசியமானது இன்று தமிழ்ச்சமுதாயத்தின் எல்லா வர்க்கங்களினதும் பொதுவான தேவையாகிவிட்ட நிலையில் புலிகளது தேசியத்தை தேசிய முதலாளிகளின் நலன்களுடன் இனம்காண்பது சாத்தியமற்றது. தேசியம் என்றொரு அம்சத்தை விட புலிகள் ஏனைய அம்சங்களில் - சுயசார்பு பொருளாதாரம், ஏகாதியபத்தியஎதிர்ப்பு, பூர்சுவா ஜனநாயகம் போன்றவற்றில்- தேசிய முதலாளிவர்க்கத்தின் நலன்களுக்கு, பண்புகளுக்கு எதிராகவே உள்ளார்கள். ஆரம்பத்தில் புலிகள் குட்டி முதலாளித்துவ வர்க்க குணாசம்களை பெரிதும் கொண்டிருப்பதாலும் இன்று அவற்றில் சிலவற்றைக் கொண்டிருப்பினும் பெருமளவில் அவர்கள் இந்த குட்டி முதலாளித்துவ பண்புகளைக் கடந்து வளர்ந்து விட்டார்கள் என்றே கருதவேண்டியுள்ளது. அமைப்புரீதியாக பலம்பெறும் போது அமைப்பின் பலத்தையும்,செல்வாக்கையும் பயன்படுத்திய தலைமையானது மூலதனத்தை பெருமளவில் திரட்டியுள்ளது. இதற்கு மேல் இவர்களது வர்க்கநிலமையும், கண்ணோட்டங்களும் ஆரம்பத்தில் இருந்தது போல இருக்கபோவதில்லை. தமிழ்ச்சமூகத்தில் பலம்பெற்றுநிற்கும் வர்க்கங்கள் இவர்களை தமதுசித்தாந்த செல்வாக்கிற்குக் கொண்டுவருவது கஷ்டமானதல்ல. தனித்துவமான சித்தாந்தம் என்று ஒன்று புலிகளிடம் இல்லாதபோது இது சிரமமானதல்ல.

www.tamilarangam.net

பொதுவாக எமது சமுதாயத்தில் முதலாளித்துவ சித்தாந்தமே மேலாண்மை செலுத்துகிறது. இந்தநிலையில் புலிகள் தேசியமுதலாளித்துவ வர்க்கநலன்களை பிரதிபலிக்கவில்லை என்பதனால் தரகுமுதலாளி வர்க்க நலன்களைத்தான் கட்டாயம் பிரதிபலித்தாக வேண்டும் என்ற கருத்தொன்று சிலரது வாதங்களில் தொனிக்கிறது. இந்த வாதத்தை முன்வைப்பவர்கள் புலிகளிடம் தேசிய முதலாளிவர்க்க அம்சங்கள் இல்லை என்று ஆதாரங்களை முன்வைக்கும் அளவிற்கு தரகுமுதலாளிவர்க்க நலன்களை எப்படி குறிப்பாக வெளிப்படுத்துகிறார்கள். எனபோதிய சான்றுகள் மூலம் நிரூபிப்பதில்லை. புலிகளின் மூலதனத்திரட்டு நடவடிக்கைகள் பெட்டிக் கடைக்காரர்களையே விட்டுவைக்காத போது தரகு முதலாளிக்குமட்டும் வாய்ப்பாகத்தான் இருக்கிறது என்பதில்லை இன்று தமிழ்ப்பிரதேசத்தில் நிலவும் அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடானது பெரிய வியாபாரிகள் கொள்ளை இலாபம் அடிக்க உதவவேசெய்கிறது. இதனை புலிகளும் அனுமதிக்கவே செய்கிறார்கள் என்பது உண்மையே. ஆனால் இதற்கு பிரதியுபகாரமாக புலிகள் கடைக்காரரின் மூலதனத்திலேயே அரைப்பங்கைக் கேட்கிறார்கள். இது இந்த வர்க்கத்திற்கு மகிழ்ச்சியளிப்பதாக இல்லை.

தமிழ்ச்சமூதாயத்தில் தேசிய முதலாளிகள், தரகுமுதலாளிகள் என்ற இரண்டு ஆளும் வர்க்கங்கள் மட்டுமே இருக்கின்றன. இதனால் புலிகள் தேசிய முதலாளிகள் இல்லையென்றால் கட்டாயமாக தரகு முதலாளிகளாகத்தான் இருக்க வேண்டும் என்ற ஒரு குறுகிய கண்ணோட்டத்துடன் முடிவுகட்டத் தேவையில்லை. இதனை விட இன்னும் பல சாத்தியக்கூறுகள் மூலமும் புலிகளின் அரசியலை புரிந்து கொள்ளும் வாய்ப்புக்கள் இருக்கவே செய்கின்றன.

குட்டி பூர்சுவா வர்க்கத்தைச் சேர்ந்த புலிகள் தமது குழுநலன்களில் காட்டிய அதீத அக்கறை காரணமாக ஏனைய குழுக்களை அழித்து, பலம்பெற்று இன்று ஒரு தனியான வர்க்கமாக உருவாகிவருகிறார்கள் என்பது ஒரு விளக்கமாகும். புலிகளின் 'பாசிசத்தை' தாபனத்துள்ளும், மக்களுடனும் உள்ள உறவுகளில் ஜனநாயகமின்மையை குட்டி பூர்சுவா வர்க்கத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட மறுக்கும் தனிநபர் வாதத்தின் தீவிரமான எதிர் நிலையாக சிலர் குறிப்பிடுவது கவனமாக பரிசீலிக்க வேண்டியதாகும்.

சமூகநலன்களின் அக்கறையின்மை, தரகு முதலாளிகளிடம் கூட இணக்கம் காண முடியாத தன்மை, போதைப் பொருள் மற்றும் பலவித சமூகவிரோத நடவடிக்கைகளுடனான தொடர்பு போன்ற அம்சங்கள் இவர்களது வர்க்க மூலங்களில் ஒன்றான உதிரிமுதலாளி வர்க்கத்தின் தன்மைகள் என்பது இன்னோர் விளக்கமாகும். சில சந்தர்ப்பங்களில் புலிகளின் சில செயற்பாடுகள் 'மாபியா' கும்பல்கள் சர்வதேச போதைப்பொருள் கட்டங்களுடனும் இனம் காணத்தக்கதாக இருப்பதும் கவனத்துக்குரியது.

குட்டி முதலாளித்துவ அமைப்பாக தோன்றிய புலிகள் வளர்ந்து விட்ட நிலையில் தமது சமூக அந்தஸ்து,அதிகாரம் காரணமாக பெருமளவு மூலதனத்தைத் திரட்டிக் கொண்டு தரகுமுதலாளி வர்க்கமாக வளர்ந்து வரும் ஒரு வளர்ச்சிக் கட்டத்தில் இருக்கிறார்கள். இந்த மாறும் கால கட்டமே இவர்களை இனம் காண்பதிலுள்ள குழப்பங்களுக்கான காரணமாகும். இவர்கள் ஒரு போராட்டச் சூழலில் அதுவும் போராட்டத்திற்கு தலைமைதாங்கும் ஒரு அமைப்பாக இருப்பதனால் சமுதாயத்தில் சமூகமான உற்பத்தி உறவுகளை இன்னும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. ஆனால் தமது வளர்ச்சியின் அடுத்த கட்டத்தில் இவர்களது நலன்கள் இன்னும் தெளிவாக வெளிப்படும். அதாவது, தமது பலத்தை இன்னும் உறுதியாக கெட்டிப்படுத்திய பின்பு- தமிழீழத்தை விடுவித்த பின்பு அல்லது வடக்கு கிழக்கில் பெரும்பகுதியை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்த நிலையில் ஸ்ரீலங்கா அரசுடன் பலமான நிலையில் நின்று பேரம் பேச முனைகையில் இந்த அம்சங்களை தெளிவாக இனம் காணலாம் என்பது இன்னோர் விளக்கமாகும்.

இப்படியாக இன்னும் பல சாத்தியக்கூறுகள் இருப்பதால் புலிகளின் அரசியல் தேசியமுதலாளி - தரகு முதலாளி என்ற இரண்டு துருவங்களுள் ஒன்று மட்டுமே என்று பார்க்காமல் வேறும் பலவிதமான வாய்ப்புக்களையும் பரிசீலிப்பது அவசியமானது. அப்போது தான் புலிகள் தொடர்பான தமது சொந்த நிலைப்பாடுகளையும் எதிர்கால வேலைமுறைகளையும் திட்டமிடுவது புரட்சியாளர்களுக்கு சாத்தியப்படும். ஆகவே இந்த திசையில் எமது தேடல்களை இன்னும் ஆழப்படுத்துவது உடனடி அவசரப்பணியாகிறது.

இந்த நிலையில் புலிகளை தேசியசக்தி என்று குறிப்பிடுவது எந்த அர்த்தத்தில் சரியானதாகும்?

தேசிய சக்தி எனும் பிரச்சினை இந்திய தலையீட்டுடனேயே தொடங்கியது. இந்தியா தென்னாசிய பிராந்திய வல்லரசு என்பதிலும், அது ஈழத்தமிழர் பிரச்சினையில் தலையிடுவது தனது மேலாதிக்கத்திற்காகவே என்பதையும் முதலில் புரிந்து கொள்வது அவசியமானது. இவ்வாறு இந்திய அரசும், அதன் ஆளும் வர்க்கங்களும் தமது நலன்களுக்கு சாதகமாக ஸ்ரீலங்காவின் இறைமைக்கும், தமிழ் மக்களின் போராட்டத்திற்கு குந்தகமான விதத்திலும் ஸ்ரீலங்கா அரசுடன் ஒரு உடன்பாட்டை- தமிழ் மக்களின் எந்தவித ஆலோசனையும் கலக்காமல், தமிழ் மக்களது சம்மதத்தையும் பெறாமல் செய்துவிட்டு, அதனை தமிழ்மக்கள் மீது திணிக்கமுற்பட்ட போது, இந்தியஅரசு தனது நலன்களை மட்டுமே கருத்திற்கொண்டு தமிழ்மக்களுக்கு எந்தவிதமான உருப்படியான தீர்வுகளையும் வழங்காது தமிழ்மக்கள் தமது போராட்டத்தை கைவிடும்படி நிர்ப்பந்தித்த நிலையில் இந்திய அரசுடன் முரண்பட்டு மோதுவது தமிழ்த்தேசியத்தை பொறுத்த வரையில் தவிர்க்க முடியாததாகிறது. இந்த வகையில் புலிகள் விரும்பியோ விரும்பாமலோ முழுமனதுடனோ அரைகுறைமனதுடனோ இந்திய இராணுவத்துடன் மோதியதன் மூலம் தமிழ்த்தேசியத்தையே பிரதிநிதித்துவம் செய்தார்கள். இப்படிப்பட்டயுத்தம் நடைபெறும்போது இந்த யுத்தத்தில் யார் பக்கத்தில் நியாயம் இருக்கிறது என்ற பொதுப்படையான கேள்விக்கு பதிலாக புலிகள் ஒரு தேசிய சக்தியென்று குறிப்பிடுவது சரியானதே. இதன் மூலம் நாம் இந்திய அரசை ஆதரிப்பதோ, பலப்படுத்துவதோ முடியாது என்ற நிலைப்பாடு உருவாகிறது.

இவ்வாறே 1990 ஜூனில் ஆரம்பித்த யுத்தமானது புலிகளின் தலைமையில் தனிப்பட்ட விருப்பு வெறுப்பிலிருந்து பிறந்ததல்ல. 70 களில் தொடங்கி 80 களில் தீவிரப்பட்ட போராட்டமானது யாரோசில தனிப்பட்ட நபர்களது விருப்பு வெறுப்புகளில் இருந்து பிறந்ததல்ல.இப்படி கருதுவது மார்க்சிய அணுகுமுறையுமாகாது. தமிழ்தேசிய இனத்தின் மீதான பேரினவாத ஒடுக்குமுறைகள் சாதாரண அரசியல் வழிமுறைகளினால் அகற்றப்பட முடியாமல் போனதால், அந்த அரசியலின் தொடர்ச்சியாகவே இந்த ஆயுதப்போராட்டம் வெடித்து. பின்பு இந்தியப் படைகள் தலையிட்டபோது புலிகள் ஒரு கட்டத்தில் ஸ்ரீலங்கா அரசுடன் பேசத் தொடங்கினர். இந்தப் பேச்சுவார்த்தைகளில் எந்தவிதமான உருப்படியான தீர்வையும் ஸ்ரீலங்கா அரசு முன்வைக்கவில்லை. (இன்றுவரையும் தனது தீர்வை முன்வைக்க முடியாத வங்குரோத்து நிலையிலேயே அரசு இருக்கிறது) இந்த நிலையில் தமிழ்த்தேசியமானது மீண்டும் வன்முறை வடிவம் பெற்று போராக வெடித்தது தவிர்க்கமுடியாததே. புலிகள் மட்டுமல்ல வேறெந்த சக்தி அந்த நிலையில் இருந்தாலும் சற்று விரைவாகவோ அல்லது சற்று தாமதமாகவோ இப்படிப்பட்ட ஒரு மோதலில் ஈடுபட்டிருக்க வேண்டி ஏற்படுவது- அது. தமிழ்தேசியத்தின் நலன்களைக் கைவிட்டு எதிரியிடம் சரணடையாத வரையில்- தவிர்க்கமுடியாததே. ஆகவே இந்த யுத்தத்தில் புலிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசியத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்என்பதே உண்மை நிலையாகும். இந்த நிலையில் ஸ்ரீலங்கா அரசை ஆதரிப்பதோ, பலப்படுத்துவதோ, தமிழ்த்தேசியத்திற்கு எதிராக செயற்படுவதாகவே அர்த்தப்படும்.

இப்படியான ஒரு யுத்தத்தில் நியாயம் எந்தப்பக்கத்தில் இருக்கிறது என்று பொதுப்படையான கேள்விக்கு விடையளிக்கும் வகையில் புலிகளை தேசிய சக்தியாக இனம் காண்பது சரியானதே. ஆனால் இதற்கு மேலாக இன்னும் குறிப்பாகவும், கறாராகவும் இதனைப் பரிசீலிப்போமாயின் எமது அடுத்தகடமை என்னவென்று புலனாகும். மிகவும் பொதுப்படையான, மிகவும் மேலெழுந்த அர்த்தத்தில் பார்க்கையில் புலிகள் இந்த யுத்தத்தில் தமிழ்த்தேசியத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதாக தோன்றினாலும் மிகவும் குறிப்பான, மிகவும் கறாரான பரிசீலனையில் புலிகளிடம் தமிழ்மக்களுக்கு விரோதமான உண்மையான தமிழ்த்தேசியத்திற்கு விரோதமான அம்சங்களும் காணப்படுவது புலப்படும்.

தமிழ்த்தேசியத்தை முன்னெடுப்பதில் புலிகள் தமிழ்மக்களுக்கு உடன்பாடான அம்சத்தைக் கொண்டிருந்தாலும் அடிப்படையில் இவர்கள் தமிழ் மக்களுக்கு எதிரான பல அம்சங்களை கொண்டுள்ளார்கள். தேசியம் என்பதைத் தவிர தமிழ் மக்களின் மற்றெல்லா அபிலாசைகளுக்கும் இவர்கள் முரண்பட்டவர்களே. தேசிய இனப்பிரச்சினை என்பது அடிப்படையில் ஒரு ஜனநாயகப் பிரச்சினை. ஆனால் தேசிய விடுதலையை முன்னெடுப்பதாகக் கூறும்புலிகள் அடிப்படையிலேயே பாசிசத்தன்மைகளைக் கொண்டிருப்பது ஒரு பெரிய முரண்பாடாகும். தேசிய விடுதலையானது இவர்களது அர்த்தத்தில் மக்களது விடுதலை அல்ல. இன்னும், தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமிழ் மக்களது பாத்திரத்தை மறுப்பதன், மூலமும் இன்னோரு சிறுபான்மை இனமான முஸ்லிம் மக்களை பகைமையுடன் நடத்துவதன் மூலமும், இது போன்ற இன்னும் பல தொலை நோக்கற்ற நடவடிக்கை நீண்ட காலத்தில் தமிழ்த்தேசியத்தில் நலன்களுக்கு விரோதமாக, தமிழ்த்தேசியத்தை பலவீனப்படுத்தும் விதத்திலேயே செயற்படுகிறார்கள்.

ஆயினும் பேரினவாதம் மிகவும் மோசமான வடிவம் பெற்று இனப்படுகொலை எனும் வடிவத்தைப் பெற்றுள்ளதனாலும், தமிழ்மக்களின் அபிலாசைகளை புரிந்து கொண்டு எந்த விதமான குறைந்த பட்ச, ஜனநாயகப் பூர்வமான தீர்வுகளையும் முன்வைக்க முடியாது சிங்கள தரகு முதலாளிவர்க்கம் இனவாதத்திற்குள் சிக்கி போயுள்ளதாலும் யுத்தம் தொடர்கிறது. இந்த யுத்தத்தில் தமிழ்த் தேசியத்தின் பக்கத்தில் நின்று அரசபடைகளை முகம் கொடுக்கும் ஒரே சக்தியாக புலிகள் இருக்கும் வரை மக்களைப் பொறுத்தவரையில் சிங்களப் பேரினவாதத்திற்கும் தமிழ்த்தேசியத்திற்கும் இடையிலான முரண்பாடு பிரதான வடிவம் பெறுவதனால் புலிகளுக்கும் - தமிழ் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு இரண்டாம் பட்சமாக உள்ளது.

ஆகவே புலிகளின் அரசியலில் உள்ள இரண்டு முக்கிய அம்சங்களை சரியாக இனம் காணவேண்டும்.

1) தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகளை பிரதிநிதித்துவப் படுத்துவதால் தமிழ்மக்கள் சார்பானது

2) தமிழ் மக்களின் மீது மோசமான அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விடுவதனால் தமிழ்மக்கள் நலன்களுக்கு விரோதமானது.

இவற்றுள் ஏதாவது ஒரு அம்சத்தை மட்டும் பார்க்கவோ அல்லது ஒன்றை மட்டுமே முதன்மைப்படுத்தி மற்றையதைப் பற்றி பாராமுகம் காட்டுவதோ புலிகள் பற்றிய முழுமையான மதிப்பீடாகாது.

புலிகளை தேசியசக்தியாக இனம்காணும் சிலர் அதனைப்பலப்படுத்த முனைகையில் அவர்கள் முதலாவது அம்சத்தை மட்டுமே முதன்மைப்படுத்தி இரண்டாவது அம்சத்தை மறந்து விடுகிறார்கள். புலிகளை தோற்கடிப்பதே உடனடிப்பணிஎன்று கூறி இலங்கை இந்திய அரசுகளுடன் கூட்டு சேர்பவர்கள் இரண்டாவது அம்சத்தை முதன்மைப் படுத்தி முதலாவது அம்சத்தை மறந்து விடுகிறார்கள். இன்னோர் விதத்தில் பார்த்தால் புலிகளைப் பலப்படுத்துபவர்கள் புலிகள் தமிழ்மக்களை ஒடுக்குவதற்கும் மறைமுகமாக துணைபோகிறார்கள். இலங்கை, இந்திய அரசுகளுடன் இணைந்து புலிகளுக்கு எதிராக போராட முனைபவர்கள் மறைமுகமாக தமிழ்த்தேசியத்தை ஒடுக்குவதிலும் பங்கெடுக்கிறார்கள்.

ஆகவே புரட்சியாளர்களின் நிலைப்பாடு என்னவாக இருக்க முடியும்?

தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் தொடர்புடைய புரட்சியாளர்களின் கடமை, இந்தியாவில் அல்லது தென்னிலங்கையில் உள்ள புரட்சிகர சக்திகளுடைய கடமை போன்று மேலெழுந்த வாரியானதும் பொதுப்படையானதுமான முடிவுகளுக்கு வருவதும், எவர் சரி, எவர் பிழை என்று கூறுவது மட்டுமல்ல. மாறாக தமிழ்ப் புரட்சியாளர்கள் இந்த யுத்தம் தொடர்பாக மிகவும் குறிப்பான, ஆழமான, கறாரான நிலைப்பாடுகளை மேற்கொண்டு அதன் பின்னணியில் தமது திட்டங்களை வகுத்து செயற்படுவதன் மூலம் வரலாற்றுப் போக்கில் தலையிட்டு செயற்படுவது அவர்களது கடமையாகிறது. ஆகவே சரியான மாற்றை முன்வைக்கும் புரட்சிகர கடமை தமக்கு உண்டு என்ற கரிசனையுடன் பொறுப்புணர்வுடன் இந்த பிரச்சினையை அணுகுவது அவசியமானது.

இந்தியாவில் உள்ள அல்லது தென்னிலங்கையில் உள்ள புரட்சியாளர்கள் புலிகளை தேசியசக்தி என இனங்கண்டு தமிழ்த்தேசியத்திற்கு எதிராக செயற்படும் இந்திய ஸ்ரீலங்கா அரசுகளை அம்பலப்படுத்துவது சரியானதே. ஆனால் இதற்கு அப்பால் போய் புலிகளைப் பலப்படுத்த முனைகையில் அவர்கள் தமிழீழப்புரட்சியாளர்களை பலவீனப்படுத்தும் வேலைகளையும் செய்கிறார்கள். தமிழீழப் புரட்சியாளர்கள் புலிகளைத் தேசிய சக்தி என்று இனம் கண்டு இந்திய, ஸ்ரீலங்கா அரசுகளை அம்பலப்படுத்துவது சரியானதே. ஆனால் அதற்கப்பாற் போய் புலிகளைப் பலப்படுத்த முனைகையில் தமிழ்மக்களுக்கு சரியான மாற்றுத்தலைமையை கொடுக்க வேண்டிய தமது பொறுப்பை தட்டிக் கழிப்பவர்கள் ஆகிறார்கள். தமிழ்மக்களின் தேசிய அபிலாசைகளுக்கு எதிராகவே இந்திய, ஸ்ரீலங்கா அரசுகள் யுத்தத்தை மக்கள் மீது திணிக்கிறார்கள் என்றவகையில் இந்திய, ஸ்ரீலங்கா அரசுகளை எதிர்ப்பது தமிழ்மக்களின் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்த முனையும் ஒவ்வொருவரது கடமையாகும். இந்தக் கடமையை தவறவிட்ட எவருமே தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதோ, அவர்களை சரியாக வழிநடத்துவதோ சாத்தியப்படாது. இவ்வாறு செய்வதன் மூலம் இவர்கள் தமிழ்மக்கள் மத்தியில் புலிகளின் தலைமையை பலப்படுத்தவே மறைமுகமாக உதவுகிறார்கள். புலிகளை அதன் பாசிச அடக்குமுறைகளை உண்மையிலேயே பலவீனப்படுத்த விரும்புபவர்கள் எவருமே தமிழ் மக்களின் தேசிய அபிலைசைகளை இன்னும் பலமாக,இன்னும் புரட்சிகரமான வழியில், அதிக ஜனநாயகத்துடன் முன்னெடுப்பது முன்நிபந்தனையாகிறது. இதன்மூலம் தான் தமிழ் மக்களுக்கு சரியான மாற்று புரட்சிகர அரசியலை , மாற்று அமைப்பை, மாற்று புரட்சிகர போராட்ட வழிமுறைகளை கொடுக்கலாம்.இதன்மூலம் புலிகளை மக்களிடம் இருந்து தனிமைப்படுத்துவது சாத்தியப்படும். புரட்சிகர தத்துவத்தின் வழிகாட்டுதலில், பாட்டாளிவர்க்க தலைமையில், பரந்துபட்ட மக்களின் யுத்தமாக தமிழீழ விடுதலைப்போராட்டத்தை முன்னெடுப்பதே சரியான மாற்றாக அமையும்.

புரட்சியாளர்கள் இவ்வாறு செயற்படுவதை புலிகள் அனுமதிக்கப்போவதில்லை. எந்தவொரு சரியான சக்தியின் வளர்ச்சியை அனுமதிப்பதும் புலிகளை பொறுத்தவரையில் 'தற்கொலை முயற்சியே' ஆதலால் இந்த வகைப் பட்ட எந்தவொரு முயற்சியையும் அதன் முளையிலேயே கிள்ளிவிட புலிகள் தமது சக்திகள் அனைத்தையும் திரட்டி- அவதூறுகளைப் பரப்பியும் எதிரியின் உளவாளிகள் என்று குற்றஞ்சாட்டியும், சதித்தனமான நடவடிக்கைகளினாலும், நேரடியாக இராணுவ ரீதியாக தாக்குதல்களினாலும்- முயல்வர் .இப்படிப்பட்ட நிலையில் தன்னை தற்காத்துக்- கொள்ளும் நியாயமான உரிமை எந்தவொரு புரட்சிகர சக்திக்கும் உண்டு. எதிரியினதும் எதிர்ப் புரட்சிகர சக்திகளினதும் அங்கீகாரத்தை பெற்றுத்தான் புரட்சியாளர்கள் செயற்பட வேண்டும் என்று யாரும் கருதக் கூடாது. ஆகவே இது போன்ற தாக்குதல்களை முன்னரே எதிர்பாத்து தயாராக செயற்படும் போது புலிகளின் இத்தகைய முயற்சிகள் எதுவும் புரட்சிகர சக்திகளை அழித்துவிட மாட்டாது. மாறாக சரியான அரசியல் திட்டத்தையும்,அமைப்பு வடிவத்தையும், போராட்ட வழிமுறைகளையும் மக்கள் முன்வைத்து மக்களை ஜனநாயக பூர்வமாக அணிதிரட்ட முனையும் ஒரு புரட்சிகர அமைப்பை தாக்குவது என்பது புலிகளைத்தான் மக்களிடம் இருந்து தனிமைப்படுத்தும். ஒரு புரட்சிகர அமைப்பு தனது கொள்கைகளை மக்கள் முன்வைத்து செயற்படும் நிலையில் புலிகள் அந்த அமைப்பின் மீது அவதூறுகளைப் பொழிவது கூட புலிகளையே அம்பலப்படுத்தும்.

புலிகள் மிகவும் பலம் பெற்று விளங்கும் இன்றைய நிலையில் புலிகளின் தாக்குதல்களை முகம் கொடுத்து சமாளிப்பது ஒரு சிறிய புரட்சிகர அமைப்பிற்கு கஷ்டமானது தான். இப்படிப்பட்ட நிலமைகளில் நேரடியாக மோதலைத் தவிப்பதும், தலைமறைவாக இரகசியமாக செயற்படுவதும் சிறிய அமைப்புகளுக்கு சாத்தியமானதே. இந்த வழிமுறைகளில் புரட்சியாளர்கள் கவனம் செலுத்தி தம்மை பலப்படுத்திக் கொண்டால் தங்களை தற்காத்துக் கொள்வது முடியாததல்ல. எந்தவொரு போராட்டத்திலும் பிரதான, தீர்க்கமான சக்தி மக்களே அன்றி கருவிகள் அல்ல. புலிகளை விட பலமாக விளங்கும் அரசை எதிர்த்துப் போக தயார் எனக் கூறும் புரட்சியாளர்கள் போராட்டத்தினுள் எழும் புலிகள் போன்ற சக்திகளை கையாளவும் கற்று கொள்வது அவசியமானது.

புலிகள் பற்றிய மிதமிஞ்சிய எதிர்ப்புணர்வானது சில அமைப்புக்களை ஸ்ரீலங்காவின் பாசிசத்தை மறக்கும் அளவிற்கு செய்துள்ளது. அரசின் கைக்கூலிகளாக ஆக்கியுள்ளது. புலிகளின் அடக்கு முறைகளை எதிர் கொள்ள முடியாத இயலாமையில் இருந்து பிறக்கும் துரோகத்தனம். இது வாகும். புலிகளின் அடக்கு முறைகளுக்கு முகம் கொடுக்கும் சரியான ஒரே வழி சரியான ஒரு புரட்சிகர தாபனத்தை கட்டியமைத்து போராட்டத்தை இன்னும் உறுதியாக முன்னெடுப்பதேயாகும். இதற்கு மாற்றாக வேறு குறுக்கு வழி எதுவுமே கிடையாது.

ஸ்ரீலங்கா அரசு எமது எதிரி என்பதை எந்தக் கணத்திலும் மறந்து விடக்கூடாது. இன்று புலிகளை பலவீனப்படுத்துவதாக கருதிக் கொண்டு எதிரியைப் பலப்படுத்துவதானது எதிரி நாளை புரட்சியாளர்கள் மீது தாக்கத் தொடங்கும் போது எதிரிக்கு சாதகமாகவே அமையும்.

**உயிர்ப்பு (இதழ் 1)**

# செவ்வாய்க்கிழமை மதியத்தூக்கம்

(இரவல்:1இன் தொடர்ச்சி)

மதகுரு முதலில் அப்பெண்ணையும் பின் அச்சிறுமியையும் பார்த்தார். அவர்கள் அப்போது அழப்போவதில்லை என்பதை அவர் ஒரு மதம்சார்ந்த ஆச்சரியத்தோடு உணர்ந்தார். அப்பெண் அதே தொனியில் தொடர்ந்தாள்:

''யாருடைய உணவையும் திருடாதே' என்று அவனுக்குச் சொன்னேன்; அதைக் கேட்டுக் கொண்டான். ஆனால் அதற்கு முன்பு, அவன் குத்துச்சண்டை போடும் போது குத்தப்பட்டதன் காரணமாக மிகவும் சோர்வடைந்து படுக்கையில் மூன்று நாட்கள் கழிப்பது வழக்கம்.''

''அவனுடைய எல்லா பற்களையும் எடுக்க வேண்டியதாயிற்று'' என்று இடைமறித்தாள் சிறுமி.

'அது உண்மை' என்று அப்பெண் ஒப்புக்கொண்டாள்.

'நான் சாப்பிட்ட ஒவ்வொரு வாய் உணவும், அவன் சனிக்கிழமை இரவுகளில் வாங்கிய அடிகளின் சுவையோடு இருந்தது.'

'கடவுளின் விருப்பம் ஆராய முடியாதது' என்றார் மதகுரு. இதை அவர் அதிக நம்பிக்கையற்றே சொன்னார். இதை அவர் சொன்னதற்கு அனுபவம், அவரை சந்தேகமுறுபவராக ஆக்கியிருந்தது ஒரு காரணம்; வெப்பமும் ஒரு காரணம். சூரிய வெப்பத்தாக்குதலிலிருந்து காத்துக்கொள்ள அவர்கள் தலைகளை மூடிக்கொள்ள வேண்டும் என்று யோசனை கூறினார். மிகுந்த தூக்கக்கலக் கத்தோடு கொட்டாவி விட்டுக் கொண்டு கார்லோஸ் ஸென்டனோவின் கல்லறையை எப்படிக் கண்டுபிடிப்பது என்று அவர்களுக்கு விவரங்கள் சொன்னார். திரும்பி வரும்போது அவர்கள் கதவைத்தட்ட வேண்டியதில்லை கதவுக்குக் கீழ் சாவிகளை வைக்கவேண்டும்; அதே இடத்தில் அவர்களால் முடிந்தால், மாதா கோயிலுக்குக் காணிக்கை செலுத்தவேண்டும். அவருடைய கட்டளைகளை அப்பெண் மிகுந்த கவனத்துடன் கேட்டுக்கொண்டாள். ஆனால் சிரிக்காமலேயே அவருக்கு நன்றி சொன்னாள்.

உலோக வலையில் மூக்கைப் பதித்தவண்ணம் யாரோ உள்ளே பார்த்துக் கொண்டிருப்பதை, தெருக்கதவைத் திறக்கு முன்னே அவர் கவனித்தார். வெளியே குழந்தைகளின் கும்பலொன்று இருந்தது. கதவு முழுதாகத் திறக்கப் பட்டபோது குழந்தைகள் சிதறி ஓடின. சாதாரணமாக அந்த நேரத்தில் தெருவில் யாரும் இருக்கமாட்டார்கள். இப்போது குழந்தைகள் மட்டுமின்றி வேறு பலரும் வாதுமை மரங்களின் கீழ் இருந்தனர். வெப்பத்தில் நீந்திக் கொண்டிருந்த தெருவை மதகுரு ஆராய்ந்தார். பின் புரிந்து கொண்டார். மென்மையாகக் கதவை மீண்டும் மூடினார்.

(தொடர்ச்சி 32 ஆம் பக்கம்)



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்கள் படைப்பில் பெண்கள்

**பிரஸன்னா ராமசாமி**

பெண் எழுத்தாளர்கள் பெண்களின் எந்தெந்தப் பரிமாணங்களைச் சித்தரித்துள்ளனர்? இன்றையப் பெண்களின் சமூக, பொருளாதார, உளவியல் நிலைகளைக் காட்டுகின்றனரா? பெண்களின் எத்தகைய பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளனர்? பழைய மரபுகளையும் வாழ்வின் மதிப்பீடுகளையும் போற்றுகின்றனரா? மாறிவரும் காலத்திற்கு ஏற்ப வாழ்வின் மதிப்பீடுகள் மாறும் நிலையில் யதார்த்த வாழ்வில் பெண்களின் நிலை எப்படியுள்ளது? சமூக நியதிகள் எந்த அளவுக்கு இன்றைய நிலையில் முரண்பட்டுள்ளன? இத்தகைய முரண்பாடுகளால் பெண்கள் எங்கனம் நெருக்கடிக்கு ஆளாக்கப்படுகிறார்கள்? பெண்களின் பிரச்சினைகளை எந்தெந்தக் கோணங்களில் சித்தரித்துள்ளனர்? அவர்கள் படைப்பின் மூலம் இன்றையப் பெண்களின் யதார்த்த நிலையை அறிய முடியுமா? இவையனைத்தையும் ஆய்ந்து மதிப்பீடு செய்யவே ஆய்வாளர்களை அழைத்திருக்கிறது பல்கலைக் கழகம்.

எனக்கு வந்த பல்கலைக் கழகக் கடிதச் செய்தியிது. ஆனால், இங்கு படிக்கப்பட்ட கட்டுரைகள் பெரும்பாலும் இந்தக் குறியெல்லையினின்று சற்று விலகியே அமைந்தன. 'சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்?' ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டவை ஜெயகாந்தன், அசோகமித்திரன், புதுமைப்பித்தன், வண்ணநிலவன் இவர்களின் படைப்புகள் என்றிருந்திருந்தால் நோக்கம் நிறைவேறியிருக்கும்.

இங்கே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட எழுத்தாளர்களில் ஒருவரைத் தவிர மற்றவர்கள் அச்சு இயந்திரத்தின் பசிக்கு மட்டுமே சாட்சியாக நிற்பவர்கள். பெருவாரியான சமூகத்தின் சிந்திக்கும் திறனையே இவர்கள் மழுங்கச் செய்து தாங்கள்தான் எழுத்தாளர்கள் என்ற பிரமையைத் தோற்றுவித்திருக்கும் அளவில், புறக்கணிக்கப்பட முடியாதவர்களாகிப் போனார்கள் போலும். நோய் நாடி, நோய் முதல் நாடி என்பதற்கிணங்க ஒரு கருத்தரங்கம் தேவைப்பட்டிருக்கலாம். இங்கு படிக்கப்பட்ட கட்டுரைகளைக் கேட்ட பின்னர், சமூகத்தின்பாலும் இந்த வாழ்க்கையின்பாலும் தமக்கிருக்கிற கடமையையும் பொறுப்பையும் உணராத இவர்கள், புனைகதை எழுத்தாளர்கள் என்ற அளவில்கூடத் தம் தளத்தை விரிவு படுத்திக்கொள்ளவில்லையே என்று தோன்றுகிறது.

ஒருக்கால், பாரம்பரியமான மரபுவழிச் சிந்தனைகள் இந்தச் சகோதரிகளை வேறு விதமாகச் சிந்திக்க முடியாமல் கட்டிப்போட்டுவிட்டனவோ தெரியவில்லை. அல்லது, சில கட்டுரையாளர்கள் குறிப்பிட்டதுபோல் இந்த மாய, பண உலகத்தில் புகுந்ததும் மழுங்கிப் போனார்களோ? ஆழ்நோக்கும், தரிசனமும் அற்றவர்களாக இருப்பது மட்டுமல்லாமல், ஒரு கட்டுரையாளர் குறித்ததுபோல் திசை திருப்பும் நச்சு எழுத்தைப் படைத்துவிட்டு, அதைப்பற்றிப் பெருமையும் அடைந்து நிற்பதுதான், அதற்கு அங்கீகாரம் பெற்று நிற்பதுதான், நாம் கோபமாக அல்ல, கவலையுடன் பரிசீலிக்க வேண்டிய விஷயம்.

பெண் படைப்பாளிகள் என்ற அளவில், நாடு தழுவிய அளவில், பல்வேறு மொழிகளிலும், பெண் படைப்பாளிகள் வீடு, குடும்பம், குடும்ப உறவுகள் என்ற எல்லைகளைத் தாண்டி, மாறிவரும் இந்த காலகட்டத்தில் பொருளாதார நிர்ப்பந்தத்திற்கும் விஞ்ஞான முன்னேற்றத்திற்கும் ஏற்ப, பாரம்பரிய நியதிகளை மாற்றி எழுதிவரும் நாளில், ஒரு யுக சந்தியில், பெண்கள் அறிவு உணர்வு என்றும், மனம் உடல் என்றும் வெவ்வேறு தளங்களில் எதிர்கொள்கிற பிரச்சினைகளின் பல்வேறு பரிமாணங்களின் விளிம்புகளைத் தொடக்கூடச் சக்தியற்றுப் போனார்களே நமது பெண் படைப்பாளிகள். வீட்டிற்கு வெளியில் சமூக, அரசியல் வாழ்க்கையில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை, கலைத்துறையில் ஈடுபடும் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களை, பெண்களின் பங்குநிலைச் சிக்கல்களை, ஏன், ஒரு பெண் எழுத்தாளருக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகள்பற்றிகூடப் பேசவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ராஜம் கிருஷ்ணனின் நாவல்களை ராமலிங்கம் ஆய்வு செய்தார். சாத்திய அறைக்குள் ஏ.ஸி.யின் உறுமலின் பின்னணியில் கதை எழுதும் மற்ற எழுத்தாளர்களிலிருந்து (ஜோதிர் லதா கிரிஜா விதிவிலக்கு), ஓரளவு வேறுபட்டு, பாட்டாளி வர்க்கத்துப் பெண்களின் பிரச்சினைகள் பற்றியும் பெண்களின் பங்குநிலைச் சிக்கல்கள் பற்றியும், மாறிவரும் சமூக வாழ்வில் மன, உடலியல் ரீதியில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றியும் பெருமளவில் பேசியுள்ள ஒரே பெண் எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன். இவர், தம் படைப்புகளில் பெண் விடுதலையைத் தளை நீக்கம், வெளியேற்றம், முடிவெடுத்தல், இலக்கு நோக்கிய பயணம் என்று வரையறுத்துச் சொல்லியிருப்பதாகக் கட்டுரையாளர் மிக அழகாகப் பிரித்துக் காட்டினார். சமுதாய, அரசியல் அமைப்பில் ஏற்படும் மாறுதலே பிரச்சினைகளைத் தீர்க்கப் பெருமளவில் உதவ முடியும் என்ற முடிவை ஏறக்குறைய எல்லா நாவல்களிலும் இவர் மறைமுகமாகச் சொல்லியிருக்கிறார். ஆனால் இவரும்கூட, குடும்ப அமைப்பை ஆதரித்தே, ஒட்டியே தன் கருத்துக்களை வைக்கிறார். அமைப்பின் சாதக பாதகம் பற்றிக்கூடக் கேள்விகள் ஏதும் வைப்பதில்லை என்பதுபற்றிக் கட்டுரையாளர் குறிப்பிடவில்லை. மேலும் ராஜம் கிருஷ்ணனின் நோக்கம் சரியாக இருந்த போதிலும், இவர் படைக்கும் பெண்கள், தட்டையானவர்களாக, வெறும் கற்பனைப் பாத்திரங்களாகவே தோன்றுகின்றனர். இவர் எழுத்தில் கலையம்சம் மிகவும் குறைவாகவும், சொல்கிற விஷயம் குறித்த ஒரு பூரண ஈடுபாடு உத்வேகம் காணப்படாமலும், ஒரு தகவல் நூல் போலத் தோன்றுவதும் குறையாக எனக்குத் தோன்றியது. சரளமான நடை இருந்தும் இவர் அதிகம் பேர்களைப் போய்ச் சேராததற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

லீலாவதி தவிர பொதுவாகவே எல்லாக் கட்டுரையாளர்களுமே தாம் ஆய்விற்கு எடுத்துக் கொண்ட எழுத்தாளரிடம் மிகுந்த பரிவோடு அவர்களைக் காப்பாற்றத் தமக்கு ஒரு பொறுப்பு இருப்பது போலக் கட்டுரையை எழுதியிருப்பது வியப்பளித்தது. ஆய்வும் விமர்சனமும் கண்ணியமான விதத்தில் அமைந்திருப்பது எத்துணை முக்கியமோ, அதே அளவு நேர்மை பிறழாது குற்றம் குறைகளை எடுத்துச் சொல்வதும் முக்கியம்தான். ஒரு மனிதரையோ, அவர் வாழ்க்கையையோ விமர்சிக்கிறோமா என்ன? சகலருக்கும் பொதுவான, ஒரு காலகட்டத்தின் எழுத்துச் சூழலை அல்லவா ஆராயப் புகுந்தோம்?

மலிவான, நாடகத்தன்மை வாய்ந்த, மேம்போக்கான, வாழ்க்கை பற்றிய விசாரணைகளோ, மதிப்பீடுகளோ இல்லாத மொண்ணைத்தனமானவை அனுராதாவின் பெண் பாத்திரங்கள். கொச்சையான, அவநம்பிக்கை ஊட்டும் எழுத்தாக அனுராதா ரமணனின் எழுத்தை இவர் இனங்கண்டிருப்பதில் வியப்பில்லை. எனினும், இதனை இவர் சொல்லப்புகும்போது, வெளியிட்ட விதத்தில் அவருக்கே சற்றுக் குழப்பம் ஏற்பட்டுப் பின்னர், கேள்வி நேரத்தில் குளறுபடிக்கு வித்திட்டது. ''தறி கெட்டுத் திரியும் பெண்களைப் பொதுமைப்படுத்திக் காட்டி நச்சு இலக்கியம் செய்கிறார்'' என்று சொன்னார். வேசைத்தனமும், ஒழுக்க மீறலும், சரஸமும் இன்னபிற வெறுக்கத்தக்க விஷயங்கள் சமூகத்தில் இருக்கத்தான் செய்கின்றன. ஒரு வேசை வேசையாக இருப்பதற்கும், அடிமை அடிமையாக இருப்பதற்கும், எவ்வளவு வலுவான காரணங்கள் இங்கே நிலைபெற்றுள்ளன என்ற கேள்வியும், எப்படி விமோசனம் என்ற யோசனையும் எழும் அளவில், புழுத்து நாறிப்போய்க் கிடக்கும் இந்த சமுதாயத்தை அதன் சகல பரிமாணங்களோடும் சித்தரிப்பவனே ஒரு கலைஞன். விஷயம் என்னவோ அதேதான். அது எவ்வளவு பொறுப்போடும், கவலையோடும், ஆதுரத்தோடும் பரிசீலிக்கப்படுகிறது என்பதும் இவை எதுவுமே இல்லாமல், தமிழ்ச் சினிமா முதலாளிகள் பலாத்காரக் காட்சியை சித்தரிப்பது போல அனுராதா இவ்விஷயங்களைச் சித்தரித்துவிட்டார் என்பதும்தான் வித்தியாசம்.

லீலாவதியின் கவலையிலும் கோபத்திலும் நான் பங்கேற்கிறேன். அனுராதா ரமணன்களையும் நாம் சேர்த்தே விடுவிப்போம்; மீட்போம்; வெளிக் கொணர்வோம்.

இந்துமதியின் கதைகள் பற்றிய ஆய்வுக்கட்டுரையை, துரை சீனிச்சாமி, பெண் எழுத்தாளர்கள் பற்றிய ஒரு உரத்த பிரகடனத்துடனேயே தொடங்கினார். பிரகடனம் இரவல் என்ற போதிலும்கூட அந்த வரிகளும், பின்னர் அவர் ஒரு பொதுநிலையிலிருந்து சொன்ன கருத்துகளும் அவரது எண்ண நிலைப்பாட்டைப் பிரதிபலித்தன. புனைகதை எழுத்தாளர் என்ற ரீதியில்கூட ஒரு பரந்துபட்ட தளத்தில் வாழ்க்கையை பார்க்கத் தவறுகிற இவரது கதைகள், ஒரு மனமுதிர்ச்சி பெறாத (Adoloscent) மனப்பான்மையுள்ள தன்னிறைவு தேடும் சுய இரக்கப் புலம்பல்கள், பாலுறவு, பாலுறவில் திருப்தியின்மை, இவைகளே இன்றையப் பெண்களின் ஒரே, தலையாய பிரச்சினைகளாக இவரது கதைகளில் காட்டப்படுவதும், அந்தத் திருப்தியின்மை, அல்லது இன்னொரு துணையை மனம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாடுவதற்குச் சொல்லப்படும் .காரணங்கள் மிக நொய்மையான, பொய்யான, எரிச்சலூட்டும் தன்மையனவாய் இருப்பதை இந்துமதியின் கதைகளில் இருந்தே மேற்கோள்கள் காட்டியதன் மூலம் அழகாக வெளிப்படுத்தினார். அத்தோடு சரி. அவரும் சரி, கேள்வி கேட்டவர்களும் சரி, ஏதோ 'தரையில் இறங்கிய விமானம்' தமிழிலக்கியத்துக்குக் கிடைத்த ஒரு பொற் புதையல் என்றும் அதை எழுதும் போது இந்துமதி ரொம்பவே இலக்கிய சுத்தம் உள்ளவராக இருந்தார் என்றும் பின்னர் இந்த மாயப் பண உலகம்தான் அவரைத் திசை திருப்பிவிட்டது என்றும் பேசினார்கள்.

முதலில் நான் சொல்ல விரும்புவது, மேற்குறிப்பிட்ட 'விமானமும்' அவருடைய எல்லாக் 'கதை'களிலிருந்தும் சற்றும் வேறுபடவில்லை என்பது. இரண்டாவதாக, எனக்கு வெகு நாளாக 'இவரால் எழுத முடியும்; ஆனால் எழுதுவதில்லை' என்கிற வாதமும் எனக்குப் புரிபடாமல் இருக்கிறது. பெண்களை மிக அதிக அளவில் கொச்சைப்படுத்தி எழுதும் இன்னொரு எழுத்தாளர் பற்றி—சிறு பத்திரிகைகளில் உள்பட—பிரச்சார அளவிலேயே விமரிசனம் செய்யப்படுகிறது. அப்படி முடிவதற்குத் தோதாக இந்த எழுத்துக்காரர்களுக்கு என்ன மாதிரிப் பேனா, அல்லது சுப்முகூர்த்தம் தேவை? எது தடுக்கிறது? மேற்குறித்த கருத்தை இங்கே வைத்தவர்களுக்கு இதையெல்லாம் பற்றி ஒருவேளை ஏதேனும் தெரியுமானால், தயவு செய்து எனக்குச் சொல்லுங்கள். அறிந்துகொள்ள வெகு நாளாய் ஆவல்.

நல்ல மொழிநடை வாய்க்கப் பெற்றவர் என்றுவேறு பரந்த மனதுடன் இந்துமதியைப் பாராட்டுகிறார் சீனிச்சாமி. தெளிந்த அறிவுள்ள ஒரு படிப்பாளிக்கே இவ்வித மயக்கத்தை ஏற்படுத்தும் இந்த திசை திருப்பும் எழுத்துப்பற்றி அதிகக் கவலையை ஏற்படுத்துகிறது இந்தச் சான்றிதழ். அது குறித்து வன்மையாக வேறுபடுகிறேன் நான். மொழி வளம், நடை, உத்திகள் போன்றவை இந்தக் கருத்தரங்கின் எல்லைக்கு அப்பாற்பட்டவையெனினும் கட்டுரையாளரின் இந்தக் கூற்று என்னை இவை குறித்த விமர்சனத்திற்கு இழுக்கிறது. மன்னிக்கவும்.

இங்கு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டவர்களில் ஓரிருவரைத் தவிர, மற்ற அனைவருமே மொழி வளமில்லாதவர்கள்தான். சுலபமாகப் படிக்கக் கூடியது என்பதால் மட்டுமே ஒரு நடை வளமானதாகுமா? ஒரு உன்னதமான வாசகரைத் தேடும் தாகம் இல்லாவிடினும் மொழியின்பால் மரியாதை கொள்வதேனும் முக்கியமில்லையா? படைப்பாளிக்கு மொழியின்பாலுள்ள பொறுப்பு, உள்ளடக்கத்தின்பாலுள்ள பொறுப்பினின்று சற்றும் குறைவானதாக இருக்கக் கூடாது. மொழியை வளப்படுத்துவதும், செம்மைப் படுத்துவதும், கூர் தீட்டுவதும், வரப்போகும் சந்ததிக்கு வளம் குறையாமல் காப்பாற்றித் தருவதும் படைப்பாளியின் தலையாய பொறுப்பு. சீனிச்சாமிக்கு இந்துமதியின் எழுத்தின்பாலுள்ள நம்பிக்கைகள் ஏதும் எனக்கிருப்பதாக ஒரு மரியாதையின் பொருட்டுக்கூட ஒப்புக்கொள்ள இயலாது.

உஷா சுப்பிரமணியன் நாவல்கள்பற்றி மீனாட்சி முருகரத்தினம் ஆய்வுக் கட்டுரை வாசித்தார். இவருக்கு ஆய்விற்குக் கிடைத்த புதினங்களின் எண்ணிக்கையை வைத்துப் பார்க்கும் போது கட்டுரை மிக விரிவாகவே இருந்தது.

''ஓரினத்தின் வாழ்க்கைச் சிக்கல்களை அதே இனத்தைச் சேர்ந்தோர் புரிந்துகொள்வது எளிதில்லையா?'' என்று ஒரு முடிவை வைக்கிறார் கட்டுரையாளர். இது சாதாரண மனிதர்களுக்குப் பொருந்தலாம்; கலைஞனுக்கல்ல. மானுடம் தழுவிய எழுத்தில் வர்க்க பேதம் வர வாய்ப்பில்லை. சொல்லப்போனால், 'தண்ணீர்'ன் ஜமுனாவையும், 'கோகிலா என்ன செய்து விட்டாளி'ன் கோகிலாவையும், 'சாப விமோசனத்தின்' அகலிகையையும் படைத்தவர்கள் ஆண் எழுத்தாளர்கள்தான்.

உஷாவின் மானுடப் பார்வை, சமநோக்கு பற்றியெல்லாம் அவரது நூல்களில் இருந்தே மேற்கோள் காட்டிச் சொன்ன விதம் சரியாக இருந்தது. ''இவரது படைப்புகள் தனி மனிதச் சிக்கல்களைப் பேசாமல் குடும்ப அமைப்பில் உள்ள சிக்கல்களையே பேசுவது நடைமுறைப் பயன்பாடு உள்ளதாய் அமைகிறது'' என்று கட்டுரையாளர் பாராட்டுகிறார். அறிவு, உணர்வு என்ற இரு தளங்களிலிருந்து பிரச்சினைகளை அணுகியிருப்பதாகச் சொல்லப்படும் இவரும், பெண்களின் வாழ்க்கையில் நேரும் சிக்கல்களுக்கு, ஒடுக்கு முறைக்கு, ஆணாதிக்கத்திற்கு வழி கோலுவதாக இருக்கும் இக்குடும்ப அமைப்பு, இன்னமும் கூட, நிலப்பிரபுத்துவ காலத்தில் இருந்தது போலவே இருப்பதையும், இதற்குப் பொருள்முதல் சமுதாயமும் அரசியல் அமைப்பும் எந்த அளவு பொறுப்பேற்கிறது என்பதையும் விரிவான பார்வையுடன் யோசிக்கவில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. இன்றைய உரையில் நான் மீண்டும் மீண்டும் 'குடும்ப அமைப்புப்' பற்றி அதிகம் பேசுவதாக—இந்தத் தொடர் திரும்பத் திரும்ப வருவதாகக்—கேட்பவர்களுக்குத் தோன்றலாம். பெண்ணின் அத்தனை இன்னல்களுக்கும் ஆதாரமாக, பெண் அடிமைத்தனத்திற்கு உறுதுணையாக இந்தக் 'குடும்ப அமைப்பு' மிக வலுவாக நிலைபெற்றுள்ளதே என்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவலையின் காரணம். பெண்ணின் மனச்சார்பு, வாழ்க்கை பற்றிய மதிப்பீடுகள் யாவும் இதனைச் சுற்றியே, இதனுடன் பிணைந்தே எழும்படி சூழல் நிர்ப்பந்திக்கிறது. இது, அவள் ஒரு முழுமையான ஆளுமையும் வீச்சும் உள்ள மனுஷியாக வளர்வதைத் தடை செய்கிறது.

கோமகளின் புதினங்களை சேதுமணி, மிகச்சிறந்த முறையில், ஓரளவு கருத்தரங்கின் நோக்கம் நிறைவேறும் வகையில் ஆய்வு செய்து கட்டுரை அளித்தார். ஆனால், இவரும், ரொம்பவே பெரிய மனதுடன், ''கோமகள் இன்னும் சிறப்பாக எழுத முடியும், ஆனால் எழுதுவதில்லை'' என்று நம்பிக்கையையும் குறைபாட்டையும் தெரிவித்தார். மரபுவழி மனப்பான்மைகளில் ஊறிப்போன கோமகளின் பாத்திரங்களை இவர் மேற்கோள் காட்டியபோது, ''இது தான் ஐயா பொன்னகரம்'' என்று புதுமைப்பித்தன் வயிறெரியக் குமுறுவாரே, அந்த தொனியைக் கண்டேன். ஏறக்குறைய சேதுமணியின் எல்லாக் கருத்துக்களும் எனக்கு உடன்பாடானவையே. ஆனால், இவரும்கூட, பெண் எழுத்தாளர்களின் ஆளுமை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் சுருங்கிக் கிடப்பதன் காரணத்தை விசாரணை செய்யவில்லை.

சிவசங்கரியின் எழுத்துக் குறித்து நடராசன் வாசித்த ஆய்வுக் கட்டுரை மிக மேலோட்டமாக, எழுத்தாளரிடம் மிகுந்த பரிவுடன் எழுதப்பட்டதோ என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கும் விதத்தில் அமைந்திருந்தது. பெண்ணை ஒரு பூரண மனுஷியாகப் பார்க்கத் தெரியாத ஒரு குறை சிவசங்கரிக்கும் உண்டு. இதனை, அவரது கதைச் சம்பவங்கள் மூலமே செம்மையாக எடுத்துக்காட்டினார் நடராசன். தொழில் செய்பவராகக் காட்டப்பட்ட போதிலும், தொழில், அது சார்ந்த வாழ்க்கை, அதில் எதிர்கொள்ளும் நிலைகள் பற்றிய எந்தக் குறிப்பும் இன்றி, இவரது பெண்கள் வெறும் குடும்பத்தலைவிகளாகவே சித்தரிக்கப்படுவர். கனவு, இவர் நாவல்களில் சீராக விநியோகிக்கப்படும். பெண் மரபு சார்ந்த வாழ்வியல் சிக்கல்களில் இருந்து வெளிவருவது பற்றியெல்லாம் இவர் யோசிப்பதில்லை. அன்றாட வாழ்க்கையேகூட மரபு ரீதியான சட்டதிட்டத்துடன் இவரது பெண் பாத்திரங்களுக்கு வரையறுக்கப்படும். 'பொருத்தமாக அலங்கரித்துக் கொள்வது; புதுப்புது சமையல் வகைகளை சமைத்துப் பரிமாறிப் பாராட்டுப் பெறுவது; வீடு, வாசலை அழகுணர்வுடன் நறுவிசாக வைத்துக் கொள்வது'—இவையே இவரது உன்னதங்கள்.

சமீப காலத்தில் இவர் எழுதிய, 'அது சரி அப்புறம்?' என்ற நாவல், சொல்லப்பட்ட விதத்தில் பழுதுபட்டிருந்தாலும் பொருந்தாத மண உறவிலிருந்து ஒரு பெண் வெளியேறும் விதத்தைச் சொல்வதால் இந்த ஆய்வுக் கட்டுரைக்குத் தொடர்புள்ளதாய் அமைகிறது. கல்வியறிவில்லாத பெண் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை 'தான், தன் சுகம்' என்ற நாவல் பேசுகிறது. இவை இரண்டையும் கட்டுரையாளர் புறக்கணித்ததன் காரணம் புரியவில்லை. நூல்களைத் தேர்வு செய்த விதத்தில் அசட்டை தெரிகிறது.

வாஸந்தியின் நாவல்கள் பற்றிய செண்பகக்குழல்வாய் மொழியின் ஆய்வுக் கட்டுரை, கிடைத்த எல்லைக்குள், கொடுத்த குறிக்கோளுக்கு இசைவாகச் செய்யப்பட்டிருந்தது. நிறைய அறிவுள்ளவர்களாய், சிந்திக்கிறவர்களாய்ப் படைத்திருக்கிற அளவுக்குத் தனித்தியங்கும் திறனுள்ளவர்களாய்ப் படைக்கவில்லை வாஸந்தி என்று சொல்லும்போது கட்டுரையாளரின் தெளிவு வெளிப்படையாகத் தெரிகிறது. வாஸந்தியின் 'நிழல்கள்' நாவலைப்பற்றிச் சொல்லி, கட்டுரையாளர் வாஸந்தியின் தைரியமான எழுத்துப்பற்றிப் புகழ்ந்து பேசுகிறார். 'ஒரு சங்கமத்தைத் தேடி' தாராவைப்பற்றிக் கட்டுரையாளர் வியந்து சொல்கிறார். எல்லாவற்றையும்விட உண்மையல்லவா முக்கியமானது? பொய்மையின் அடிப்படையில் எப்படி ஒரு வாழ்க்கை சிறக்க முடியும்? கட்டுரையாளருக்கு நிறையக் கோபம் வருகிறது. நல்ல, சத்தான, ஆரோக்கியமான கோபம்தான். ஆனால் இந்தக் கோபத்தை, கேட்கிறவர்கள் மனதில் ஏற்படுத்தும்படியாக வார்த்தைகள் விழ வேண்டுமே தவிர, எனக்குக் கோபம் என்று நாம் வெளிப்படையாகச் சொன்னால் எதிர்மறையான விளைவுகள்தான் கிட்டும். வாழ்க்கை அனுபவமும், முதிர்ச்சியும் இவருக்கு இன்னும் நிறைய விஷயங்களைக் கற்றுத் தரும். கட்டுரை எழுதப்பட்டிருக்கும் விதம் மிக நேர்த்தியாக அமைந்துள்ளது.

லக்ஷ்மியின் கதைகள்பற்றி ஆய்வு செய்த செண்பகம் ராமசுவாமி மிக உழைத்துச் செய்திருக்கிறார். இவர் விமர்சித்த விதம் மிக நாகரீகமான முறையில் அமைந்திருந்தது. லக்ஷ்மியின் வெற்றி ரகசியத்துக்கான வாய்ப்பாட்டைச் சொல்லிவிட்டார். மற்றபடி, குடும்ப அமைப்பு, அது சார்ந்த வாழ்க்கை இவை பற்றிய மிக மேம்போக்கான விவரங்களடங்கிய இவரது கதைகள்பற்றி அதிகம் பேச ஏதுமில்லை. லக்ஷ்மியின் கதைகள் தீமையற்றவை என்று ஆணித்தரமாகக் கூறுகிறார் கட்டுரையாளர். எது தீமை? எது தீமையில்லை? உண்மை, நடைமுறைப் பிரச்சினைகளை மறைத்து, பட்டு, நைலக்ஸ், தீமிதி, பூஜை, பணிவிடை, குடும்பம், கணவன் என்ற வட்டத்துக்குள்தான் வாழ்க்கையே என்ற பிற்போக்கான கருத்தை, எளிய, அதிகப் படிப்பறிவற்ற பெண்களிடம் விற்பது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தீமைதானே? கதைப் பின்னலில் முன்னேற்றமான கருத்துக்களை நோக்கமாகக் கொள்ளாதவராயினும் இவையெல்லாம்பற்றி இவர் அறியாதவரல்ல என்று சான்றிதழ் தருகிறார். லக்ஷ்மி இங்கு அறியப்பட வேண்டியது அவரது எழுத்துக்கள் மூலம்தான். மிகப் பெரிய நிறுவனப் பரிசு ஒன்றைப் பெற்ற 'ஒரு காவிரியைப் போல' நாவலில் உள்ள, பெண் விடுதலைக்கு எதிரான கருத்துக்களை இன்னும் சற்று விவரமாகப் பேசியிருக்கலாம்.

ஜோதிர்லதா கிரிஜாவின் பெண் பாத்திரங்கள்பற்றி உள்ளும் புறமும் அலசி மிகுந்த உழைப்புடன் லக்ஷ்மி கட்டுரை செய்தார். மிக விவரமான தகவல்கள், மேற்கோள்களுடன் சொல்லப்பட்டன. பாலுறவு பற்றிய பிரக்ஞை இந்த எழுத்தில் அதீதமாகக் காணப்படுவதாக ஒரு தகவலைச் சொன்னார். இங்கே, ஒரு இயல்பான, நிறைவான பாலுறவு கிடைப்பதில் பெண்களுக்கு மிகப் பெரிய பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன. இதனால் ஒருவேளை அது குறித்து கிரிஜா யோசித்திருக்கலாம். மனிதத்தின் இரு கூறுகளும் ஒன்றை ஒன்று அவநம்பிக்கையுடன் நோக்கும் நிலை கிரிஜாவின் நாவல்களில் காணப்படும் அம்சம். இதுபற்றிக் கட்டுரையாளர் குறிப்பாய்த் தெரிவித்தார். பரஸ்பர அவநம்பிக்கை, சீர்கெட்டுக் கிடக்கும் ஒரு சமூகத்தைச் செப்பனிட உதவாது.

முடிவாக, இந்தக் கட்டுரைகளையும், கேள்வி கலந்துரையாடல்களையும் கேட்கும்போது, ஏதோ ஒரு பெண் விடுதலை இயக்கக் கூட்டத்திற்கு வந்துவிட்டது போலத்தான் உணர்வதாக என்னிடம் ஒரு ஆண் பார்வையாளர் கூறினார். பெண் உரிமையும், விடுதலையும் ஆண்களுக்கு அந்நியமான விஷயமில்லை. சுதந்திரமில்லாத பெண், பொறுப்புடன் இயங்க முடியாது. அடிமைத்தனம் வளர்ச்சிக்கு வழிகோலாது. அடிமைகள் மட்டுமில்லை, அடிமைகளை வைத்துப் பிழைக்கிற, சமத்துவத்தின் மேன்மை அறியாத முதலாளிகளும் பாவப்பட்ட ஜீவன்கள்தாம். பெண்ணின் விடுதலை, ஆணின் விடுதலையையும் உள்ளடக்கியதுதான். மானுடம் மட்டுமே பேணுகின்ற ஒரு உன்னத சமுதாயம்தான் இங்கே பேசியவர்களின் கனவாக இருக்க முடியும். நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகக் கூறுபட்டுப்போய் வேறுபாடுகளையே ஆதார சுருதியாகக் கொண்ட ஒரு சமூகத்தில் வளர்ந்தவர்கள், வாழ்பவர்கள், இதை மெல்லத்தான் புரிந்துகொள்ள முடியும். புரியவைக்க இம்மாதிரி கருத்தரங்கங்கள் பெருமளவில் உதவ முடியும்.

**அன்னை தெரஸா மகளிர்**
**பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்**
**கருத்தரங்கு (1986)**

---

செவ்வாய்க் கிழமை மதியத் தூக்கம்

அந்தப் பெண்ணைப் பார்க்கமலேயே 'கொஞ்சம் பொறு' என்ருர்.

அவருடைய சகோதரி அறைக்கோடிக் கதவு வழியாகத் தோன்றினுள். தன்னுடைய, இரவுச் சட்டையின் மேல் ஒரு கறுப்பு நிற சிறுசட்டை அணிந்திருந்தாள் ; தலைமுடி தோளின் மேல் இறங்கியிருந்தது. அவள் மதகுருவை அமைதியாகப் பார்த்தாள்.

'அங்கே என்ன ?' என்று கேட்டார்.

'மக்கள் பார்த்து விட்டனர்' என்று அவருடைய சகோதரி முணுமுணுந்தாள்.

'உள் முற்றத்திற்குச் செல்லும் கதவு வழியாக நீ போவது நல்லது என்ருர் மதகுரு.

'அங்கும் அதேதான். எல்லாரும் ஜன்னல்களின் பக்கம் உள்ளனர்' என்ருள் அவர் சகோதரி.

அதுவரை அந்தப்பெண் எதுவும் புரிந்து கொண்ட மாதிரி தோன்றவில்லை. கம்பிவலை வழியாக தெருவைப் பார்க்க அவள் முயற்சித்தாள். பின் சிறுமியிடமிருந்து மலர்க்கொத்தை எடுத்துக் கொண்டு கதவை நோக்கி நகர ஆரம்பித்தாள். சிறுமி அவளைத் தொடர்ந்தாள்.

'சூரியன் மறையும் வரை காத்திரு' என்று மதகுரு சொன்னுர்.

'நீ உருகிவிடுவாய் கொஞ்சம் பொறு. நான் உனக்கு ஒரு குடை தருகிறேன்' என்று அறையின் பின்பக்க மிருந்து அசையாமல் நின்றவண்ணம் அவரின் சகோதரி கூறினுள்.

'நன்றி இதில் எங்களுக்கொன்றும் சிரமமில்லை' என்ருள் அப்பெண். சிறுமியின் கையைப் பிடித்தவண்ணம் அவள் தெருவிற்குள் சென்ருள்.

மிட்சி புக்ஸ்

ஆங்கிலத்தில் : J. S. பொன்ஸ்டைன்
தமிழில் : ஆர். சிவகுமார்

மே - யூன் மாதத் "தூண்டில்" ...
* ஆச்சியும், குளப்படிப் பெடியளும்.
** சரிநிகருடன் ஓர் நேர்காணல்.
*** கொலை அங்கே, குரல் இங்கே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்